94/2001

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 7, 2001

தொகுதி 88, எண் 2

V211,31f00
P00.88.2
92770

வெளியீடு 20-11-2000 Issued 20-11-2000

821

94/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மார்ச் 7, 2000 – தொகுதி 88 – எண் 2**

**Tuesday the 7th march, 2000 – Volume 88 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

94-2002

222770

D

V21',31'f00
f00.88.2

## 7-3-2000

### உள்ளடக்கம்

*பக்கங்கள்*


| | |
|---|---|
| **1. வினாக்கள் - விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 137 - 181 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| பொது விநியோக அரிசி கடத்தல் | 182 - 224 |
| திரு. மு. அப்பாவு | 182 - 192 |
| திரு. ஜி. பழனிசாமி | 193 - 194 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 194 - 200 |
| திரு. ஐ. கணேசன் | 200 - 202 |
| * திரு. ஜி. நிஜாமுதீன் | 202 |
| * திரு. லா. சந்தானம் | 203 - 204 |
| திரு. டி. மணி | 204 - 205 |
| திரு. பி. வெங்கடசாமி | 206 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி | 206 - 208, 224 |
| திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் | 209 - 210 |
| * மாண்புமிகு திரு. கா.நா. நேரு | 210 - 220 |

பக்கங்கள்

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி 225-273
* திரு. ரா. சேதுநாதன் 225-231
டாக்டர் தே. குமாரதாஸ் 231-244,253
* திரு. நா. பெரியசாமி 245-250
திரு. இரா. பொன்னார்டு 250-256
திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் 256-258,261-265
திரு. ரா. ஈஸ்வரன் 265-273
4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 274-275

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 24, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 மார்ச் 7, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**:

"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று."

உள்ளத்தால் ஒன்றுபடாதவர்கள் கூடிவாழ்வது என்பது, ஒரு சிறிய குடிலுக்குள் பாம்புடன் இருப்பது போன்று ஒவ்வொரு நொடியும் அச்சம் தருவதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினாக்கள் - விடைகள். வினா எண் 41, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**41—**

### கூலிக் கொலையாளிகள்

***23155—திரு. கே. சுப்பராயன்**:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூலிக் கொலையாளிகளால் செய்யப்பட்ட கொலைச் சம்பவம் 1998-ல் எத்தனை நடைபெற்றது?

(ஆ) அதில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனரா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரக் காவல் நிலைய எல்லைக்குள் 9-7-1998 அன்று இதுபோன்ற ஒரேயொரு கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

(ஆ) மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களில் கூலிக்குக் கொலை செய்கின்ற ஒரு முறை அன்றாட நடவடிக்கையாக மாறி வருவதை நாம் பத்திரிகைச் செய்திகளிலே பார்க்கிறோம். அவற்றினுடைய தீய பிரதிபலிப்பாக அல்லது அதனுடைய ஊடுருவலாகத் தமிழ்நாட்டிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற பதிலில், ஒரேயொரு சம்பவம் கடலூரில் மட்டும் நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். காவல் துறையினுடைய உளவுக் கண்களுக்குப் படாமலேயே சில கொலைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன். கோவை மாவட்டத்திலே ஒரு சில பகுதிகளில் சமீபத்திலே கூட சில கொலைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தக் கொலைச் சம்பவங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு, அதற்காகக் கொலை செய்கிறவர்களால்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்ற பொதுஜனக் கருத்து உருவாகியிருக்கிறது. எனவே நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, 1998 ஆம் ஆண்டு என்று மட்டுமல்லாமல், பொதுவாக, தமிழ்நாட்டில், இத்தகைய சம்பவங்கள் நடந்திருக்குமானால், இவை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்படவேண்டிய, சமூக விஷ விளைவுகளாகும். இவை குறித்து அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கேள்வி, '1998-ல்' என்று இருந்த காரணத்தால், 1998-ல் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே நான் எடுத்துச் சொன்னேன். இதுபோன்ற சம்பவங்கள் வேறு ஆண்டுகளில் நடைபெற்றிருக்கலாம், நடைபெற்றிருக்கவும் கூடும், நடைபெற்றும் இருக்கிறது. அதற்கெல்லாம் உடனடியாக போலீஸ் தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு,





தொடர்புடையவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றப் பத்திரிகைகளும் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பிட்ட இந்தக் கேள்வி-பதில் சம்பந்தமான விஷயங்கள், நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால், இதற்கு மேல் இதைப்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, கூலிக்குக் கொலை செய்கின்ற முறையை ஆயுதமாகப் பயன்படுத்துகின்ற சக்திகள், சமூக வாழ்வில் எத்தகைய சக்திகளாக இருக்கின்றன என்பது பற்றி அரசு ஆராய்ந்திருக்கிறதா? கூலிக்குக் கொலை செய்வதற்கு கூலிக் கொலைகாரர்களைத் தங்களுடைய கருவியாகப் பயன்படுத்துகிறவர்கள் சமூக விரோதிகள், கள்ளச்சாராயப் பேர்வழிகள், வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்களை ஊடுருவிக் கண்டறிந்து அவர்களை முளையிலேயே கொளுத்துவதற்குரிய, முளையிலேயே, வேரோடு எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க பொருத்தமான உத்திகளை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதே மாமன்றத்தில், இந்த அரசு அத்தகையோர் மீது எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள்—எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் எல்லாம்கூட—பேசியிருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அப்படிப்பட்ட, பல பேர் சுட்டுக் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்றே நான் நம்புகின்றேன். எனவே, கூலிக்குக் கொலை செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் விட்டுவைக்கப்படமாட்டார்கள்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எங்கள் பகுதியிலே இதுபோல கூலிக்காகக் கொலை செய்யக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. முதலமைச்சர்கூட அதிலே சரியாக அவர்களது கவனத்தைச் செலுத்தி நல்லமுறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் குற்றவாளிகள் யாரென்று தெரியாத நிலையிருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் கொலையாளிகள் பணத்திற்காக வெளியூரிலிருந்து வந்து இங்கே கொலையைச் செய்து விட்டு தப்பித்துச் சென்று

கொண்டிருக்கிறார்கள். அதுபோலத், தொடராமல், அந்தக் கொலையாளிகளை உடனடியாகப் பிடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நண்பர் இராமசாமி அவர்களும் முன்பு அல்ல, அண்மையிலேதான் என்னைச் சந்தித்து இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒரு தனி போலீஸ் படையே அந்த வட்டாரத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கூலிக்குக் கொலை செய்கிறவர்களும் இருக்கிறார்கள்; கொலை செய்துவிட்டுக் கூலி பெறுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் இரண்டு பேருமே ஆபத்தானவர்கள். குறிப்பாக இப்போது தமிழகத்திலே எங்களைப் போன்றிருக்கிற அரசியல் கட்சித் தலைவர்களுக்குக்கூட சங்கத்தின் பெயரை வைத்துக்கொண்டு, சில பேர் தொலைபேசியிலும் கடிதங்களின் வாயிலாகவும் உருட்டல், மிரட்டல்களையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். இது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் நாங்கள் முறைப்படி மனு செய்திருக்கிறோம். ஆகவே, அத்தகையவர்களையும் கண்காணிக்க வேண்டும். அவர்கள் ஆயுதங்களோடு, குறிப்பாக வெடிகுண்டுகளோடு கூட்டங்களை நடத்துகிறார்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமைகூட இந்தச் சென்னை மாநகரத்திலே, 'இவரைக் கொன்று விடுவோம், அவரைத் தீர்த்து விடுவோம், இவரைத் தீர்த்து விடுவோம்' என்று வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்கள். உங்களுடைய உளவுத் துறைகூட S.B.,C.I.D. அதைக் குறிப்பு எடுத்து தங்களின் மேலான பார்வைக்கு அனுப்பி இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆக, இத்தகைய சமூக விரோத சக்திகளையும், சமூகத்திலே அமைதியின்மையை விளைவிக்க அரசியல் கட்சித் தலைவர்களை மிரட்டுகின்றவர்களையும் கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தேர்தலில் நிற்கிற சில கட்சிகள் கூட— நான் சில பேச்சுகளைப் படித்துப் பார்த்திருக்கிறேன். எனக்குக்கூட அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றன— ஆயுதங்களை எடுப்போம் என்று சொல்கின்ற அளவுக்குத் தங்களுடைய கோஷங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பிரச்சினைகளையும் ஆய்ந்து ஆதாரங்கள் இருக்குமேயானால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுத்து அடக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**42—**

### நரபலிக் கொலைகள்

***23177—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நரபலிக் கொலைகள் நடந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட விடையினை இங்கே அளிக்க விரும்புகின்றேன்.

(அ) ஆம். நடந்துள்ளது.

(ஆ) 12-1-1999 அன்று ஒரு நரபலிச் சம்பவமும், 21-5-1993 அன்று ஒரு நரபலிச் சம்பவமும் நடந்துள்ளன. தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் நடைபெற்ற நரபலிச் சம்பவத்தையொட்டி, திருவைகுண்டம் காவல் நிலையத்தில் குற்ற எண் 21/99-ல் இந்திய தண்டனைச் சட்டம்—ஐ.பி.சி.—சட்டப் பிரிவு 302-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு 9-2-1999-ல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது.

[2000 மார்ச் 7

கோவை மாவட்டம் ஆனைமலை காவல் நிலைய எல்லையில் சேத்துமடையில் டீ கடை நடத்தி வந்த முகம்மது குட்டி என்பவர் கடந்த 21-5-1993 அன்று புதையலுக்கு ஆசைப்பட்டு, தனது மகள் உம்மு குட்டி என்பவரைக் கழுத்தை அறுத்து நரபலி கொடுத்துள்ளார். பின்னர் தனது குழந்தை காணாமல் போய்விட்டதாகப் புகார் கொடுத்து, புலன் விசாரணையிலே நரபலி கொடுத்த விவரம் தெரிந்து, வழக்கு, கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு, எதிரி கைது செய்யப்பட்டு, விசாரணை நடந்து, எதிரிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நரபலிச் சம்பவம் என்பது கோழிகளை, ஆடுகளைத் தெய்வங்களுக்குப் பலி கொடுப்பதன் மூலம் தங்கள் மீதும், தங்கள் குடும்பத்தின் மீதும் படிந்திருக்கின்ற தோஷங்களை, துயரங்களைக் கழித்து விடலாம் என்கின்ற மூட நம்பிக்கையின் அடிப்படையில்தான் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றினுடைய ஓர் உச்சகட்ட வடிவமாகத்தான் மனிதனை மனிதன் பலியிட்டு, மனிதன் ஓர் அமானுஷ்ய தன்மையைப் பெறுவதற்கான முயற்சியாக நடைபெறுகிறது. எனவே, இவற்றிற்குக் காரணமாக இருப்பதே மத ரீதியாகப் பல நூற்றாண்டுகளாகக் கற்பிக்கப்பட்டு வந்திருக்கிற காட்டுமிராண்டித்தனமான, பிசாசுத்தனமான மூட நம்பிக்கைகள்தான். எனவே, இந்த மாநில அரசு, பெரியார் வழி வந்த அரசு என்கிற முறையிலும், மாண்புமிகு முதலமைச்சர் பகுத்தறிவில் ஆழ்ந்த அக்கறை உள்ளவர் என்கிற முறையிலேயும் இதுகுறித்து பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதற்குரிய ஒரு துறையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் உள்ளபடியே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல் கட்சித் தலைவர்கள் திரு. சுப்பராயன் உட்பட பத்திரிகைகளிலே பல நாட்களுக்கு முன்பு வந்த செய்திகளைக்கூடச் சரியாகப் படிக்காமல் புதிதாகப் பிரச்சினைகளைக் கிளப்புவது எனக்கு வியப்பாக இருக்கிறது. சமூக சீர்திருத்தத் துறை என்று ஒரு துறையை ஏற்படுத்த வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே சொல்லப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, தனியாக ஒரு துறை இப்போது



2000 மார்ச் 7]

அமைக்கப்பட்டு, பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது அத்துறையினுடைய முக்கியமான கடமைகளில் ஒன்று என்ற அளவிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பணிகள் இப்போது ஆரம்பமாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிச் சாமியார்கள் பெண்களுக்குக் குழந்தை வரம் கொடுக்கிறேன் என்று சொல்லி, பெண்களை வசியப்படுத்திக் கற்பழித்துவிடுகிறார்கள். அதனால் இந்தப் போலிச் சாமியார்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என்று பார்த்து, கணக்கெடுத்து, அவர்களை ஒழிப்பதற்கு டி.வி. சினிமா போன்றவற்றில் இந்தப் போலிச் சாமியார்களைப் பற்றி ஒரு செய்திச் சுருள், தமிழ்நாடு அரசு சார்பாக செய்திச் சுருள் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே 'போலிச் சாமியார்கள்' என்ற தலைப்பிலே ஒரு படம் எடுக்கலாம். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமூக சீர்திருத்தத் துறை என்பதை நான் அறியாமல் சொல்லவில்லை. சமூக சீர்திருத்தத் துறையில் இப்படி ஒரு பதில் வர வேண்டும் என்பதும், அந்தத் துறையில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யப்படும் என்றால்—பிரச்சாரங்கள் பலவகைப்பட்டவை, பல்வேறு வழிமுறைகளைக் கொண்டவை. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, அந்தச் சமூக சீர்திருத்தத் துறையின் மூலம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்கின்றபோது—அவை mass media-க்கள் மூலம் மக்களைச் சென்றடைவதற்குப் பொருத்தமான முறையில் செய்ய வேண்டும். டி.வி.—அதாவது தொலைக்காட்சி, சின்னத் திரைகள்— மற்றும் பெரிய வண்ணத் திரைகளிலேயும் இந்த விஷயங்களைக் கொண்டு வருவதற்கு சின்னச் சின்ன படங்களாகத் தயாரிப்பதோடு—இழவில் அழும் பெண் கூட இசையோடு அழுவது கண்கூடு என்றுதான் தமிழ்நாட்டில் வழக்குச் சொல்கிறது. அப்படி—கலை இலக்கிய, இசை வடிவங்களில் இத்தகைய பகுத்தறிவுப் பிரச்சாரங்களைப் பொருத்தமான முறையில் உருவாக்க, பொருத்தமான கலைஞர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து அந்த வடிவங்களை உருவாக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 7

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்களுடைய இந்த அரிய யோசனை இந்தத் துறையின் மூலமாக, இப்போது தொடங்கப்பட்டுள்ள இந்தப் புதிய துறையின் மூலமாக நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்திலே நீண்ட காலமாகத் தந்தை பெரியார் போன்றவர்கள் செய்த பிரச்சாரத்திற்குப் பிறகும், இன்னமும்கூட பலமுறை ஏமாற்றம் என்கிற அளவுக்குத் தள்ளப்பட்டு, ஏமாறிய மக்கள் தொடர்ந்து அவர்களை, அதே சாமியார்களை நம்பிக்கொண்டு போவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. அதைத் தடுப்பதற்கு நாம் அனைவரும் சேர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**43—**

### கிளை நூலகம்

***9227—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரார—

பாபநாசம் தொகுதி, ஆதனூர் ஊராட்சியில் பகுதிநேர நூலகத்தைக் கிளை நூலகமாக மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படி 5000-க்குமேல் மக்கள்தொகை கொண்ட ஊர்களில் ஒரு கிளை நூலகமும், 1000-க்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட ஊர்களில் பகுதிநேர/ ஊர்ப்புற நூலகங்களும் அமைக்க வழிவகை உள்ளது. தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதி, ஆதனூர் ஊராட்சியின் மக்கள் தொகை 1578 ஆகும். எனவே, இவ்வூரில் கிளை நூலகம் திறப்பதற்குத் தற்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் தொகுதி, ஆதனூர் ஊராட்சியில் நீண்ட நாட்களாகப் பகுதிநேர நூலகம் இருந்து வருகிறது. அந்தப் பகுதிநேர



2000 மார்ச் 7]

நூலகத்திற்கு வேண்டிய உறுப்பினர்களைவிட அதிகமான உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறோம். அத்தோடு அவர்கள் சொல்கின்ற அளவுக்கு உறுப்பினர்களும், அதே நேரத்திலே 1000 ரூபாய் அளவுக்குச் சந்தா செலுத்தும் புரவலர் உறுப்பினர்களாகவும் நான்கு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அதைக் கிளை நூலகமாக மாற்ற முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைப்படி இருக்க வேண்டிய மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகைதான் அந்த ஊரில் இருக்கிறது. பகுதிநேர நூலகத்தை மேலும் செம்மையாக நடத்துவதற்கோ மேலும் தகுந்த அளவிற்கு அதைப் பராமரிப்பதற்கோ வழிவகை செய்வது பற்றிக் கருதலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**44—**

### படுக்கை வசதி

***16903—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, ஆயக்குடி, அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியினை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆயக்குடி மருத்துவமனையில் படுக்கை வசதியினை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மார்ச் 7

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் ஆயக்குடி அரசு மருத்துவமனை சுமார் 12 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. ஆயக்குடியைச் சுற்றி பல்வேறு சிறு சிறு கிராமங்கள் இருக்கின்றன. மக்கள் தொகையும் அதிகமாக இருக்கிறது. இங்குள்ள நோயாளிகள் கடையநல்லூர் மற்றும் தென்காசி அரசு மருத்துவமனைகளுக்குச் செல்வது கடினமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி ஆயக்குடி அரசு மருத்துவமனையில் மேலும் அதிக படுக்கை வசதிகள் ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி, ஆயக்குடி மருத்துவமனையினுடைய படுக்கை வசதி 12 ஆகும். இப்போது அங்கே வருகின்ற உள்நோயாளிகளுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில் படுக்கைகளினுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லையென்று இலாகா கருதுகிறது. இருந்தாலும், உள்நோயாளிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய அளவில் அங்கே நோயாளிகள் வருவார்களானால் அதுகுறித்துப் பகுதி 2 திட்டத்தின்கீழ் வருங்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடையநல்லூரா? (குறுக்கீடு) மற்ற ஊர் என்றால் அனுமதிக்க முடியாது.

வினா எண் 45, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**45—**

**போலி டாக்டர்கள்**

***22563—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 7]

(அ) சென்னையில் பிடிபட்ட போலி டாக்டர்கள் மீது அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை வழங்க விரும்புகிறேன்.

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் இதுநாள் வரையில் 15 பேர் போலி டாக்டர்களாக இருந்து கொண்டு மருத்துவம் பார்த்ததாகப் புகார் செய்யப்பட்டதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, உரிய வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலும் இதுபோன்ற மருத்துவப் படிப்பு படிக்காமலும், சித்த மருத்துவம் படிக்காமலும் பொதுமக்களுக்கு டாக்டர்கள் என்ற போர்வையிலே போலி டாக்டர்கள் சிகிச்சை செய்து வருகிறார்கள். அவர்களையெல்லாம் கண்டறிந்து அரசு அவர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி டாக்டர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தவுடனேதான் நம்முடைய அரசு இதுவரையிலும் 15 பேரைக் கைது செய்திருக்கிறது. இருந்தாலும், அந்தப் போலி டாக்டர்கள் மிகவும் சாமர்த்தியமாகத் தாங்கள் இந்திய அலோபதி மருந்துகள் குறித்து பயிற்சி அறிவு பெற்றதாக, practical knowledge உள்ளதாக நீதிமன்றத்திற்குச் சென்று, சாதகமாக ஓர் ஆணையைப் பெற்றார்கள். நம்முடைய தமிழக அரசு உடனடியாக அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே அப்பீல் செய்து இப்படிப்பட்ட போலி டாக்டர்களை எக்காரணத்தைக் கொண்டும் உயர் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது என்று சொன்னதின் பேரில், முழு விசாரணை நடத்தி, உயர் நீதிமன்றம் 21-1-2000 அன்று வழங்கிய தீர்ப்பில் தமிழ்நாடு அரசு மருத்துவப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்து கொண்டவர்கள் மட்டும்தான் இனிமேல் தொழில் செய்ய முடியும் என்று ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறது.

எனவே, தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலேனும் போலி டாக்டர்கள் மருத்துவம் செய்கிறார்கள் என்று அரசுக்குத் தெரியுமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய பகுதிகளிலே அப்படிப் புகார்கள் இருக்குமானால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக போலி டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகத் தமிழகம் முழுவதும் சமூக விரோதச் செயல்களைச் செய்து வரும் மருத்துவ அறிவு பெறாத பலர், டாக்டர்கள் என்று தொழில் செய்து வருகிறவர்களை முழுமையாகக் களையும் வகையில், அவர்களைக் கண்காணிப்பதற்கு உயர்மட்டக் குழு அதாவது கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்து அதன் வாயிலாக, எதிர்காலத்தில், முழுமையாக போலி டாக்டர்களைக் களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எங்கும் எம்.பி.பி.எஸ். படித்த மற்றும் சித்த மருத்துவம் படித்த டாக்டர்கள் பல இடங்களில் தொழில் செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் தெரியாமல் மக்களை ஏமாற்றுகின்ற போலி டாக்டர்கள் எங்கேயிருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதிலே இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் ஒரு குழு நியமித்துத்தான், அந்தக் குழு மூலம்தான் அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற அவசியமில்லாத அளவிற்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க காவல் துறையினருக்கு ஏற்கெனவே விதிமுறைகள், அணுகுமுறைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலிருந்து அப்படிப்பட்ட புகார் வந்தாலும் உடனடியாகக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கைது செய்கிறார்கள். ஆனால் சில நேரங்களிலே நல்ல டாக்டர்கள் மீதும் அப்படிப்பட்ட குற்றச்சாட்டு வந்து விடுகிறது. அதையும் காவல் துறையினர் பரிசீலித்து, போலி டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலத்திலே சித்த மருத்துவத்தின் மீது அதிகமான நம்பிக்கை





வளர்ந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அதிகம் அக்கறை கொண்டு அதற்கான பல்வேறு உத்திகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினத்திலே காலையிலே டி.வி.யைத் திருப்பினால் ஏராளமான போலி சித்த மருத்துவர்கள், "நாங்கள் அதைச் செய்கிறோம்,. இதைச் செய்கிறோம்" என்று சொல்லி விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல சில மதவாதிகளும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சின்னத் திரையிலே நடக்கின்ற இதுபோன்ற போலி விளம்பரங்களைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா, ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, 1996 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சித்த மருத்துவத்திற்காகத் தேவைப்படுகின்ற அளவிற்கு பணத்தை ஒதுக்கி, இந்த சித்த மருத்துவ முறையை ஊக்குவிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போது சித்த மருத்துவம் மிகச் சிறப்பாக தமிழகத்திலே அமல்படுத்தப்பட்டு வருகிறது. சித்த மருத்துவத்திலே எயிட்ஸ்-க்கு மருந்து இருக்கிறது என்பதை ஆராய்ச்சி செய்து, ஏறக்குறைய 400-க்கும் மேற்பட்டவர்கள் அந்த மருந்தை ஏற்றுக்கொண்டு, அவர்கள் குணமாகியிருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தவுடன், நாமக்கல் போன்ற சில பகுதிகளிலே சிலர் சித்த மருத்துவர்கள் என்ற போலிப் பெயர்களைப் போட்டுக்கொண்டு, தவறான மருந்துகளைக் கொடுப்பதாக அரசிற்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, போலி டாக்டர்கள் எந்த முறையிலே இருந்தாலும் சரி, அலோபதி முறையிலே இருந்தாலும் சரி அல்லது சித்த மருத்துவ முறையிலே இருந்தாலும் சரி, நிச்சயமாக அவர்களைக் கண்காணித்து, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலி டாக்டர் என்கிற பிரச்சினையே எம்.பி.பி.எஸ். டாக்டர்களை உருவாக்குகிற ஒரு சதி என்பது என்னுடைய கருத்து. பல எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்கிறபோது, உள்ளே கத்தரிக்கோலை

வைத்துத் தைத்துவிடுகிறார்கள், பஞ்சை வைத்துத் தைத்துவிடுகிறார்கள், கைக்குட்டையை வைத்துத் தைத்துவிடுகிறார்கள். இவற்றையெல்லாம் நாம் கேட்டிருக்கிறோம். அப்படியென்றால் அவர்கள் எல்லாம் போலி டாக்டர்களா? அவர்களையெல்லாம் அமைச்சர் அவர்கள் போலி டாக்டர்கள் என்று ஒத்துக்கொள்வார்களா என்பது ஒன்று. கிராமப்புறங்களிலே அனுபவத்தின் அடிப்படையிலே பல மருத்துவர்கள் இருக்கிறார்கள். நான் இருக்கிற கிராமம்கூட ரொம்ப குக்கிராமம்தான். நான் அனுபவ டாக்டரிடம்தான் வைத்தியம் செய்து கொள்கிறேன். ஒரு நாள் அவரைப் பிடித்து உள்ளே வைத்துவிட்டார்கள். அதன் பிறகு இரவு 12-30 மணிக்கு நான் சுகாதாரத் துறை அமைச்சருடன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு அவரை விடுவிக்கச் செய்தேன் சென்ற ஆண்டு. எனவே அவர்கள் எல்லாம் போலி டாக்டர்கள் அல்ல, அவர்களுக்கெல்லாம் நன்றாக வைத்தியம் தெரியும். அருமையாக வைத்தியம் செய்வார்கள். அவர்கள் வைத்தியம் நல்லமுறையிலே, வெற்றிகரமாகச் செய்கிறார்கள். ஏதாவது சில நேரங்களில் அவர்கள் தோல்வி அடைந்துவிடுகிற காரணத்தால் அவர்களை போலி டாக்டர்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் செய்கிற வைத்தியம்கூட பல நேரங்களிலே தோல்வி அடைந்து விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன கேள்வியா? இது உங்கள் கருத்து.

**திரு. ச. அழகிரி:** போலி டாக்டர்கள் என்பதைத் தயவுசெய்து மாற்றிவிட்டு, அனுபவ டாக்டர்களுக்கு ஓர் அங்கீகாரம் அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதி டாக்டர்களிலே, மிகச் சிறந்த பட்டம் பெற்றவர்கள்கூட அறுவைச் சிகிச்சை செய்கின்ற நேரத்திலே, சில நேரங்களிலே வயிற்றிலே கத்தரிக்கோலை வைத்துவிடுகிறார்கள்; பஞ்சை வைத்துவிடுகிறார்கள் என்றெல்லாம் உறுப்பினர் சொன்னார். அவர்களின் கவனக்குறைவால் நடைபெற்றது அது. அப்படி நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, அமெரிக்காவிலேயே நடைபெற்றிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த மிகச் சிறந்த நடிகையினுடைய தாயாருக்கே அமெரிக்காவிலே அப்படிப்பட்ட ஓர் அறுவைச் சிகிச்சை நடைபெற்று, கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டஈடு வழங்கியிருக்கிறார்கள். இது, கவனக்குறைவினாலே, சில நேரங்களிலே, எதிர்பாராதவிதமாக நடைபெறுவது. ஆனால் படிக்காமலேயே Anatomy என்றால் என்ன





என்பது தெரியாமலேயே, physiology என்றால் என்ன என்பது தெரியாமலேயே மருத்துவம் செய்வது, ஊசி போடுவது, மருந்து கொடுப்பதுபோன்ற செயல்களினால் ஈடுபடுகிறார்கள். அதனை உற்சாகப்படுத்தக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள்கூட, அனுபவரீதியாக ஒரு டாக்டரிடத்திலே உடலைக் காண்பிப்பதாகச் சொன்னார். அழகிரி அவர்கள் பல ஆண்டுகாலம் வாழவேண்டுமென்று நான் விரும்பக்கூடியவன். எனவே, அவர் அப்படிப்பட்ட டாக்டரிடத்திலே உடலைக் காண்பிக்காமல் நல்ல அனுபவம் வாய்ந்த, பட்டம் பெற்ற, படித்த டாக்டரிடத்திலே உடலைக் காட்டி, நீண்டநாள் வாழவேண்டுமென்று விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல படித்த டாக்டரிடம்தான் அழகிரி வைத்தியம் பெற்று அவர் நீண்டநாள் வாழவேண்டுமென்று வாழ்த்தினார்கள். நன்றி, ஆனால், அதேநேரத்திலே எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் மட்டும்தான். படித்த டாக்டர்கள் என்று நாம் ஒப்புக்கொள்ள முடியாது. அவர்களும் படித்த டாக்டர்கள். அதேநேரத்தில், அமைச்சரவர்கள் சித்தா, யுனானி, ஆயுர்வேதம் போன்றவற்றையும் ஊக்குவித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் 400 எய்ட்ஸ் நோயாளிகளுக்கு இப்போது சித்த வைத்தியத்தில் கண்டுபிடித்த மருந்தைக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதேபோல, யுனானியில்கூட, வாணியம்பாடி டாக்டர் அக்பர் கவுசர் போன்றவர்களெல்லாம்கூட எய்ட்ஸ்க்கு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். எங்களுடைய வேலூரில்கூட அர்ச்சுனன் என்ற ஒரு டாக்டர் சித்த வைத்தியம் நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார். இப்படிச் செய்பவர்களுக்கு, அழகிரி அவர்கள்கூட, அரசு அங்கீகாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டார். அரசு அங்கீகாரம் கொடுக்காத காரணத்தாலே நோய் முற்றிப்போன எய்ட்ஸ் நோயாளிக்கு மருந்து கொடுத்தும் பயனின்றி அவர் இறந்து விட்டால், உடனே அந்த நல்ல திறனுள்ள டாக்டரையே போலி டாக்டர் என்று சொல்லக்கூடிய ஒரு கட்டாயத்திற்கு மக்கள் வந்துவிடுகிறார்கள். ஆகவே சிறந்த டாக்டருக்கு, இந்த மாதிரி எய்ட்ஸ்-க்கு மருந்து கொடுக்கும் சித்த வைத்தியம் ஆனாலும் சரி, யுனானி ஆனாலும் சரி அல்லது ஓமியோபதி ஆனாலும் சரி, எல்லாவற்றுக்கும்

அங்கீகாரம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய முடியுமா? அதேபோல பரம்பரை வைத்தியர்கள் இப்பொழுது அங்கீகாரம் இல்லாமல் நிறையப்பேர் பாவம், அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, டெல்லியிலே இருக்கக்கூடிய அந்த Council-ல் உள்ளவர்களுடன் பேசி, அத்தகைய பரம்பரை வைத்தியர்களுக்கும் அரசு அனுமதி வழங்க ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் அக்பர் கவுசர் அவர்கள் எய்ட்ஸ்-க்கு மருந்து கண்டுபிடித்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். அக்பர் கவுசர், மதுவுக்கு அடிமையாகி இருப்பவர்களுக்குத்தான் சிகிச்சை அளிக்கிறாரே தவிர, இதுவரையிலே, அவர் எய்ட்ஸ்-க்கு மருந்து கண்டுபிடித்ததாக எனக்குத் தகவல் இல்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல ஆண்டு காலமாக பரம்பரையாகத் தொழில் செய்யக்கூடியவர்களுக்கு அனுமதி கொடுக்க முடியுமா என்று இங்கே கேட்டார். இதுகுறித்து ஏற்கெனவே இந்த அரசாங்கம் பரிசீலனை செய்தது. பல ஆண்டு காலமாகத் தமிழகத்திலே சித்தா, யுனானி, ஆயுர்வேதம் போன்ற மருத்துவங்களிலே பயிற்சி பெற்றவர்கள், 10 ஆண்டுகால அனுபவம் இருந்து, 8-வது வரையிலே படித்து இருந்தால் அவர்களுக்கு ஒரு தேர்வு வைத்து அதன்மூலம் அவர்களுக்கு அனுமதி கொடுக்கலாமா என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். மத்திய அரசாங்கம் அப்படிப்பட்ட ஒரு நிலையை மாநில அரசாங்கம் எடுக்கக்கூடாது, அந்த முடிவை எடுக்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறது. ஆனால், சித்தா, யுனானி, ஆயுர்வேதம் போன்ற இந்தத் துறைகளில் பட்டப் படிப்புப் படித்தவர்களை ஊக்கப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் எல்லாவகையான உதவிகளையும் செய்து கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டபேரவைத் தலைவர் அவர்களே, போலி டாக்டர்கள் ஒருபுறம் இருந்தாலும், தினம் வாரப் பத்திரிகைகளைப் பார்த்தால், 5, 6 பக்கங்களில் போலி டாக்டர்கள் விளம்பரப்படுத்துகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், 'ஆண்மை இழந்துவிட்டீர்களா! வாங்குங்கள் ஒரு Set மருந்து ரூ.1500, அணுகுங்கள் டாக்டர் சங்கரநாராயணன், B.A.,B.L. என்று போட்டு இருக்கிறார்கள். (சிரிப்பு) B.A.,B.L.-க்கும், டாக்டருக்கும் என்ன சம்பந்தம் என்றே தெரியவில்லை. ஆகவே பார்த்த மாத்திரத்திலேயே போலி





விளம்பரம் என்று தெரிகிற இப்படிப்பட்ட போலி விளம்பரங்களைத் தடுத்து நிறுத்தி, மக்கள் ஏமாறாமல் இருக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விளம்பரங்களைப் பார்த்து, நம்முடைய மக்கள் ஏமாந்துவிடக்கூடாது என்றுதான் அரசாங்கம் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறேதே தவிர, இதையெல்லாம் தடுக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. பொ. முருகேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**46—**

**மஞ்சள் நீர்க் கால்வாய்**

***4393—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் நகரத்திலுள்ள மஞ்சள் நீர்க் கால்வாயை அகலப்படுத்தி பற்றுச்சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் நகராட்சிக்கு உட்பட்ட மஞ்சள் நீர்க் கால்வாயில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் எடுத்து அகலப்படுத்தும் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.11.00 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுவிட்டது. பற்றுச்சுவர் அமைக்கும் பணி செய்யப்படவில்லை. மேலும் மஞ்சள் நீர் பிரதான மற்றும் கிளை வாய்க்கால்களின் ஓரத்தில் cement lining அமைத்துச் சீர்செய்யும் பணிக்காக ரூ.6.12 கோடி மதிப்பீட்டிற்கு அரசின் அனுமதியையும் நிதி உதவியையும் கோரி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கோரிக்கை வைத்துள்ளார். அவரது செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2000 மார்ச் 7

*முற்பகல் 10-00*

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக ஆட்சிக் காலத்தில்தான் உள்ளாட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு, உள்ளாட்சிகள் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, காஞ்சிபுரம் நகராட்சியைப் பொறுத்தவரையில் அதற்கு அதிக நிதி ஒதுக்கியிருக்கின்ற காரணத்தால், காஞ்சி நகரம் முழுவதும் ஒளி விளக்குகளாகவும், தெருவெல்லாம் கான்கிரீட் சாலைகளாகவும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட காலகட்டத்தில் மஞ்சள் நீர்க் கால்வாய் ஒரு களங்கமாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, விரைவிலே அந்தப் பணியை ஏற்று, அந்த மஞ்சள் நீர்க் கால்வாயை சிமெண்ட் கால்வாயாக அமைத்துக் கொடுக்க துரித நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தின் மத்தியில் ஓடும் மஞ்சள் நீர்க் கால்வாய் என்பது முக்கியமான ஒன்று. பிரதான கால்வாய் 5643 மீட்டரும், அதனுடைய கிளைக் கால்வாய் 1695 மீட்டரும் இருக்கிறது. அதற்காகத்தான் நான் ஆரம்பத்திலேயே பதில் சொன்னேன். 6 கோடி ரூபாய் சொச்சத்தில் அதற்கான பணிகள் செய்யப்பட வேண்டியிருப்பது உண்மைதான். ஆனால், நிதிநிலையை அனுசரித்து, நகராட்சி அந்தப் பணியை எடுத்துச் செய்ய முடியுமா என்பது கேள்வி. அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு, அத்திட்டத்தைப் பற்றிய பரிசீலனை என்னவாயிற்று என்று கேட்கிறபோது, நிதியை யார் கொடுப்பது, யார் செய்வது என்ற சிக்கலும் இதிலே இருக்கிறது. காரணம் அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கால்வாய் என்பது ஒன்று. இரண்டாவது நீர்ப்பாசன வசதியை அது விவசாய நிலங்களுக்கும் கொடுத்து வந்தது. தற்போது அதனுடைய நிலை என்ன என்பது பற்றிக் கேட்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு, அதுபற்றிய முடிவைத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2000 மார்ச் 7]

**47—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***18988—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஒன்றியம், விண்ணமங்கலம் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து, தச்சூர், மோட்டூர், அரையாளம், மருசூர், சீனுவாசபுரம், வடுகசாத்து காலனி, வடுகசாத்து மற்றும் சேர்ப்பாக்கம் ஆகிய கிராமங்களை இணைத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டத்தின் ஆரணி ஒன்றியத்தில் உள்ள தச்சூர், மோட்டூர், அரையாளம், மருதூர், சீனுவாசபுரம், வடுகசாத்து காலனி, வடுகசாத்து மற்றும் சேர்ப்பாக்கம் ஆகிய குடியிருப்புகளுக்குத் தனித்தனியாகக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. மேற்படி கிராமங்களை இணைத்து விண்ணமங்கலம் ஆற்றிலிருந்து குடிநீர் எடுத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டமாகச் செயல்படுத்துவது குறித்து தற்போது வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, அனைத்து கிராமங்களிலும் தனித்தனி குடிநீர்த் திட்டங்கள் உள்ளன, ஆனால், இந்தக் கிராமங்கள் அனைத்திலும் ஒரே மாதிரியான நிலத்தடிப் படுகை உள்ளதால் அந்த கிராமங்களின் குடிநீர் அனைத்தும் உவர்ப்பாக உள்ளது. அந்தக் குடிநீரைக் குடிப்பதால், அந்தப் பகுதியில் யானைக்கால் வியாதியும், விஷக் காய்ச்சலும் அதிகமாகப் பரவுகிறது. எனவே, மேற்படி தச்சூர் அருகிலுள்ள, விண்ணமங்கலம் ஆற்றிலிருந்து ஆரணி நகராட்சிக்குக் குடிநீர் எடுப்பதைப்போல இதற்கும் நீர் எடுத்து, நான் கோரியுள்ள கூட்டுத் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 7

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குமே இதை ஒரு வேண்டுகோளாக நான் வைக்க விரும்புகிறேன். இதுபோன்ற, சின்னச் சின்ன திட்டங்களை கிராமப்புறங்களிலே நிறைவேற்றி, இடையில் அந்தத் தண்ணீர் எல்லாம், உப்பு நீராகவோ, துவர்ப்பு நீராகவோ மாறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அதிகாரிகளிடத்திலே, எழுத்து மூலமாகவோ, நேரடியாகவோ தெரிவித்து, அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், என்னிடத்திலே தெரிவித்தால் நலமாக இருக்கும். இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், 4 மாதங்களுக்கு முன்பே அதை இங்கே எழுதிக் கொடுத்து, விடை சேகரித்து, அதற்குப் பிறகு பதில் அளிக்கின்ற நிலை வருகிறது. இதற்குள்ளாகவே, ஆரம்ப நிலையிலேயே, இப்படிப்பட்ட திட்டங்களை மாற்றி அமைத்திருக்கலாம். இருந்தாலும், இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். &LÔË &T"|¶&T"©,C±Tze "கிராமங்களில் ஏற்கெனவே அமைத்த திட்டங்கள் இடையில் மாறியிருக்கின்றன, குடி தண்ணீர், உப்புத் தண்ணீராக மாறியிருக்கிறது, இதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா" என்று கேட்டிருப்பீர்களேயானால், அந்தக் கேள்வி வந்த உடனேயே அதிகாரிகள் அதிலே கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுத்து, அதன்மூலம் கேள்விக்கான பதி[illegible]லத் தயாரித்திருக்கலாம். இருந்தாலும், இப்படி மாண்புமிகு உறுப்பினர் [illegible]தரிவித்த கருத்தையொட்டி, அதுபோல இருக்கிறதா என்று விரைவாகப் பரிசீலனை செய்து, உள்ளபடியே பயனில்லாத தண்ணீராக இருக்குமானால் அத்தனை கிராமங்களுக்கும் நல்ல, பாதுகாக்கப்பட்ட, குடிக்கக்கூடிய தகுதி வாய்ந்த தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதியிலே இருக்கின்ற கொரட்டூர் பகுதியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு முறை வந்து குடிதண்ணீர்த் தட்டுப்பாடு பற்றியும், உடனடி நடவடிக்கை எடுப்பது பற்றியும் சொல்லியிருந்தார்கள். ஆனால், அந்தப் பகுதி சென்னையை ஒட்டியுள்ள பகுதி என்பதால், அந்தப் பகுதிக்கு இதுவரை



2000 மார்ச் 7]

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின் வாயிலாகவோ அல்லது செங்குன்றம் ஏரியிலிருந்தோ, புழல் ஏரியிலிருந்தோ குடிதண்ணீர் வசதிக்கான ஏற்பாடு செய்யப்படவில்லை. தினமும் அங்கே லாரிகளிலே தண்ணீர் விநியோகம் செய்வதனால், அங்கே தினந்தினம் போராட்டங்களும், சாலை மறியலும் நடைபெறுகின்றன. ஆகவே, உடனடியாகக் குடிநீர் ஏற்பாட்டிற்கு மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆறு கிராமங்களைப் பொறுத்தது மூலக்கேள்வி. உறுப்பினர் தனிக் கேள்வி கேட்டாலோ, அல்லது தனிப்பட்ட முறையில் எழுதித் தந்தாலோ, பரிசீலித்து நடவடிக்கையும் எடுக்கப்படும்; பதிலும் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. லா. சந்தானம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**48—**

**நிலுவைத் தொகை**

***15875—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு விவசாயிகளிடம் பிடித்தம் செய்யப்பட்ட நிலுவைத் தொகையை ஒரே தவணையில் வழங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை நான் இங்கே அளிக்க விரும்புகின்றேன்.

பிடித்தம் ஏதும் செய்யப்படுவதில்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, பிடித்தம் செய்வது இல்லையென்று சொன்னாலும்கூட, மத்திய அரசு கரும்பிற்குக் கொடுக்கின்ற விலை மட்டும் முதலில் ஆலைகளிலிருந்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மாநில அரசு கொடுக்கின்ற அந்தப் பங்குத் தொகை, இரண்டு மூன்று மாதங்களுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு, பின்பு வழங்கப்படுகிறது. இதுகூட, சென்ற முறை நாங்களெல்லாம்

முதலமைச்சரிடத்திலே முறையிட்டபோது, அவர்கள் 82 கோடி ரூபாய் அளவிற்கு, அரசுத் துறையிலே இயங்குகின்ற சர்க்கரை ஆலைகளுக்கு நிலுவையாக இருந்த தொகையை வழங்கியிருக்கிறார்கள். எனவே, பிடித்தம் செய்யப்படுகிறது என்பதை அமைச்சருக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். அப்படி வருகின்ற நேரத்திலே விவசாயிகள் கூட்டுறவுக் கடன் வாங்கித்தான் கரும்பு பயிர் செய்கிறார்கள். அப்படி வாங்கப்பட்ட கூட்டுறவுக் கடனை முதலாவது எடுத்துக் கொண்டு, மீதமுள்ள தொகையைத்தான் விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள். இதை அரசு கவனத்தில் எடுத்து, தமிழக அரசு கொடுக்க வேண்டிய பங்குத் தொகையைக் கூட்டுறவுக் கடனுக்கு வரவு வைத்துக் கொள்ளலாம் என்கின்ற முறையிலே, அவர்களுக்கு முழுமையான தொகையையும் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிடித்தம் என்பது வேறு; நிலுவைத் தொகை என்பது வேறு. கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகளைப் பொறுத்தவரை, நிதி நெருக்கடியின் காரணத்தினாலே காலதாமதமாக, கரும்பு உற்பத்தி செய்து, ஆலைகளுக்குத் தரக்கூடிய விவசாயிகளுக்கு நாம் தருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போலவே, 1996-97-இல் ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து 86 கோடி ரூபாய், ஆலைகளுக்கு வழங்கி, கரும்பு விவசாயிகளுக்குத் தரப்பட்டது. 1997-98-ல் அதைப்போல, 82 கோடி ரூபாய் கரும்பு ஆலைகளுக்கு வழங்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 1998-99-ல் 210.15 கோடி ரூபாய், ஆலைகளுக்கு அரசு பணம் தந்து, கரும்பு விவசாயிகளுக்குப் பணம் தரப்பட்டது. இது விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகை. ஆனால், deposit என்ற பெயரிலே, நம்முடைய கூட்டுறவுத் துறையிலோ, பொதுத் துறை ஆலைகளிலோ நாம் பிடிப்பது இல்லை. விவசாயிகளிடம் கேட்டுப் பார்த்தோம். அவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அதனால், நாம் கட்டாயப்படுத்தவில்லை. தனியார் ஆலைகளிலேதான் deposit வாங்குவதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கின்றது. அதற்குக்கூட, அரசின் சார்பில் நாம் கட்டாயப்படுத்தி, "விவசாயிகளிடத்திலே, விவசாயிகளுக்குத் தரவேண்டிய பணத்தை நீங்கள் deposit ஆக வசூல் செய்யக்கூடாது" என்று ஆலை உரிமையாளர்களிடத்திலே நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். "விவசாயிகளிடத்திலேயிருந்து அப்படி ஒரு புகார் வருமேயானால், சட்டப்படி நாங்கள் நடவடிக்கையும் எடுப்போம்" என்றும் அந்த ஆலை உரிமையாளர்களிடத்திலே சொல்லி இருக்கிறோம். விவசாயிகளுக்கும் பாதுகாப்பாக இந்த அரசு இருக்கும் என்றும் சொல்லியிருக்கின்றோம். இந்த S.M.P., மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையைப் பொறுத்தவரை, கரும்பு கொடுத்த 15 நாட்களுக்குள் தொகை வழங்கப்பட வேண்டும் என்று, அதைப் பொறுத்தவரைக்கும், விதிமுறை இருக்கின்றது. அதைக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலைதான் காலம் கடந்து கொடுக்கப்படுகிறது. இருந்தாலும், "அதிக காலதாமதம் செய்து கொடுக்கக் கூடாது; விரைவிலே விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும்" என்று மாதந்தோறும் ஆய்வு செய்து அந்த ஆலைகளுக்கு எல்லாம் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.





*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. .ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு, சர்க்கரை ஆலைக்கு கொடுத்து, 15 நாட்களுக்குள் பணம் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், தனியார் ஆலைகள் 3 மாதம், 4 மாதம் ஆனால்கூட பணத்தைத் தருவதில்லை. குறிப்பாக, போளூர் பகுதியிலே இருக்கின்ற தரணி சர்க்கரை ஆலை 3 மாத காலமாக இன்னும் விவசாயிகளுக்கு பணம் தரவில்லை. இதைத் தவிர்க்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, எந்தெந்த ஆலைகளிலே கரும்பு விவசாயிகளுக்கு உரிய நேரத்திலே பணம் கொடுக்கவில்லை என்று நம்முடைய சர்க்கரைத் துறை ஆணையருக்குப் புகார் வருகிறதோ அப்போதே அந்த ஆலையோடு தொடர்புகொண்டு, நிர்வாகத்தோடு கலந்துபேசி விரைவில் பணம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி அறிவித்து இருக்கக்கூடிய கரும்பு விலையைத் தனியார் ஆலைகள் கொடுக்க

[2000 மார்ச் 7

மறுக்கிறார்கள்; வழக்குப் போட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். அந்த வழக்கு சம்பந்தமாக நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? தனியார் ஆலைகளும், அரசு அறிவித்த அந்த தொகையைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நிர்ப்பந்திப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு உரிய விலை கொடுக்க வேண்டும் என்பதில் மத்திய அரசாங்கத்தினுடைய அறிவிப்புக்கு இணங்க ஒரு டன் 8.5 சதவீத கட்டுமானத்திற்கு மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலையோடு மாநில அரசாங்கம் தொடர்ந்து ஒரு பரிந்துரை விலை செய்து வந்தது. இடையில் ஆலை உரிமையாளர்கள் "மத்திய அரசாங்கம் தான் விலையை நிர்ணயிக்கின்ற அந்த உரிமை பெற்று இருக்கின்றது; மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்யக்கூடாது" என்று சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றார்கள். அந்தத் தடை உத்தரவை நீக்க வேண்டும் என்று அரசின் சார்பிலே முயற்சி எடுக்கப்பட்டு தடை உத்தரவு நீக்கப்பட்டது. நீதிமன்றமும் தீர்ப்பு வழங்குகிறபோது, "இதுபோல பரிந்துரை விலை செய்வதற்கு மாநில அரசாங்கம் பரிசீலிக்கலாம்; மாநில அரசாங்கம் முத்தரப்புக் கூட்டம் கூட்டுவதிலும் கலந்து கொள்ளலாம்" என்று ஒரு தீர்ப்பை வழங்கினார்கள். அந்த அடிப்படையிலே உடனடியாக நாங்கள் விவசாயிகள் கருத்தைக் கேட்டோம்; ஆலை அதிபர்களின் கூட்டத்தையும் கூட்டினோம். உடனே அவர்கள் Full Bench-க்கு appeal செய்து, கீழ் Court-லே, Single Bench-லே வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்புக்கு ஒரு தடை வாங்கிவிட்டார்கள். அந்தத் தடை எப்படி என்றால், "மாநில அரசாங்கம் கூட்டக்கூடிய கூட்டத்திற்கு கரும்பு ஆலை அதிபர்கள் சென்றாலும் செல்லலாம்; செல்லாவிட்டாலும், அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு அவர்கள் ஒப்புக்கொண்டால்தான் மாநில அரசாங்கத்தினுடைய விலை அவர்களைக் கட்டுப்படுத்தும்; அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்வது அவர்களைக் கட்டுப்படுத்தாது" என்று ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டு, பிறகு "இந்த வழக்கு நிலுவையிலே இருப்பதாகவும், முழுத் தீர்ப்பும் பின்னர் வழங்கப்படும்" என்றும் ஓர் உத்தரவு வழங்கப்பட்டுவிட்டது. அதனாலே ஆலை அதிபர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. இருந்தாலும், மாநில அரசாங்கம் உடனடியாகக் கூட்டுறவு, பொதுத்துறை



2000 மார்ச் 7]

ஆலைகளுக்கு, மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையோடு மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையையும் சேர்த்து 8.5 சதவீத கட்டுமானச் சத்துள்ள ஒரு டன் கரும்புக்கு 740 ரூபாய் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிர்ணயம் செய்து அறிவித்து இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அதிகபட்சமாக இந்தக் கட்டுமானச் சத்து அடிப்படையிலே தரக்கூடிய ஒரு ஆலையை நான் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அமராவதி சர்க்கரை ஆலை ஒரு டன் கரும்புக்கு 922 ரூபாய் 80 காசு அந்த ஆலைக்கு கரும்பு கொடுக்கக்கூடிய விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-15

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கட்டாயம் ஒன்றும் கிடையாது. சரி, கேளுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாகப் பதில் அளித்தார்கள். நான் கேட்க விரும்புவது மத்திய அரசு வழங்குகிற அந்த முழுத்தொகையையும் விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டு, மாநில அரசு வழங்குகிற அந்தத் தொகையிலே கூட்டுறவுக் கடன்களைப் பிடித்தம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதுதான். அதற்கு ஆவன செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆலையிலே பணமிருந்தால் கொடுத்துவிடலாம். எப்படிக் கொடுத்தாலும் அரசாங்கம்தான் மீண்டும், விவசாயிகளுக்குக் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்து ஆலைக்கு கொடுத்தால்தான் கொடுக்க முடியும். ஆலையிலேயிருந்து கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோதுதான் மாநில அரசாங்கம் நிதியைக் கொடுத்து, கரும்பு விவசாயிகளுக்கு நாம் கொடுக்கிறோம். கூட்டுறவுக் கடன்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். அதைத் தனியாகப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 7

49—

## மேல் நிலை அணைக்கட்டு

***7223—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், குதிரை ஆற்றில் மேல் நிலை அணைக்கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், குதிரை ஆற்றில் மேல் நிலை அணைக்கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரை ஆற்றில் மேல் நிலை அணைக்கட்டு கட்டாவிட்டாலும் பரவாயில்லை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் பழனியிலுள்ள சிறப்பு வாய்ந்த பச்சையாறு அணைக்கட்டை நேரில் வந்து ஆய்வு செய்தார்கள். கேட்பதையெல்லாம் கருணை உள்ளத்தோடு கொடுக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வரிடத்திலே கலந்து ஆலோசித்து இந்த ஆண்டு அந்தப் பச்சையாறு அணைக்கட்டுத் திட்டத்தை வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூலக்கேள்வியிலேயே குதிரை ஆற்றைப் பற்றிக் கேட்டதற்குப் பதிலாக, பச்சையாற்றைப் பற்றிக் கேட்டிருந்தால் விவரத்தை நான் அளித்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 7]

50—

## பாசன வசதி

***27971—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழுதூர் வெள்ளாற்றிலிருந்து அத்தியூர், வயலூர் மற்றும் கீழப்பெரம்பலூர் ஏரிகளுக்குச் செல்லும் வாய்க்கால்களைத் தூர் வாரி, பாசன வசதி ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வரும் நிதியாண்டின் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்'

என்ற புலவர்களின் நெறிமுறைகளுக்கேற்ப நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஏரிகள், ஆறுகள் போன்றவற்றை எல்லாம் தூர் வாரிச் சிறப்புச் செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போது விவசாயப் பெருங்குடிமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். வெள்ளாற்றிலிருந்து—தொழுதூர் அணைக்கட்டிலிருந்து—என்னுடைய தொகுதியிலுள்ள பெண்ணக்கோளம், வடக்கலூர், வடக்கலூர் அகரம், வயலூர் போன்ற ஏரிகளுக்கு நீர்வந்து அதன்மூலம் அந்தப் பகுதிகள் பாசனம் பெறுகின்றன. அதனடிப்படையில் இப்போது வடக்கலூர், ஒகளூர் ஏரிகள் தூர் வாரப்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் தூர் வாரப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் இப்போது வயலூர், அத்தியூர், கீழப்புத்தூர், கீழப்பெரம்பலூர் போன்ற ஏரிகள் தூர் வாரப்படாமலும் அந்த அணைக்கட்டிலிருந்து செல்கின்ற வாய்க்கால்கள் மிக மோசமாக கருவேல மரங்களாலும், காட்டாமணக்குகளாலும் மண்மேடுகளினாலும் சூழ்ந்து நீர்போக்குவரத்து இன்றியும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே அதனை அறிந்து அந்தப் பகுதி மக்களுடைய, நீண்ட நாள் கோரிக்கையான

[2000 மார்ச் 7

அதாவது ஏரிப் பாசனத்தையே நம்பியுள்ள அந்தப் பகுதி மக்களுக்கு உதவும் வகையில் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வி கேட்டதிலிருந்து அவருக்கு இருக்கின்ற அக்கறை நன்றாகத் தெரிகிறது. எனவே நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**51—**

### கூடுதல் பேருந்து வசதி

***31745—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, முள்ளிப்பாக்கம் கிராமத்திற்காக செங்கல்பட்டு—திருப்போரூர் செல்லும் (டி50) பேருந்துகளைக் கூடுதலாக இயக்க கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) பொது மக்களின் வசதிக்காக அவ்வழித்தடத்தில் புதிய அரசுப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்போரூர் இளைஞர் நற்பணி மன்றத்தினர் செங்கல்பட்டு-திருப்போரூர் (டி50) நகரத் தடத்தில் கூடுதல் பேருந்து கோரி 1-9-1999 அன்று மனு கொடுத்துள்ளனர்.

(ஆ) முள்ளிப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு-திருப்போரூர் வழித்தடத்தில் முள்ளிப்பாக்கம் கூட்டுச் சாலையிலிருந்து உள்ளே 3.0 கி.மீ. தூரத்தில் உள்ளது. இத்தடத்தில் கழக நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 36 நடைகளும், புறநகர்ப் பேருந்துகள் மூலம் 4 நடைகளும்



2000 மார்ச் 7]

தனியார்ப் பேருந்துகள் மூலம் தினசரி 34 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்பொழுது இயக்கப்படும் நடைகள் தற்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானது. பயணிகள் அடர்வு 60 விழுக்காடு மட்டுமே உள்ளது. எனவே, கோரிக்கைத் தடத்தில் கூடுதல் மற்றும் புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

¹ ÚTLÅ 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 52, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**52—**

### நெடுஞ்சாலையை விரிவுபடுத்துதல்

***11179—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வள்ளியூர்-திருச்செந்தூர் (வழி-சாத்தான்குளம்) நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வள்ளியூர்-திருச்செந்தூர் சாலை மொத்தம் 65.60 கி.மீ. நீளம் கொண்ட 8 சாலைப் பகுதிகளாகும். மேற்படி 8 சாலைப் பகுதிகளில் ஒன்றான மெய்ஞானபுரம்-காயாமொழி, தலையணை சாஸ்தான்கோயில் சாலை கி.மீ. 6/2-14/4 வரை, அதாவது 8.20 கி.மீ. நீளச் சாலையை ரூ.33.54 இலட்சம் மதிப்பீட்டில் NABARD பணியில் சேர்த்து வலுப்படுத்திப் புதுப்பிக்கும் பணி ஒப்பந்த அடிப்படையில் நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள மற்ற 7 பகுதிகள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் இப்போது இடம்பெறவில்லை. இவற்றை உடனடியாகச் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகளும் இப்போது இல்லை.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில், திருச்செந்தூர் முருகர் கோயில் மிகப் பிரசித்திபெற்ற கோயில். தினமும் ஐயாயிரத்திலிருந்து பத்தாயிரம் மக்கள் அங்கு வந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். அதேபோல், தென் மாவட்டங்களில் வள்ளியூர், முன்னேறிக் கொண்டிருக்கிற நகரங்களில் ஒன்று. கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைத்ததற்குப்

[2000 மார்ச் 7

பிறகு, பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும், கன்னியாகுமரி-திருச்செந்தூர் சாலையில் வந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். அது குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தினால், தினமும் ஒரு விபத்து அங்கே நடந்து கொண்டிருக்கிறது. கருணை உள்ளத்தோடு, நிச்சயமாக அந்த வள்ளியூர்-திருச்செந்தூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு, அதுமட்டுமல்லாமல், ஆழ்வார்திருநகர்-சாத்தான்குளம் சாலையும் குறுகிய சாலையாக இருக்கிறது; அந்தச் சாலையையும் அகலப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முழுச்சாலையும், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, 65.60 கிலோ மீட்டர் நீளம் இருக்கிறது. இது முழுவதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல, அகலப்படுத்தி, உறுதிப்படுத்த வேண்டுமானால், 12.65 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. எனவே, முதற்கட்டமாக ரூ.33.54 இலட்சத்தில், ஒரு பகுதி, அதாவது 8.20 கிலோ மீட்டர் சாலை மேம்படுத்தப்படுகிறது. படிப்படியாக அந்தச் சாலை மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்.

**53—**

### கோயில் திருப்பணி மேற்கொள்ளுதல்

***16031—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் ஆனையூர் மீனாட்சியம்மன் கோயிலைப் புதுப்பித்து, திருப்பணி மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மார்ச் 7]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலுள்ள ஆனையூர் மீனாட்சியம்மன் கோயில், பல்லாயிரக்கணக்கான மக்களால் வழிபட்டு வருகின்ற ஒரு புராதனக் கோயிலாகும். அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் கோயிலோடு தொடர்புடைய ஒரு கோயிலாகும். அப்படிப்பட்ட அந்தப் புராதனக் கோயில், இப்போது பழுதடைந்த நிலையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், கருணையுள்ளத்தோடு மறுபரிசீலனை செய்து, பழுதடைந்து கிடக்கின்ற அந்தக் கோயிலைப் பழுதுபார்க்கவும், திருப்பணிகள் மேற்கொள்ளவும் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்துபோகின்ற சிறப்புக்குரிய கோயில் அது என்று தெரிவித்தார்கள். அப்படி இருந்திருந்தால், அதிலே வருமானம் கொஞ்சம் அதிகமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், உண்மையில் பார்த்தால், வருமானம் ஆண்டிற்கு ரூ.1540 தான் வருகிறது. ஆனால், அதற்கு நில உடைமைகள் அதிகம். அதையும் நான் உறுப்பினருக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். 95.96 ஏக்கர் நன்செய்; 38.40 ஏக்கர் புன்செய் நிலங்கள் இருக்கின்றன. இவ்வளவு நிலங்களும் தனியார் பெயரில் பட்டாவாகி இருக்கின்றன. எனவே, அந்த வட்டாரத்து மக்கள் எவ்வளவு கவனத்தோடு பட்டா மாற்றியிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல; இப்போதுதான் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்து, தனியார் பெயரில் இருந்த பட்டாக்களை கோயில் பெயரில் மாற்றிக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்தவகையில் கோயில் நிலங்களின் சார்பில் வரவேண்டிய வருவாய் அறவே வராமல் இருக்கிறது. இதையொட்டி வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன. இந்த வருவாய் ஒழுங்காக வருவதற்கு, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற 'முறையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்

[2000 மார்ச் 7

வல்லரசு அவர்கள் தக்க ஏற்பாடுகள் செய்வார்களேயானால், நிச்சயமாக இந்த அரசு திருப்பணியைச் செய்து முடிக்கும்.

முற்பகல் 10-25

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நில ஆக்கிரமிப்புகளை அகற்றவும், அது போன்ற வருவாய் இழப்புகளை மீட்டுத் தருவதற்கும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மிகுந்த உறுதுணையாக இருப்பேன் என்று கூறிக்கொண்டு, அந்த வட்டார மக்கள் ஏழையெளிய மக்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருவது என்பது உண்மை; ஆனால் அதே நேரத்தில் ஏழையெளிய மக்கள் என்பதால் வருமானம் இல்லாத சூழ்நிலை; எனவே, மீண்டும் கருணை உள்ளத்தோடு அதைப் புதுப்பிக்கவும், திருப்பணி மேற்கொள்ளவும் வேண்டுமாய்க் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, 25000 ரூபாய் செலவிட்டு ஒருகால பூஜைக்காக நிதியொதுக்கித் தந்திருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல நிலைமைகள் சீராகுமானால் உறுதியாகத் திருப்பணி மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**54—**

### அச்சகத்தை நவீனமயமாக்குதல்

***24548—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரில் இயங்கி வரும் கூட்டுறவு அரசு அச்சகத்தை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



2000 மார்ச் 7]

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அச்சகங்கள் எல்லாம் Litho Press ஆக மாறி, Computerise பண்ணி, நல்ல சீரான முறையிலே இயங்கிக்கொண்டு, நல்ல வருவாயை ஈட்டுகிற அச்சகங்களாக இருக்கின்றன. ஆனால், நம்முடைய கூட்டுறவு அச்சகம் மட்டும், அந்த மாதிரி நிலைக்கு ஆளாகாமல், விஞ்ஞான ரீதியில் அதை முன்னேற்றாமல் Computerise பண்ணாமல், Litho-ஆக மாற்றாமல், ஏதோ ஒரு பணியைச் செய்வதைப் போலச் செய்துகொண்டு, அதற்கு தலைவர்கள், இயக்குநர்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒப்புக்காக ஒரு அரசு அச்சகம் இயங்குவது போலத்தான் தெரிகிறது. எனவே அதை நல்ல முறையில் இயங்குகின்ற ஓர் அச்சகமாக மாற்றுவது மிக அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் கூட்டுறவு அச்சகம் 1997-98-ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி 40.07 இலட்சம் நஷ்டத்தில் செயல்பட்டு வருகிறது. அச்சகத்திற்கு 31-3-1999-ல் வரவேண்டிய இனங்களின் மதிப்பு 25.49 இலட்சம்; கொடுக்கப்பட வேண்டிய இனங்களின் மதிப்பு 53.48 இலட்சம். இந்த நிலையில், அச்சகத்தை நவீனப்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கச் சொல்லி, எந்தவிதமான கருத்துருவும் அரசுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து அவர்களால் பெறப்பட்டிருக்கின்ற 20 இலட்சம் ரூபாய் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் உரிய முறையில் கருத்துரு அனுப்பப்படுமானால், அந்த அச்சகத்தை நவீனப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். இதே போல தமிழ்நாட்டிலே 25 கூட்டுறவு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதிலே, கரூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், நாமக்கல் மற்றும் விழுப்புரம் அச்சகங்கள் புதிதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்து ஆரம்பிக்கப்பட்டவை. மற்ற பல அச்சகங்களைப் பொறுத்தவரை அதாவது 1996-97-லே 5 இலட்சம் ரூபாய் செலவிலே சென்னை மத்திய அச்சகத்தை நவீனப்படுத்தவும், 1997-98-ல் புதுக்கோட்டை மாவட்ட அச்சகத்தையும் 1998-99-ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட அச்சகத்தை, 4 இலட்சம் ரூபாய் செலவிலே நவீனப்படுத்தவும் பணம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல 1999-2000 ஆண்டு மதுரை காமராஜர்

பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகத்திற்கும், நீலகிரியில் இருக்கின்ற கூட்டுறவு அச்சகத்திற்கும் முறையே ரூபாய் 5 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து நவீனப்படுத்துவதற்குரிய முயற்சிக்கு அரசால் பணம் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்ட அச்சகத்திற்கும் உரிய கருத்துரு வருமானால், அதைப்பற்றிப் பரிசீலித்து, வழங்குவதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**55—**

## மலிவு விலையில் வேட்டி, சேலை

***25709—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மலிவு விலையில் வேட்டி, சேலை விற்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் மலிவு விலையில் வேட்டி, சேலை விற்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலுள்ள ஏழை விவசாயிகள் அன்றாடம்



பாடுபடுகின்றவர்கள் நகரங்களில் சென்று அதிக விலைக்கு வேட்டி, சேலை வாங்குவதற்குத் தயங்குகின்ற காரணத்தினால், நியாய விலைக் கடைகளில் தமிழ்நாடு முழுவதும், கிராமத்து மக்களுக்காவது, மலிவு விலையில் வேட்டி, சேலை வழங்குவதற்கு அமைச்சர் மறுபரிசீலனை செய்து அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடை கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டதே பசியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்குத் தேவையான அளவிற்கு உணவுப்பொருட்கள் கிடைக்க வழிவகை செய்தல், உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு உறுதியளித்தல், சீரான விலையில் எல்லா உணவுப் பொருட்களும் கிடைக்க வழிவகை செய்தல் என்ற அந்த நோக்கத்திற்காகத்தான். அப்படி ஆரம்பிக்கப்பட்ட நியாய விலைக் L+ P ¼ &X Non-control goods என்று சொல்லப்படுகின்ற பல்வேறு பொருட்களை, கடந்த காலத்திலே விற்பதற்காகப் பல சங்கங்கள் ஏற்பாடு செய்தபோது, அங்கே ஏழையெளிய மக்கள் அரிசி வாங்க வருகின்றபோது, சோப்பு வாங்கினால்தான் அரிசி என்ற அளவிலே அந்த Non-control goods-ஐ விற்க முற்பட்டார்கள். அதற்குப் பிறகு நமது அரசு வந்த பிறகுதான் Control goods மட்டுமே அங்கு விற்கப்பட வேண்டும் என்ற உறுதியை அளித்து, இப்போது மக்களுக்குச் சீராக அவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நாளை, வேட்டி, சேலை என்று ஆரம்பித்தால், மறுபடியும், அதை வாங்கினால்தான் இது என்று சொல்லி, பிறகு மக்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பும். அதுபோல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் உணவுப் பொருட்களை மட்டுமே சரியானபடி வழங்குவதற்கான உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. வேட்டி, சேலை வழங்குவதற்கான எந்தவிதமான செயற்குறிப்பும் அரசிடம் இல்லை, அது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அடுத்து, வினா எண் 56, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 7

56—

**குறை தீர்ப்புக் குழு**

***26951—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைவாசிகளின் குறைகளைக் கேட்டறிந்து தீர்க்க சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட, சிறைவாசிகள் குறைதீர்ப்புக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதற்கான அவசியம் எழவில்லை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகள் எத்தனை பேர் தப்பினாலும் ஒரு நிரபராதிகூடத் தண்டிக்கப்படக் கூடாது என்பது சட்டத்தின் நியாயம். அந்த அடிப்படையிலே விசாரணைக்குரிய கைதிகளாக உள்ளவர்களைச் சிறைகளிலே சித்திரவதைப்படுத்துவது, அவர்களை தினமும் அடிப்பது என்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை உறவினர்கள் சந்திக்கக் கூட விடுவதில்லை. இப்படிப்பட்ட நிலைகள் இப்போது சிறைச்சாலைகளிலே இருந்து வருகின்றன. அதுமட்டுமல்ல, சிறைகளிலே கஞ்சா, மது போன்றவை எல்லாம் விற்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் கண்காணிக்கின்ற வகையிலே அங்கே நியாயமான முறையிலே, சட்டத்திற்குட்பட்டு கைதிகள் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையை உருவாக்குகின்ற வகையிலே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, கண்காணித்து, மேற்படி நிகழ்வுகள் நிகழாமல் தடுக்க, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு உறுப்பினர் நாசர் குறிப்பிடுவது போன்று சிறைச்சாலைக்குள் யாரும் கொடுமைப்படுத்தப்படவில்லை; சித்திரவதைப்படுத்தப்படவில்லை. மனித உரிமைக்கு மாறான எந்தச் செயலும் நடத்தப்படவில்லை. அங்கே தவறான காரியங்கள் ஏதாவது நடப்பதாக அரசிற்குத் தகவல் கிடைக்குமானால் அதன்மீது நாங்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்கிறோம். என்றாலும், சிறையினுடைய ஒழுங்கைக் கண்காணிப்பதற்கு ஏற்கெனவே 6 பேர் கொண்ட குழு அமைப்பதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர், நீதிபதி, அதாவது Sessions நீதிபதி, துணை Sessions நீதிபதி, Magistrate, நடுவர்கள், காவல் துறை ஆணையர்கள் சிறைக்குச் சென்று அவ்வப்போது கைதிகளை விசாரித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டுத் தீர்வு காண்கிறார்கள். இன்னும், இலவச சட்ட ஆலோசகர்கள் சிறைக் கண்காணிப்பாளரிடம் வாரத்திற்கு ஒரு முறை ஆலோசனை நடத்தி சிறையில் உள்ளவர்களுடைய குறையைக் கேட்டு அவர்களும் எங்களுக்குத் துணை செய்கிறார்கள். உயர் நீதிமன்றத்தினுடைய ஆணைப்படி ஒவ்வொரு நீதிமன்றத்திலேயும் ஒரு புகார்ப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புகார்ப்பெட்டியை அமர்வு நீதிமன்றத்தினுடைய நீதிபதியே திறந்து, அவரே படித்து, அதன் அடிப்படையில் நீதிபதியே நடவடிக்கை எடுக்க எங்களுக்குத் துணை செய்கிறார். சிறையினுடைய 518-வது விதியின்படி சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ சிறையைப் பார்ப்பதற்கு விரும்பினால், யாருடைய குறையையாவது அறிந்து அதை எங்களுக்குத் தெரிவிக்க விரும்பினால், அரசு அதற்கு அனுமதி அளிப்பதற்கும் சட்டத்தில் இடம் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட குழு தேவையில்லை.



2000 மார்ச் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. கு. மனோகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

57—

**பத்திரப் பதிவு அலுவலகம்**

***23987—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 7

தருமபுரி தொகுதி, கிருஷ்ணாபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி பதிவு மாவட்டம், கிருஷ்ணாபுரத்தில் ஒரு புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இறைவனிடம் கையேந்துங்கள், அவர் இல்லை என்று சொல்லுவதில்லை' என்ற ஒரு பாடலின் வரியை மாற்றி 'கலைஞரிடம் கையேந்துங்கள், அவர் இல்லை என்று சொல்லுவதில்லை' என்ற நிலையில் இப்போது தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைய நிலையில்—கிருஷ்ணாபுரம் எனது சொந்த ஊர்— கிருஷ்ணாபுரத்தைச் சுற்றி 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு எந்த பத்திரப் பதிவு அலுவலகமும் கிடையாது. கிருஷ்ணாபுரம் ஒரு வளர்ந்து வரும் வணிக மையம். அங்கு சுகாதார நிலையம், மேல்நிலைப் பள்ளி என்று செயல்பட்டுக் கொண்டு வரும் நிலையில், அரசு மறுபரிசீலனை செய்து, கிருஷ்ணாபுரத்திற்கு பத்திரப் பதிவு அலுவலகம் வழங்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி கிருஷ்ணாபுரம், தருமபுரியிலே இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. கிருஷ்ணாபுரம், தருமபுரி அருகில் இருக்கின்ற காரணத்தினால், அதிலே எந்தெந்தக் கிராமங்களைச் சேர்க்க முடியும் என்று கணக்கிட்டுப் பார்த்ததில் மொத்தம் 450 ஆவணங்களைத்தான் கிருஷ்ணாபுரத்திலே பதிவு செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு புதிய அலுவலகம் திறக்க வேண்டுமானால், 2 ஆயிரம் ஆவணங்கள் குறைந்தபட்சம் இருக்க வேண்டும் என்பது அரசினுடைய விதியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய கோரிக்கையில் 15 கிராமங்களையும் சேர்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவை எந்தெந்தக் கிராமங்கள் என்பதை அவர் எனக்குத் தெரிவித்தால், அதனுடைய அடிப்படையில் அரசு ஆய்வு செய்யும்.



2000 மார்ச் 7]

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**58—**

**கலைக் கூடம்**

***24781—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் பாரதியின் பெயரில் கலைக்கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எட்டயபுரத்தில் பாரதியின் பெயரில் கலைக்கூடம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் பாரதி நாடறிந்த புரட்சிக் கவி பாரதி. அவருக்கு ஏற்கெனவே அங்கே அரசு மூலமாக ஒரு மணி மண்டபம் கட்டி, ஆண்டுதோறும் விழா நடத்துகிறார்கள். அதன் அடிப்படையில் அவருடைய பெயரால் ஒரு கலைக்கூடம் அமைத்து, அவருடைய சிறப்பை உயர்த்தும் வகையில் இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்து, அதைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக நான்காவது முறையாக பொறுப்பேற்றபோது எட்டயபுரத்திலுள்ள பாரதியார் நினைவு இல்லத்தை மேம்படுத்துவதற்காக ரூ.3,85,000 மதிப்பீட்டில் பல்வேறு மேம்பாட்டுப்

[2000 மார்ச் 7

பணிகளை நிறைவேற்றியிருக்கிறோம். 1998-ஆம் ஆண்டு மீண்டும் தொடர்ந்து பாரதியாருடைய புகைப்படங்கள், நூல்கள், அவருடைய வாழ்க்கை வரலாற்றுச் சித்திரங்களை உள்ளடக்கி அது ஒரு கலைப் பொக்கிஷமாகத் திகழ்கிற அளவிற்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதற்குரிய படங்களை எல்லாம் வைத்து மேம்படுத்தியிருக்கிறோம்.

அதேபோல, பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியைப் பாராட்டுகின்ற வகையில் சென்னை திருவல்லிக்கேணியில் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சுமார் ரூ.10,20,000 மதிப்பீட்டில் பாரதியாருடைய படைப்புகள், ஆராய்ச்சி நூல்கள், அவரைப் பற்றிய பிற மொழி நூல்கள், இவற்றை எல்லாம் வாங்கி வைத்து, ஒரு சிறப்பான நூலகத்தையும் பராமரித்து வருகிறோம். பாரதியாருடைய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், கவிதை வரிகளை எல்லாம் lamination செய்து, பொது மக்களுடைய பார்வைக்காக வைத்திருக்கிறோம். பாரதியாருடைய வீட்டிற்குப் பின் பக்கத்தில் ஒரு கூட்ட அரங்கத்தை உருவாக்கி, பாரதியாரைப் பற்றிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளதுடன் அங்கே தொலைக் காட்சிப் பெட்டி வைத்து பாரதியாரைப் பற்றிய செய்திப் படங்களை வாரத்திற்கு இரண்டு முறை தொலைக்காட்சி மூலம், அங்கே வருகிற பார்வையாளர்களுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறோம். பாரதியாருடைய பெருமை மிக்க பாடல்களை, திரைப்படங்களில் வருகின்ற பாடல்களை எல்லாம் தொகுத்து, 8 பாடல்களை உள்ளடக்கிய ஒலி நாடாக்கள் தினமும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. எனவே பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியாருக்குப் பெருமை சேர்க்கிற வகையில் இந்த அரசு எல்லா செயல்பாடுகளையும் செய்து, பெருமை சேர்த்திருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரத்தில் பாரதியாருடைய வீட்டையும், பாரதி பெயரால் இருக்கின்ற மணி மண்டபத்தையும் நான் நேரில் சென்று பார்த்தேன். மணி மண்டபத்தில் ஒரு நல்ல அருமையான நூல்நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே இருக்கின்ற நூல்களைத்தான்



2000 மார்ச் 7]

காணவில்லை. வெறும் மண்டபமாக இருக்கிறதே தவிர, 90 சதவீதம் நூல்கள் திருடுபோயிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற பாரதியினுடைய பிறந்த வீட்டிற்கு சென்று பார்த்தேன். அந்த வீட்டைக் காட்டுவதற்குக்கூட ஆள் கிடையாது. பக்கத்திலேயிருந்த ஒருவரை அழைத்து, அந்த வீட்டைப் பார்த்தோம். இதனையெல்லாம் அரசாங்கம் கவனிப்பதேயில்லை என்று அந்த ஊர்க்காரர்கள் மிகுந்த வேதனையோடு சொன்னார்கள்.

> 'தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
> கண்ணீரால் காத்தோம்'

என்று சொன்ன பாரதியினுடைய மணி மண்டபமும், அவருடைய வீடும் மிக அவலநிலையில் இருப்பதை அமைச்சரவர்கள் நேரில் சென்று பார்த்து, இனிமேலாவது பாரதியினுடைய நூல்களுக்கு, அவருடைய மணி மண்டபத்திற்கு, அவருடைய வீட்டிற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியாருடைய இல்லத்தைப் பெருமைப்படுத்துவதற்கு இந்த அரசு எவ்வளவு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எப்போது பார்த்தீர்கள்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஆறு மாதங்களுக்கு முன்பு நான் அந்த வீட்டையும், அவருடைய மணி மண்டபத்தையும் பார்த்தேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆறு மாதத்திற்கு முன்பு இருந்த நிலையை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பார்த்திருக்கிறார்கள். பார்த்தவர்கள், ஒரு கேள்வி வருகின்ற வரையில் காத்திருந்து இதைச் சொல்லாமல், உடனடியாக எனக்குச் சொல்லியிருந்தால், அதைக் கட்டளையாக ஏற்று, உடனடியாக அதைச் செய்து முடித்திருப்பேன். ஆறு மாத காலம் பொறுத்திருந்ததே, மாபெரும் குற்றம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரத்தில் இருக்கிற பாரதியாருடைய வீட்டைப் புதுப்பித்து, அங்கு வருகின்றவர்களுக்குத் தண்ணீர்

[2000 மார்ச் 7

வேண்டுமென்பதற்காகத் தனியாக போர்வெல் போட்டு, பம்ப் எடுத்துக் கொடுத்து, அதைப் புதுப்பித்திருக்கிறோம். மணி மண்டபத்தையும் புதுப்பித்திருக்கிறோம். அங்கேயுள்ள புத்தகங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. அங்கு உடைந்து போன நாற்காலிகளையும், கிழிந்து போன சோஃபாக்கள் இருந்ததையும் மாற்றி அமைத்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் எப்போது போனார் என்று தெரியாது. நானே போய் அந்த இடங்களைப் பார்த்துவிட்டு அந்தத் தெருவைச் சுத்தம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். எனவே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் ஒரு முறை சென்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** அங்கே இருக்கின்ற நூலகத்தைச் செம்மைப்படுத்திப் பயன்படுத்திக் கொள்வதற்காக நூலகத் துறையிடம் ஒப்படைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு இப்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. புத்தகங்கள் எதுவும் திருட்டுப் போகவில்லை. அதுமாத்திரமல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருக்கின்ற திருவல்லிக்கேணியில் இருக்கிற பாரதியார் இல்லத்தைப் பார்த்துவிட்டு, "இந்த அரசுபோல் தியாகிகளை மதிக்கிற அரசு எதுவும் இல்லை; அவ்வளவு சிறப்பாக இருக்கிறது" என்று மனசாட்சியுடன் பாராட்டியிருக்கிறார்; எழுதியும் இருக்கிறார். ஆகவே இவ்வளவு சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறோம்; குறை ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சென்னையிலேயுள்ள இல்லத்திற்கு நான் போன நேரத்திலே அமைச்சர் வந்திருந்தார். அங்கு எல்லோரும் சொன்னார்கள். நன்றாகத்தான் பண்ணியிருக்கிறார்கள். நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. எட்டயபுரத்தைப்பற்றி நான் இப்போது சொல்கிறேன். ஆகவே மறுபடியும் நம் பொதுப்பணித் துறை அமைச்சர், 'சரிபண்ணியாயிற்று' என்று சொல்கிறார். சரிபண்ணியிருந்தால் மகிழ்ச்சி. நம்முடைய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று அந்த இடத்தைப் பார்த்துவிட்டு இந்த அவையிலே சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 7]

**59—**

### மறுவாழ்வு மையம்

***22607—திரு என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், சின்னமனூரில் ஊனமுற்றவர்களின் பயிற்சிக்காக மாவட்ட மறுவாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் 1991 ஆம் ஆண்டினுடைய ஜனத்தொகை அடிப்படையில் நம் நாட்டிலே 2 சதவிகிதத்திற்குண்டான மக்கள் பல்வேறு வகையிலே ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரசினுடைய அறிக்கைகளைப் பார்க்கின்றபோது தமிழகத்திலே கிட்டத்தட்ட 11 இலட்சம் பேர் ஊனமுற்றவர்களாக இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஊனமுற்றவர்களுக்கு நம் தமிழகத்திலே 3% வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டும் என்று இருந்தாலும்கூட அவர்களுக்கு முழுமையாக அளிக்கப்படுவதில்லை. காரணம் என்னவென்று சொன்னால் அவர்களுக்குத் தகுந்த பயிற்சிப் பள்ளிகள் இல்லாததே; அல்லது பல்வேறு நிலைகள் காரணமாக இருக்கலாம். ஆகவே, தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஊனமுற்றவர்களுக்கு ஒரு மறுவாழ்வு மையமும், மறுவாழ்வு தரப்படுகின்ற மாணவர்களுக்கு ஓர் அரசு சிறப்புப் பள்ளியும் ஆரம்பிக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தேனி மாவட்டத்தை பொறுத்த அளவிலே கிட்டத்தட்ட 12 இலட்சம் மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசினுடைய அடிப்படையைப் பார்த்தால், 2% ஊனமுற்றவர்கள் என்று பார்த்தால் கிட்டத்தட்ட 2400 பேர்

[2000 மார்ச் 7

இருப்பார்கள். ஆனால் தமிழகத்திலே அரசு நடத்துகின்ற பள்ளிகளிலே பார்த்தால் மொத்தமே 8500 பேருக்குத்தான் ஊனமுற்றவர்களுடைய பள்ளிகளிலே அரசு பயிற்சி அளித்து வருகிறது. ஆகவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தளவிலே ஒரு பயிற்சிப் பள்ளியை அரசு மறுவாழ்வு மையத்தின் மூலமாக ஆரம்பிக்க வேண்டும்; அல்லது தனியார் யாராவது மறுவாழ்வு மையமோ சிறப்புப் பள்ளியோ ஆரம்பிப்பதாக இருந்தால் அவர்களுக்கு அரசு நிதி உதவி அளிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1997-ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையினைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்களும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள, மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படும் மறுவாழ்வு மையம் போன்று மாற்றப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட மறுவாழ்வு மையங்களிலே கீழ்க்காணும் பயிற்சி இயந்திரங்கள் நிறுவப்பட்டு இருக்கின்றன: தசைப் பயிற்சி உபகரணங்கள், பேச்சுப் பயிற்சி அளிக்க உபகரணங்கள், காது ரட்சை தயாரிக்கும் இயந்திரங்கள், கால் தாங்கிகள் மற்றும் ஊன்றுகோல்கள் கட்டமைக்க மற்றும் பழுதுபார்க்கத் தேவைப்படும் பணிமனைகள்; இதனைத் தொடர்ந்து 1989-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வந்த இளம்பிள்ளைவாத நிவாரணத் திட்டம் 1997 ஆம் ஆண்டிலிருந்து விரிவான மருத்துவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமே முகாம்கள் நடத்தி கண்டறியப்பட்ட நிலை மாறி, அனைத்து வகையான ஊனமுற்றவர்களையும் கண்டறிந்து, பாதிக்கப்பட்டவர்களைக் குணமடையச் செய்வதற்கான சிகிச்சைகளையும் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களையும் வழங்குவதற்கும் மருத்துவ மற்றும் பொருளாதார உதவிகளும் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இவ்வளவு நீளமான பதிலைச் சொல்லவேண்டியதில்லை. சின்னமனூரில் ஆரம்பிக்கப் போகிறீர்களா, இல்லையா? அதற்கு பதில் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** தேனி மாவட்டத்தில் தேனி நகரத்திலே மாவட்ட மறுவாழ்வு மையத்தின் மூலமாகப் பயிற்சிகள் பலவாறு வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசின் சார்பாகப்



2000 மார்ச் 7]

பள்ளிகள் தொடங்குவதற்கு இப்போது அரசிடம் குறிப்புகள் ஏதும் இல்லை. சின்னமனூர் ஊனமுற்றோர் இல்லம், பள்ளி தொடங்க தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வருமானால் அவற்றிற்கு அரசு உதவிகள் அளிக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

முற்பகல் 10-45

**60—**

### பட்டுச்சேலை நெசவு மையம்

***28204—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் கதர் வாரியத்தின் மூலம் ஒரு பட்டுச் சேலை நெசவு மையம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் கதர் வாரியத்தின் மூலம் பட்டுச் சேலை நெசவு மையம் ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது எதுவும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பொது விநியோக அரிசி கடத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாட்டில் சில பகுதிகளில் ரேஷன் அரிசி கடத்தப்படுவது குறித்து கனவ ஈர்ப்பு அறிவிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. பி. வெங்கடசாமி ஆகியோரும் கவன ஈர்ப்பு. சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ஐ. கணேசன், திரு. மு. அப்பாவு, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. லா. சந்தானம், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. சொ. கருப்பசாமி, டாக்டர் இஎஸ்.எஸ். இராமன் ஆகியோரும், ஒத்திவைப்புத் தீர்மானஅறிவிப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கே.ஆர். இராமசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. கே. சுப்பராயன், திரு. சொ. கருப்பசாமி, டாக்டர் அ. செல்லக்குமார், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோரும் கொடுத்திருக்கின்றார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. மு. அப்பாவு அவர்களை முதலில் பேச அழைக்கின்றேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கிடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உங்கள் பெயரைப் படித்தேனே, கேட்கவில்லையா?

**திரு. மு. அப்பாவு:** தமிழகத்திலே பொதுவிநியோகத் திட்டத்தில் உலகத்திலே எங்கும் நடைபெறாதவண்ணம் மிகப் பெரிய ஊழல், சுமார் 400 கோடி ரூபாய் அளவில் நடைபெற்றுள்ளது, நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றது. கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் தேதி தூத்துக்குடியிலிருந்து 20 கண்டெயினர்களில் சுமார் 420 டன் அரிசியானது பெங்களூருக்குக் கடத்தப்பட்டிருக்கின்றது. அதற்கடுத்து, பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி தூத்துக்குடியிலே இருக்கின்ற ஒரு கிட்டங்கியில் சுமார் 1000 டன் ரேஷன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து இவ்வாறு மிக அதிக அளவில் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி கடத்தப்படுவதற்கு முக்கியமான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தூத்துக்குடி. தூத்துக்குடியிலே Container Corporation of India என்று ஒரு மத்திய அரசினுடைய நிறுவனம் இருக்கிறது. அந்நிறுவனம்



துறைமுகத்திற்கு வருகின்ற, கப்பல்களிலே வருகின்ற சரக்குகளை அங்கிருந்து எந்தெந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டுமோ அந்தந்த இடங்களுக்கு கண்டெயினர்கள் மூலம் அனுப்புகின்ற பணியைச் செய்து வருகின்றது. அந்த Container Corporation of India-வில் பணியாற்றுகின்ற உயர் அதிகாரி, ஒரு பெண் அதிகாரி; டில்லியைச் சேர்ந்தவர். அந்தத் துறைமுகத்திற்கு வருகின்ற கண்டெயினர்களை எவ்வாறு இந்த Container Corporation of India அனுப்ப வேண்டுமென்றால், வெளிநாடுகளிலிருந்து என்ன பொருட்கள் வந்திருக்கின்றனவோ அப்பொருட்களை டிரெயின் மூலமாகவோ அல்லது ரோடு வழியாகவோ அனுப்ப வேண்டும். இந்த Container Corporation of India-விலிருந்து புதிதாக எந்தப் பொருளையும் அந்தக் கண்டெயினர்களில் ஏற்றுவதற்கு அனுமதி கிடையாது. அவ்வாறிருந்த பின்பும் அந்த உயர் அதிகாரியினுடைய துணையோடு, இந்தப் பொது விநியோகத் திட்டத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும், கடத்தல்காரர்களும் சேர்ந்து அனுப்பியிருக்கிறார்கள். பெங்களூரில் இருக்கின்ற டிரை டாக், கோயம்புத்தூரில் இருக்கின்ற டிரை டாக் போன்ற இடங்களுக்கெல்லாம் 200 முதல் 300 காலியான கண்டெயினர்களை அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அனுப்புவது வழக்கம். காலி கண்டெயினர்கள் என்ற போர்வையிலேயே இந்த ரேஷன் அரிசியானது மிக அதிக அளவில் அந்த கண்டெயினர்கள் மூலம் தமிழகத்திலிருந்து எல்லா இடங்களிலும் அங்கே போகின்ற வழியில் மதுரை, திண்டுக்கல், சேலம், ஈரோடு, தருமபுரி, போன்ற எல்லாப் பகுதிகளிலும் பொது விநியோகத் திட்டத்திலே இருக்கின்ற அரிசியை, அரசினுடைய அனுமதியோடு, ஆதரவோடு, உயர் அதிகாரிகளினுடைய ஆதரவோடு ஏற்றப்பட்டு பெங்களூருக்குக் கொண்டு சென்று பெங்களூரிலே அங்கிருந்து அனுப்புகின்றவர்கள் தவறான விலாசத்தைக் கொடுத்து, குறிப்பாக இங்கே அனுப்புகின்ற விலாசத்தார் லெக்ஷ்மி டிரேடர்ஸ் என்ற பெயரில் அனுப்பி, அங்கே பெறுகின்றவர்கள் யார் என்றால் -self- நானேதான் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, அங்கேயிருந்து எடுத்து அவர்களே அங்கிருந்து உலகத்தினுடைய பல பகுதிகளுக்கும் கொச்சின் துறைமுகம் வழியாக, மங்களூர் துறைமுகம் வழியாக, தூத்துக்குடி துறைமுகம் வழியாக, மாலத் தீவு, சிலோன் போன்ற இடங்களுக்குத் தொடர்ந்து இந்தக் கடத்தலானது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீங்கள் பத்திரிகையை எடுத்துப் பார்த்தால் தினமும் இந்தக் கடத்தல் தொழிலானது நடைபெறுவதாகப் பத்திரிகையிலே செய்தியைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் வேடிக்கை என்னவென்றால், கோடிக்கணக்கான ரூபாய்க்கு இங்கே கொள்ளையடிக்கப்பட்ட, இந்தத் தமிழகத்திலிருந்து கடத்தப்படுகின்ற

பொது விநியோகத்திற்குச் சொந்தமான ரேஷன் அரிசியைக் கடத்தியது யார் என்று கேட்டால் ஒரு சாதாரண லாரி டிரைவரும் கிளீனரும் என்று அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விட்டு ஒரு வாரத்திற்குள் அந்த வழக்குப் பதிவுகள், அங்கே பிடிக்கப்பட்ட அரிசியானது ரேஷன் அரிசி அல்ல, அது ஏற்கெனவே ஏலம் எடுக்கப்பட்ட அரிசி என்று இங்கே அமைச்சருடைய உதவியோடு, உயர் அதிகாரிகள் அதில் தவறான தகவல்களை, போலியான பில்களைக் கொடுத்து மறுபடியும் அந்த அரிசியை அங்கிருந்து அவர்களுக்கே திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கிற நிகழ்ச்சி சாதாரணமாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, ஓர் உண்மைச் சம்பவத்தைச் சொல்ல வேண்டுமென்றால் *2-1-1998* அன்று எட்டயபுரத்திலிருந்து தூத்துக்குடிக்குக் கடத்தப்பட்ட......

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. இடையிலே ஒரு வார்த்தை, அமைச்சர் உதவியோடு என்று சொன்னீர்கள். அதற்கு ஆதாரத்தை என்னிடம் காண்பிக்காமல் அமைச்சர் பெயரை வம்புக்கு இழுக்கக்கூடாது. ஆகையினாலே, நீங்கள் முறையாகப் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அருப்புக்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு இரண்டு லாரிகளில் வந்த கடத்தல் அரிசியை அப்போது கோவில்பட்டியில் தாலுகா விநியோக அதிகாரியாக இருந்த ராஜகோபால் என்பவர் பிடித்து வழக்குப்பதிவு செய்திருக்கிறார். ஐந்து தினங்களுக்குள் வழக்குப் பதிவு செய்த அதிகாரியையும் மீறி, அது கடத்தப்பட்ட அரிசி இல்லை என்று கூறி உயர் அதிகாரிகள் தலையிட்டு அந்த இரண்டு லாரிகளும் விடுதலை செய்யப்பட்டன. அதோடு மட்டுமல்லாமல் *7-1-1998* அன்று அதிகாலை 5¼ மணிக்கு தொலைபேசியிலே அவரை தாசில்தார் அழைப்பதாகக் கூறி தாலுகா அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று அழைத்திருக்கிறார்கள். அவரும் அதிகாலையில் எழும்பி தன்னுடைய மனைவியிடம் "காலை *9-00* மணிக்கு நான் திரும்ப வருவேன், எனக்கு நீ கோதுமை தோசை தயார் செய்து வை" என்று சொல்லிவிட்டுச் சென்று இருக்கிறார். சென்ற அரை மணி நேரத்தில் மீண்டும் தொலைபேசியிலே அழைத்து "உங்களுடைய கணவர் தற்கொலை செய்து கொண்டார், பெட்ரோல் ஊற்றி" என்று சொல்லி அடுத்த



தொலைபேசியிலே தகவல் வருகின்றது. அங்கே செல்கின்றார், பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டு ராஜகோபால் என்பவர் துடி துடிக்கச் சாகிறார். இதை அங்கே தாலுகா அலுவலகத்திலிருந்த காவலர் பார்க்கின்றார். எதிரே கிளைச் சிறைச்சாலை இருக்கின்றது. அதிகாலை *6-00* மணிக்கு இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது. சம்பவம் நடைபெற்றதும் அந்த இடத்திலே ஒரு வாட்ச் செயின் இருக்கின்றது. உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்படுகின்றது. பிரேதப் பரிசோதனையிலே அவர் கொலை செய்யப்பட்டார் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், காவல் துறை இது தற்கொலை என்று முடிவு செய்து, பின்பு C.B.,C.I.D-க்கு இந்த வழக்கை மாற்றி இரண்டு ஆண்டுகள் ஆகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதிலே உயர் அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் சம்பந்தம் இல்லை என்று எவ்வாறு கூற முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், கடந்த *15* தினங்களுக்கு முன்னால் இந்து பத்திரிகையிலே, தமிழகத்திலே மத்திய அரசு தொகுப்பிலிருந்து வழங்கப்படுகின்ற அரிசியானது முறையாக ஒருபோதும் மக்களைச் சென்று அடைவதில்லை, வெளி market-லேதான் முழுமையாக விற்கப்படுகின்றது என்பதை மத்திய அரசினுடைய உளவுத் துறையிலுள்ள உயர் அதிகாரிகள் இந்து நாளேட்டிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, இந்த மிகப் பெரிய கோடிக்கணக்கான ரூபாய் அளவில் கடத்தலைச் செய்த கடத்தல்காரர்களைப் பிடிப்பதற்காக உயர் அதிகாரிகள் மிகச் சிறந்த முறையிலே பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய கைகள் கட்டிப்போடப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன். காரணம், இந்த வழக்கிலே கைது செய்யப்பட்டுள்ளவர்களைப் பார்த்தால் கோவில்பட்டியைச் சேர்ந்த இசக்கியப்பன், கோபால்; அதேபோல விருதுநகரைச் சேர்ந்த செல்வராஜ்; தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வராஜ்; அருப்புக்கோட்டை அருகிலேயுள்ள முத்து; காமாட்சிபுரத்தைச் சேர்ந்த மூக்கன்; இவர்கள் எல்லாம் ஒரு நாள் சாப்பாட்டிற்குக்கூட வழி இல்லாதவர்கள். இவர்களால் எப்படி, கோடிக்கணக்கான ரூபாய்க்கான

பொது விநியோகத் திட்டத்திலுள்ள அரிசியினைக் கடத்த முடியும்? இது இன்று நேற்று அல்ல; ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி என்று நான் சொல்லவில்லை. இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு நிகழ்ச்சி. இதற்கு அரசினுடைய, அமைச்சருடைய அனுமதி இல்லாமல், அமைச்சருடைய துணை இல்லாமல், அமைச்சருக்கு முழுமையாகத் தெரியாமல் அமைச்சருக்கு அருகில் இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இந்தக் கடத்தல் சம்பவம் ஒருபோதும் நடைபெற்றிருக்க முடியாது. இதைவிட இன்னும் ஒரு படிக்கு மேலே சென்று, சொன்னால்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போதுதான் சொன்னார். உயர் அதிகாரிகள் சிரமப்பட்டு, நேர்மையாக நடந்து கொண்டு அவர்களையெல்லாம் பிடித்திருக்கிறார்கள் என்று சொன்னார். அடுத்த வார்த்தையிலே, அதிகாரிகள் அதற்கு உதவினார்கள் என்று சொல்கிறார். இதிலே எந்தக் கூற்று உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

*முற்பகல் 10-55*

இன்னொன்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவத்தைச் சொல்லி அது தற்கொலையா, கொலையா என்று கேட்டார். இரயிலிலே, ரேஷன் அரிசி கடத்தப்பட்டது என்பதைப்பற்றித்தான் இப்போது அவையிலே, விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு கொலை அல்லது தற்கொலை என்று அதற்கும் இதற்கும் ஏன் முடிச்சுப் போடுகிறார் என்று தெரியவில்லை. இதிலே அமைச்சருக்கு சம்பந்தம் இருக்கிறது என்றால், ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லுங்கள். எதற்கும் நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயார். அதைப்போல உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களும்,பொறுப்பேற்றுக்கொண்டு ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். இதிலே அமைச்சருக்கு உடந்தை, அமைச்சருக்குத் தெரியும், அமைச்சருக்கு இதிலே உடன்பாடு உண்டு என்று ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். பொறுப்பு இல்லாமல் பேசுவது நல்லதல்ல. பொறுப்பேற்றுக் கொண்டு பேச வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற கொலை அல்லது



தற்கொலைச் சம்பவத்தை நான் தொடர்புபடுத்திப் பேசுவதற்குக் காரணம் தொடர்பு இருப்பதால்தான். எட்டயபுரத்திலிருந்து தூத்துக்குடிக்கு ரேஷன் அரிசியை இரண்டு லாரிகளில் கடத்திச் சென்றதை அந்த அதிகாரி பிடித்து, அதற்கு வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். உயர் அதிகாரிகள் தலையிட்டு, உடனடியாக, அந்த லாரியும் அந்த அரிசியும், யார் கடத்தினார்களோ அந்த உரியவர்களுக்கே மீண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ரேஷன் அரிசியைக் கடத்தியதால்தான். அவர்களைக் காலை ஐந்தேகால் மணிக்குத் தொலைபேசியில் அழைத்து, அங்கே கொலை செய்திருக்கிறார்கள். கொலை என்று தெளிவாகத் தெரிந்து சர்வகட்சியினரும் அங்கே உண்ணாவிரதமும் மறியலும் செய்த பின்புதான் அரசு C.B., C.I.D.-க்கு அந்தக் கேசை மாற்றியிருக்கிறது. Post-mortem report-ல் கொலை என்று இருக்கிறது. ஆகவே, இதில் கூடத் தொடர்பு இல்லை, இது அரசுக்குத் தெரியாது; அமைச்சருக்குத் தெரியாது என்றால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தெரியவந்த காரணத்தால்தான் C.B., C.I.D. விசாரணை போடப்பட்டிருக்கிறது. C.B., C.I.D. விசாரணை போடாமல் தட்டிக் கழிக்கவில்லை.

**திரு. மு. அப்பாவு:** உயர் அதிகாரிகள் எல்லாம் தொடர்பு என்று சொல்வது, கடத்தலில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைத்தான் நான் குறிப்பிடுகின்றேனே தவிர வேறல்ல.

அதேபோன்று இந்தத் தடுப்புத் துறையிலே பதவியேற்றிருக்கிற ஓர் உயர் அதிகாரிதான், அவர் வந்தபின்புதான் இந்தக் களவைக் கண்டுபிடித்தார் என்பதை நான் சொல்வதோடு, மீண்டும் அவர்கள் உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்வதற்கோ, நடவடிக்கை எடுப்பதற்கோ முடியாமல் அவர்களுடைய கை கட்டப்பட்டிருப்பதாக அறிகிறேன் என்பதை மட்டும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, இதில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் யார் யார்—இது சாதாரண ஆட்கள் செய்ய முடியாது என்பதால், அவர்கள் யார் யார்—என்பதை இந்த அரசு மக்களுக்குத் தெரியப்படுத்தியாகவேண்டும். இதிலே சம்பந்தப்பட்ட, மிகப்பெரிய அளவில் அதாவது கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் அளவில் ஊழல் செய்தவர்கள் யார் யார் என்பதையும், மிகப்பெரிய . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** உண்மைக்கு மாறான ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று ஒரு பொன்மொழியை அவரே வகுத்துக்கொண்டு பேசுகின்றார் என்று

கருதுகிறேன். கடத்தப்பட்ட அரிசி ரூபாய் 400 கோடி என்கிறார். 387 டன் அரிசிதான் கடத்தப்பட்டது; 387 டன். அது 4 கோடியோ 400 கோடியோ அல்ல. ஒரு கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசு வீதம், ஒரு டன் அரிசி விலை எவ்வளவு ஆகிறது? 387 டன் அரிசி எவ்வளவு ஆகிறது என்று பார்த்தால், 13 லட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாய்தான். ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விற்றிருந்தால்கூட, 38 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்தான். இது எப்படி 400 கோடி ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை.

இரண்டாவது, அமைச்சருக்குச் சம்பந்தம் உண்டு என்று சொன்னதற்கு, உறுப்பினர் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார்களா என்றுதான் கேட்டேன். அதற்குப் பதில் சொல்ல வேண்டும். பொறுப்பேற்றுக்கொண்டு ஆதாரம் தர வேண்டும் இந்த அவையில். (குறுக்கீடு) (திரு. ச. அழகிரி எழுந்தார்) நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வது என்றால் இதிலே சொல்லுங்கள். இல்லாவிட்டால், யார், எந்த உறுப்பினர் பேசினாரோ அவர்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் அவருக்காகப் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. அவர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். பொறுப்பேற்று ஆதாரத்தை இன்றோ நாளையோ இந்த அவையிலே கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி, என்ன சொல்கிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் எப்படி அமைச்சருக்காகப் பேசுகின்றார்களோ, அதைப்போல நான் எங்கள் உறுப்பினருக்காகப் பேசுகிறேன்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, முதலமைச்சர் இந்த அவையிலே உள்ள அனைத்து அமைச்சர்களுக்கும் சேர்த்து பொறுப்பேற்று, பதில் சொல்லக் கடமைப்பட்டவர். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இன்னொரு உறுப்பினருக்காகப் பொறுப்பேற்றுப் பேசுவது என்பது அவை மரபு அல்ல. அவை மரபை மீறி அப்படி ஒரு பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அதைப்பற்றிக் கருதவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி என்ன சொல்கிறீர்கள்? Is it a point of order?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of clarification. நான் ஒரு தகவலைத் தெரிந்து கொள்ள



விரும்புகிறேன். பிரிட்டிஷ் பாராளுமன்ற விதிகளின் பிரகாரம், ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அதனை அவர் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்கிற அவசியம் கிடையாது. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள். அவசரப்படாதீர்கள். (குறுக்கீடு) இருங்கள். நான் சொல்கிறேன். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே ஓர் ஆளும் கட்சி அமைச்சர் ஒரு புதிய கார் கம்பெனிக்காக 10 இலட்ச ரூபாய் பெற்றுக்கொண்டு அனுமதி அளித்தார் என்கின்ற ஒரு குற்றச்சாட்டை எதிர்க்கட்சி சொன்னபோது சபாநாயகர் அதை அனுமதித்தார். ஆளும்கட்சி எதிர்த்தபோதுகூட அதற்கு அனுமதி அளித்தார். அதில் என்ன விஷயம் என்றால், ஆளும் கட்சிக்குத்தான் ஒரு பிரச்சினையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, ஆதாரம் சொல்வதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது. எதிர்க்கட்சி என்கிற வகையிலே நாங்கள் குற்றம் சொல்கிறோம், இந்தக் குற்றத்தை நாங்கள் செய்யவில்லை என்று ஆளும் கட்சிதான் நிரூபிக்க வேண்டுமே தவிர, எதிர்க்கட்சி நிரூபிக்க முடியாது.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் நன்றாக வாதிட்டிருக்கிறார். ஆதாரம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கிறார், அதிலிருந்து ஆதாரம் இல்லை என்று தெரிகிறது. ஆக, ஆதாரமில்லாமல் பேசுகிறார் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** உறுப்பினர் அப்பாவு தன்னுடைய உரையை முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேசுவதற்கு அனுமதி கிடையாதா? தெரியாமல்தான் நான் கேட்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அவர் இன்னும் பேசி முடிக்கவில்லை என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழகிரி ஒரு கருத்தைச் சொல்கிறார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு நான் நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். அங்கே என்ன நடைமுறை என்பதை அவரிடம் விளக்கிச் சொல்லியாகவேண்டும். இல்லையென்றால் தவறான தகவல் ஆகிவிடும். எந்தப் பாராளுமன்றமாக இருந்தாலும் பேரவைத் தலைவரிடம்

கொண்டுபோய்க் காட்டியாக வேண்டும், அரசிடம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நம்முடைய விதியில் ரொம்பத் தெளிவாக இருக்கிறது.

RULE-93

``No Personal allegation of a defamatory or increminatory nature shall be made by a member against any Member or any official unless the Member has given previous intimation, in writing, to the Speaker, the Minister or the Member concerned so that the Minister or the Member may be able to make an investigation into the matter for the purpose of a reply..."

இதுதான் நமது விதி. ஆகையால் ஏதாவது குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் என்னிடம் வந்து அந்த ஆதாரத்தைக் காட்டிவிட்டுப் பேச வேண்டும். எந்தப் பாராளுமன்றத்திலும் இதுதான் விதி. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே வேறு விதி கிடையாது. ஆகையால் நீங்கள் குற்றச்சாட்டுச் சொல்கிறபோது ஆதாரத்தோடு பேச வேண்டும். இப்போது பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நாடறிந்த..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்களுக்கு இந்தமாதிரி ஐயப்பாடு இருந்தால், "இந்த மாதிரி பேசுகிறார்கள். முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அது உண்மையா என்று விசாரி[illegible]" என்று சொன்னால் அது வேறு. "இவருடைய உடந்தை இல்லா[illegible]டந்திருக்க முடியாது" என்று சொல்வதை அனுமதிக்க முடியாது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் துறையிலே நடந்திருக்கக் கூடிய ஊழலை உயர் நீதிமன்றமே ஒத்துக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே, புதிதாக.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கிற பொருள் குறித்துத்தான் பேச வேண்டும். தமிழ்நாடு முழுவதும் இருப்பதைப்பற்றிப் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. கண்டெய்னர் மூலம் அரிசி கொண்டு போனதைக் குறித்துத்தான் சிறப்பு கவன ஈர்ப்பு. அது விஷயமாகப் பேசுங்கள். அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.



**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, ** அந்த அளவிற்கு, இந்தத் துறை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல. உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன். தொடர்புடைய பொருள் குறித்துதான் பேசவேண்டுமே தவிர, முக்கியமானதென்றால், ஆளுநர் உரையில் உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தபோது, முழுவதையும் பேசியிருக்கலாம். உள்ளதை விட்டு விட்டுக் கண்டதையெல்லாம் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள். உங்கள் பேச்சு முடிந்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** ஆகவே, இதில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் யார் யார் என்பதை தெரிவிப்பதோடு, Container Corporation Of India Limited-ல் செயல்பட்டு வந்த, நம்முடைய தூத்துக்குடியில் உயர் அதிகாரியாக பணியாற்றி வந்தவர்கள் மீது விசாரிப்பதை விட்டுவிட்டு, மத்திய அமைச்சருடைய உதவியோடு அவருக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, அவர் டெல்லிக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார். அவர்கள் உதவி செய்ததாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே அவர்களை அழைத்து வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாநில அமைச்சர் பேரிலேயே ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுச் சொல்லக்கூடாது. மத்திய அமைச்சரைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் பேசுவதாக இருந்தால் முறையாகப் பேசுங்கள். இல்லையென்றால் உங்கள் பேச்சை நான் நிறுத்திவிடுவேன்.

**திரு. மு. அப்பாவு:** அந்தப் பெண் அதிகாரியை விடுமுறையிலிருந்து அழைத்து வந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய அரசு, மத்திய அரசு அதிகாரியைப் பற்றி இங்கே பேசாதீர்கள், உட்காருங்கள். அடுத்து, திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) நீங்கள் முடித்தாகிவிட்டது. நீங்கள் முறையில்லாமல் பேசுவதற்கு நான் அனுமதி அளித்துக் கொண்டிருக்க முடியாது.

*முற்பகல் 11-05*

**திரு. மு. அப்பாவு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அளவில் பெரிய அளவில், நடைபெற்ற இந்தக் கடத்தலைப்பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முழுமையாகத் தெரிந்திருக்காது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று நினைக்கிறேன். தெரிந்திருந்தால் உடனடியாக அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இந்த நேரத்தில் நான் முழுமையாக இந்த ஊழலைச் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வண்ணம், இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற இந்தத் துறை அதிகாரிகள் மீதும், அமைச்சர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்கள் மீது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப நீங்கள் அமைச்சர் மீது என்று சொல்வதை நான் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம் என்றால் மாண்புமிகு உறுப்பினர்கூட அதற்குக் காரணம் என்று சொல்லிவிடலாம்; சுலபம் அது. அதை ஆதாரம் இல்லாமல் சொல்லலாம். ஆதாரம் தேவையில்லை என்றால், ஆதாரம் இல்லாமல் அதையும் சொல்லலாம். திரும்பத் திரும்பத் சபாநாயகரும் சொன்ன பிறகும், விவாதத்திலே பல விஷயங்களை எடுத்துக்காட்டிய பிறகும் மறுபடியும் அதையே திரும்பத் திரும்பச் சொல்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. பழனிசாமி..

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு பேசும்போது "திருநெல்வேலி மாநகராட்சிமன்றத்தில் ஒரு பொருள் வாங்கியதில் ஊழல் நடந்திருக்கிறது" என்று குறிப்பிட்டார். அது அவைக் குறிப்பில் இருக்கிறதா அல்லது நீக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது உறுப்பினர் சொன்னது குறிப்பில் ஏறியிருக்கிறதா. இல்லையா? நான் அப்போதே அவரைக் கேட்டேன்; "ஆதாரம் இருந்தால் தெரிவியுங்கள், பொறுப்பு ஏற்கிறேன்" என்று சொன்னேன். அவர் Choke-ஐ என்னுடைய சொந்தக்காரர் கடையில் வாங்கியதாகவும் அந்த ஊழலுக்குப் பொறுப்பு ஏற்பதாகவும் சொன்னார். அதற்கான ஆதாரம் இருந்தால் தெரிவிக்கலாம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற 104 நகராட்சிகளிலும் 6 மாநகராட்சிகளிலும் வாங்கப்பட்டிருக்கிற Chokes....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நான் இப்போது அனுமதிக்க முடியாது. உங்களிடம் ஏதாவது ஆதாரம் இருந்தால் என்னுடைய அறையில் வந்து கொடுங்கள். அடுத்து திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் அரிசி தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்குக் கடத்தப்பட்டிருக்கிறது. இந்த அரிசி சாதாரண ஏழை எளிய மக்கள், எவ்வளவு மோசமாக இருந்தாலும், அல்லது புழுவாக இருந்தாலும், அல்லது கற்கள் கொண்டதாக இருந்தாலும், மணிக் கணக்கிலே வரிசையில் நின்று வாங்கிச் சாப்பிடக் கூடிய அரிசி சுமார் 18 வேகன்களில் கடத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக 387 டன் அரிசி, 7,740 மூட்டை அரிசி; ஏனென்றால் ஒரு மூட்டை, இரண்டு மூட்டைகள் அல்லது 100 மூட்டைகள் அல்ல, 7000-க்கு மேற்பட்ட மூட்டைகள் அரிசி கடத்தப்பட்டிருக்கிறது. இதற்குக்கூட 2,25,150 ரூபாய் அதற்கான இரயில்வே கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது. 2,25,150 ரூபாய் கட்டணம் செலுத்தி இந்த அரிசி கடத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று 'லக்ஷ்மி டிரேடர்ஸ்' என்ற பெயரிட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இது போலி பெயரில் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏதோ சாதாரணமான முறையில் அமுதம் அங்காடியில் விநியோகம் செய்யக்கூடிய நபர்கள் அதாவது ஒரு Salesman ஒரு மூட்டை, இரண்டு மூட்டைகளைக் கொண்டுபோய் ஒரு ஓட்டலுக்கோ அல்லது கடையிலோ விற்றதாகக் கருதிவிடமுடியாது. 7000 மூட்டைகள் 18 வேகன்களில் போய் இருக்கின்றன என்று சொன்னால் அதுவும் ரேஷன் அரசி போகிறது என்று சொன்னால் சாதாரணமாக வியாபாரிகள் குடோனிலிருந்து வெளிமாநிலங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்குக் கொண்டு போவதல்ல; எனக்கே என்ன சந்தேகம் வருகிறது என்று சொன்னால், இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலத்திலும் இருக்கிற தமிழர்களுக்கு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமலேயே இப்படி அரிசியைத் தமிழக அரசு வழங்குகிறதா என்கிற சந்தேகம் கூட நமக்கு எழுகிறது. ஏனென்றால் வெளிமாநிலத்தில் இருக்கிற தமிழர்களுக்கு பல்வேறு சலுகைகளை நமது மாநில அரசு செய்வது போல, இதுபோன்று அரிசியையும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமல் மாநில அரசு வழங்குகிறதா என்கிற ஒரு சந்தேகம் தமிழ்நாட்டு மக்களுக்கு எழுந்திருக்கிறது. எனவே உரிய வகையில் முறையாக விசாரணை நடத்தப்பட வேண்டும். மாவட்ட

நீதிபதிகளைக் கொண்டு இது விசாரிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளைக் கொண்டு Sitting Judges-ஐக் கொண்டு விசாரணை செய்ய வேண்டும். அப்படி விசாரணை செய்தால்தான் விவரம் தெரியும். ஏதோ சாதாரணமான அதிகாரிகள், கீழ்மட்டத்திலே இருக்கக்கூடியவர்கள் செய்கிற காரியம் அல்ல; அநேகமாக உயர் அதிகாரிகள் இதிலே சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் சம்பந்தப்படாமல் இவ்வளவு பெரிய தொகைக்கு அரிசி கொண்டு போவதற்கு வாய்ப்பே கிடையாது. ஆகையினால் நீதிபதிகளை வைத்து விசாரணை செய்வதோடு, இதற்குச் சம்பந்தப்பட்டிருக்கிற மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தார்மீகமான பொறுப்பேற்று அமைச்சர் பதவியிலிருந்து, விசாரணை முடியும் வரை விலகி இருப்பதுதான் தார்மீகக் கடமையாக இருக்கும். அதற்குரிய முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகக் கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஏழை மக்களுக்குச் சென்று அடையக்கூடிய கிட்டத்தட்ட 387 டன் அரிசியை தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்குக் கடத்தியிருக்கின்றார்கள். தூத்துக்குடியிலிருந்து 18 வேகன்களில் பெங்களூருக்கு அந்த அரிசி கடத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கடத்தல் சம்பவத்தைப் பற்றி அப்பாவு அவர்கள் கூறும்போது, இந்து பத்திரிகை பற்றி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதிலே வந்த செய்தியிலிருந்து ஒன்றைச் சொல்ல அவர்கள் மறந்துவிட்டார்கள். இந்த நிகழ்ச்சியானது 1996 ஆம் ஆண்டு முதல் நடந்து கொண்டிருப்பதாகவும், அதிலே—25 per cent of P.D.S. Rice is being diverted every month—அதாவது ஒவ்வொரு மாதமும் மத்தியத் தொகுப்பிலிருந்து கொடுக்கக்கூடிய அரிசியிலிருந்து 25 சதவீத அரிசி கடத்தப்பட்டிருக்கின்றது என்று மத்திய அரசின் Survey கூறுகிறது என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் கிட்டத்தட்ட 1996 ஆம் ஆண்டு முதல் இதுவரை 1,400 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி இந்த ஆட்சியிலே கடத்தப்பட்டிருக்கிறது. அந்த அரிசியை தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கப்பல் வழியாக இதுவரை கடத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால், சமீபகாலமாக அந்தத்



துறைமுகத்திலே ஊழியர்கள் strike செய்த காரணத்தினால் அந்தத் துறைமுகத்திலேயிருந்து கப்பலில் கடத்துவதற்குப் பதிலாக இப்போது கன்டெய்னரிலே கடத்தியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 387 டன் அரிசி; மாண்புமிகு முதல்வருடைய கூற்றுப்படியே பார்த்தாலும்—அவருடைய கூற்றுப்படி 3.50 ரூபாய் என்று கூறியிருக்கின்றார்—அதனுடைய விலை 6 ரூபாய். 6 ரூபாயை 12 ரூபாய் அளவுக்கு அங்கே விற்றால்கூட கிட்டத்தட்ட அதனுடைய மதிப்பு ஒரு கோடி ரூபாய் என்று கருதுகின்றேன். ஆகவே, (குறுக்கீடு) 40 இலட்சம் ரூபாய் என்பது 3.50 என்று நீங்கள் குறிப்பிடுவதால். (குறுக்கீடு) சரி 40 இலட்சம் ரூபாய்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பதில் சொல்லும்போது கவனிக்காமல், முன்னுக்குப்பின் முரணாகப் பேசக்கூடாது. நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். ஒரு கிலோ அரிசி ரூபாய் 3.50 என்றால் ஒரு டன் அரிசி 3,500 ரூபாய். 387 டன் அரிசி 13,54,500 ரூபாய். 10 ரூபாய் என்று வைத்துக் கொண்டு கணக்கிட்டால் 38,70,000 ரூபாய் என்று அப்போதே தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த 18 கன்டெய்னர்களில் சென்ற அரிசியைப் பொறுத்த அளவில் அதைச் சாதாரணமாக அவர்கள் கடத்தியிருக்க முடியாது. நீங்கள் பதில் கூறும்போது, அமைச்சராக இருந்தாலும் முதல்வராக இருந்தாலும் பதில் கூறலாம், " நாங்கள் அதிலே ஒருவரைக் கைது செய்திருக்கின்றோம், அவரிடம் விசாரணை செய்து கொண்டிருக்கிறோம்" என்று. அந்தச் சம்பவத்திலே நீங்கள் கைது செய்திருப்பதைப் பொறுத்தவரையில் கோவில்பட்டியைச் சேர்ந்த இசக்கியப்பன் என்பவரைக் கைது செய்திருக்கிறீர்கள். அந்த இசக்கியப்பன் இதில் சம்பந்தப்பட்டவர்களாக அங்கே இருக்கின்ற கோபால், ஜெகதீசன் என்று இரண்டு நபர்களைப் பற்றி கூறியிருக்கின்றார். நீங்கள் ஜெகதீசன் என்பவரை இன்னும் கைது செய்யவில்லை. கோபால் என்பவரைக் கைது செய்யவில்லை. இதிலே ஜெகதீஸ் என்பவர் தன்னுடைய பெயரிலேயே பெங்களூரில் அந்த அரிசியை வாங்குவதற்காக 2¼ இலட்சம் ரூபாய் பணம் கட்டியிருக்கிறார். இரயில்வேயிலே 2¼ இலட்சம் ரூபாய் பணம் கட்டி அதை receive பண்ணுபவர்—அதை வாங்குபவர்—பெயர் ஜெகதீசன். அந்த ஜெகதீசனைப் பொறுத்தவரை இன்றைய உணவு அமைச்சருக்கு மிக நெருங்கியவர் என்று எனக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் வேண்டுமானால் ஜெகதீசனுக்கும் உணவு அமைச்சருக்கும் என்ன உறவு என்று விசாரித்துப் பாருங்கள்.

[2000 மார்ச் 7

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் கேள்விப்பட்டது, சுந்தரத்திற்கு வேண்டியவர் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்படிப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது. ஜெகதீசன் என்பவருக்கும் நேருவுக்கும் இருக்கின்ற உறவை நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் பேசவிருக்கிறார்; முதலமைச்சர் பேசவிருக்கிறார். நீங்கள் சொன்ன கருத்துக்கு மறுப்பு, பதில் சொல்வார்கள்.

முற்பகல் 11-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஜெகதீசனுக்கும் சுந்தரத்துக்கும் உள்ள தொடர்புபற்றி முதல்வர் அவர்கள் சொன்னால், அதற்கு நான் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எனக்கும் ஜெகதீசனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மாதிரி அவர் சொல்லப் போகிறார். நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆகவே, இதிலே என்ன ஆதாரம் இருக்கிறது, என்ன ஆதாரம் இருக்கிறது என்று எதிர்க் கட்சிகளை நீங்கள் மிரட்ட வேண்டாம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் பார்த்து, மிரட்டுவதாகப் பேசினால், நிச்சயமாக மிரட்டுவேன். ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டது பேரவைத் தலைவர். ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினர் மீதோ, அமைச்சர் மீதோ, முதலமைச்சர் மீதோ குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால், ஆதாரத்தைக் கொண்டுவந்து பேரவைத் தலைவர் அறையிலே காண்பித்து, Prima-Facie case இருக்கிறது என்று தெரிந்ததற்கு அப்புறம் பேச வேண்டும். இது சட்டம். இதை, நான் யாரையும் மிரட்டுவதற்காகச் சொல்லவில்லை. பேசுங்கள்.



2000 மார்ச் 7]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய கேள்வி, நீங்கள் ஜெகதீசனை இன்னும் ஏன் பிடிக்கவில்லை என்பதுதான். இதிலே ஒரு மர்மம் இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதில் கருத்து வேறுபாடே எனக்குக் கிடையாது. ஜெகதீசனை ஆளும் கட்சிக்கு வேண்டியவர் என்று நீங்கள் ஏதோ சொல்கிறீர்கள். பதில் சொல்கிறபோது, அது பற்றி சொல்வார்கள். நீங்கள் அடுத்த point-க்குப் போங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதிலே உயர் அதிகாரிகள், இன்றைக்கு அரசாங்கத்திடம்கூடப் பேசிக்கொண்டு, அரசாங்கம் அவர்களை நிர்பந்தப்படுத்தி, நீங்கள் C.B., C.I.D. பற்றிக் கூறி இருக்கின்றீர்கள்; நீங்கள் வைத்த C.B., C.I.D. விசாரிக்கின்ற விசாரணை எப்படிச் சரியாக இருக்க முடியும்? அவர்கள் இன்றைக்கு அரசாங்கத்திடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அரிசியைப் பிடித்தது யார்? களவு போன அரிசியைப் பிடித்தது யார்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அரிசியைப் பிடித்தது Food Cell பிரிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களையே நம்ப முடியாது என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால் எப்படி?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Food Cell பிடித்து இருக்கிறார்கள். Food Cell பிடித்ததற்குப் பின்னாடி, ஒரு நபரை மட்டும் பிடித்துவிட்டு, இன்னும் முக்கியமான நபர்களைப் பிடிக்க முடியாததைத்தான் நான் குற்றம் சாட்டுகிறேன். அதிலேதான் உள் அர்த்தம் இருக்கிறது என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு நபரைத்தான் பிடித்தார்கள் என்பது தவறான கருத்து. ஒரு நபரை அல்ல. 4, 5 பேர் பிடிபட்டு இருக்கிறார்கள். இன்னும் 4 அல்லது 5 பேர் தேடப்படுகிறார்கள். ஒரு நபர் மாத்திரமல்ல; 4, 5 பேர் இதுவரையிலே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்; 4, 5 பேர் தேடப்படுகிறார்கள். புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; விசாரணை முடிந்துவிடவில்லை. இவ்வளவுதான் என்று அறுதியிட்டுக் கூறிவிடவில்லை. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துவிடவில்லை. புலன் விசாரணை நடைபெறுகிறது. அது நடைபெற்று முடிந்த பிறகு, இன்னும் கைது செய்யப்பட வேண்டியவர்களும் கைது செய்யப்படுவார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்தப் பெரிய கடத்தலுக்கு ஆதாரமாகப் பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கிறது. அமைச்சருடைய ஆசிர்வாதம் இல்லாமல், அவருடைய ஒத்துழைப்பு இல்லாமல், இந்த அரிசிக் கடத்தல் நடந்து இருக்க முடியாது என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்து இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'தான் திருடி பிறரை நம்பாள்' என்று ஒரு பழமொழி உண்டு. அதை நம்முடைய சுந்தரம் அவர்கள் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் சொல்வதையே திரும்பத் திரும்ப நானும் சொல்கின்றேன். ஒரு பொய்யை நீங்கள் திரும்பத் திரும்பக் கூறினால், அது உண்மை ஆகிவிடாது. எங்களுடைய குற்றச்சாட்டு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் நண்பர் சுந்தரத்துக்குச் சொல்கிறேன். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால், அது உண்மையாகிவிடாது என்பதை திரு. சுந்தரம் அவர்களுக்கு நானும் நினைவூட்ட விரும்புகின்றேன். அதுமாத்திரமல்ல, வேடிக்கை என்னவென்றால், இது களவு போய்விட்ட பொருள் பிடிபடவில்லை என்றால், பேச வேண்டிய பேச்சு; கடத்தப்பட்ட பொருள் பிடிபடவில்லை என்றால், பேச வேண்டிய பேச்சு; கடத்தியவர்களைப் பிடிக்கவில்லையென்றால், பேசவேண்டிய பேச்சு; இப்போது ஏன் கடத்தியவர்களைப் பிடித்தீர்கள் என்று எங்களைக் குற்றம் சாட்டுவது போலப் பேசிக்கொண்டிருக்கிறார்; அதுதான் வேடிக்கை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மூல காரணமாக இருந்தவர்களை நீங்கள் பிடிக்கவில்லை. அதைத்தான் நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்கின்றோம். உங்களுக்கு ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன் இந்த அரிசிக் கடத்தலைப் பொறுத்தவரையில் 1992 ஆம் ஆண்டு Consumer Act அதாவது Co-operation, Food and Consumer Protection Act—என்று ஒரு சட்டம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அதனுடைய G.O.Ms. எண். 30, நாள் 21-1-1992. இதிலே, ஒரு கிலோ அரிசி திருடி இருந்தால், அந்த ஒரு கிலோ அரிசித் திருட்டுக்கு சம்பந்தப்பட்டவர் யார் என்று கண்டுபிடித்து, அதற்கு ஈடாக 4 கிலோவுக்கு உண்டான பணத்தை அவரிடமிருந்து வசூல் செய்ய வேண்டும். இதுதான் அந்தச் சட்டத்தினுடைய ஷரத்து. நாங்கள் கூறுகின்றோம், இதிலே மாநில உணவு அமைச்சருக்குத்



தெரியாமல் இந்தத் திருட்டு நடைபெறவில்லை. ஆகவே, முதலில் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் கூறியதுபோல, அதற்குத் தார்மீகப் பொறுப்பு ஏற்று அமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும். ஆனால், முதல்வர் அவர்கள் பேசியதிலிருந்து, அவரை ராஜினாமா செய்யக் கோரமாட்டார்கள் என்பது நன்றாக எங்களுக்குத் தெரியும். அப்படி இல்லையென்றால் இதற்கு முழுப்பொறுப்பு முதல்வர்தான். ஆகவே முதல்வர் அவர்கள் கண்டிப்பாக இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்யவேண்டும். (கூச்சல்-குழப்பம்) அதற்கு முன்பாக... (கூச்சல்-குழப்பம்) முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டும். தார்மீகப் பொறுப்பேற்று முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டுமென்கிற என்னுடைய கருத்தை நான் கூறுகிறேன். (கூச்சல்-குழப்பம்) இதிலே என்ன தவறைக் கண்டுபிடித்துவிட்டீர்கள்? ஏன் கூச்சல் போடுகிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்).

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது சாதாரண விஷயம் அல்ல. மக்களுடைய வயிற்றிலே அடித்திருக்கிறீர்கள். (கூச்சல்-குழப்பம்) கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களெல்லாம் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் முதலமைச்சர் மீது குற்றச்சாட்டு சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? இது நடந்து 15 நாட்கள் ஆயிற்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 4 தடவை குற்றஞ் சாட்டியாயிற்று. பிறகு, என்ன தவறு, என்ன தவறு என்று யாரைக் கேட்கிறீர்கள்? நீங்கள் பேச்சை முடியுங்கள். தார்மீகப் பொறுப்பேற்று முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டுமென்பது உங்கள் பேச்சு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதற்கு முன்பாக—முதல்வர் கூற்றுப்படியே 40 இலட்சம் ரூபாய் என்றாலும், அதன் 4 மடங்கு, அதிகப்படியான அபராதத் தொகையை விதிக்க வேண்டும். அதற்கு உணவு அமைச்சர் பொறுப்பேற்று உடனடியாக அந்த அபராதத் தொகையைக் கட்ட வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, என்ன நடவடிக்கை எடுத்தீர்கள், என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டார்கள். 7 குற்றவாளிகள்—நான் 5 பேர் என்று சொன்னேன். சரியில்லை. இந்த வழக்கில் இதுவரையில் 7 குற்றவாளிகள்—கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கோவில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் ரேஷன் அரிசியைக் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட பழனி செல்வத்திற்குச் சொந்தமான 5 லாரிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. திரு. அப்பாவு அவர்கள் பேசும்போது சொன்னார்கள், "அவர்களெல்லாம் அன்றாடங்காய்ச்சிகள், அவர்களைப் போய்க் கைது செய்திருக்கிறார்கள்" என்று. பழனி செல்வத்திற்குச் சொந்தமான 5 லாரிகள் கைப்பற்றப்பட்டு உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு போலீசார் வசம் அந்த லாரிகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்கார்ந்த பிறகு, அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்ட பிறகுதான் முதல்வர் பேச ஆரம்பித்தார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதல்வர் எழுந்தவுடன் நான் உட்கார்ந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் கிடையாது. நீங்கள் உட்கார்ந்த பிறகு, நான் கணேசனைக் கூப்பிட்ட பிறகு முதலமைச்சர் எழுந்தார்கள். நீங்கள் என்னுடைய அனுமதியை வாங்கிக் கொண்டு பேசுங்கள். இல்லை என்று சொல்லக் கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** C.B.I. விசாரணை கேட்டால் நீங்கள் எப்போதும் போலத் திருப்பித் திருப்பிச் சொல்வீர்கள். உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரணை செய்து இதில் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் தூத்துக்குடி ரயில் நிலையத்திலிருந்து பெங்களூருக்கு 18 வேகன்களில் சுமார் 287 டன் அளவிற்கு அரிசிக் கடத்தல், பெரிய அளவில், நடந்திருக்கிறது. இது ஏழையெளிய மக்கள் சாப்பிடக்கூடிய உணவுப் பொருள். பல்வேறு தர மக்களிடத்திலிருந்து அரசாங்கம் வரிப் பணமாகப் பெற்று, அதில் அரசாங்கத்தினுடைய மானியமாக



ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய் இதற்காகச் செலவு செய்யப்படுகிறது. இந்த ரேஷன் அரிசி ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அரிசி. இப்போது ரேஷன் அரிசியைக் கடத்தியதைப் போல கடந்த முறை கடத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை அரசு எடுத்திருந்தால் இன்று இந்த அளவிற்கு வந்திருக்குமா என்கிற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இருப்பினும், தமிழ்நாட்டு மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இந்தக் கலைஞருடைய அரசுதான், உயர் போலீஸ் அதிகாரி அலெக்ஸாண்டருடைய உத்தரவின் பேரில் ராதாகிருஷ்ணன் அவர்களும் மற்றும் போலீஸ் சூப்பிரண்டெண்டு சஞ்சய் நாத் அவர்களும்தான் இந்த அரிசிக் கடத்தலைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற உண்மையைச் சில எதிர்க்கட்சிகள் புரிந்திருந்தபோதும், அவர்கள் சொல்லத் தவறியதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் கையிலே இருக்கக்கூடிய போலீஸ் இலாகா யாருக்காகவும் சோரம் போகவில்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல இதயம் படைத்த தமிழ் மக்கள் புரிந்துகொள்வார்கள். கலைஞர் அவர்களே, நீங்கள், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சொல்லக்கூடிய அந்த வீரமான பாரம்பரியத்திலே வந்தவர்கள்.

முற்பகல் 11-25

இந்தக் குற்றத்தை, இந்த ஈனத்தனமான குற்றத்தைச் செய்தவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், நீங்கள் தயவுசெய்து தயவு தாட்சண்யம் இல்லாமல் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நான் மட்டுமல்ல, நல்ல இதயம் படைத்த அத்தனை மக்களும் (மேசையைத் தட்டும் ஒலி) விரும்பித்தான் உங்களுக்கு வெற்றி மேல் வெற்றியை, மூன்று தொகுதிகளுக்கும் கொடுத்து இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இதற்குப் பின்னாலேதான் நடந்தது. ஆகையினாலே, கலைஞர் அவர்களே, எதற்கும் அஞ்சாமல் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பிடித்து, அதற்குண்டான தண்டனையைக் கொடுக்க நீங்கள் தயாராக இருப்பீர்கள் என்பது என்னைப் போன்ற உள்ளங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அந்த நாட்டு மக்கள் முழுமையாக நம்புவார்கள் உங்களுடைய கையிலே இருக்கக்கூடிய போலீஸ் பிடித்த இந்த கேஸை ஒரு சிலர் அவர்களே கண்டுபிடித்ததைப் போல ஜோடிக்கிறார்கள் ஆகையினாலே உண்மையை நிலைநாட்ட வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, நம்முடைய முதல்வர் அவர்கள்மீது முழு நம்பிக்கையோடு, நிச்சயமாக



V2n, 31, A, Goo. 38. 2

குற்றவாளிகளைப் பிடிப்பார்கள் என்ற எண்ணத்தோடு, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முதலமைச்சரிடத்திலே பொறுப்பை ஒப்படைக்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

*** திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடத்தல் பொருள் என்றால் போதைப் பொருள்தான் அதிக இலாபம் தரும் என்ற நிலை மாறி, அதிகமாக இருக்கக் கூடிய உணவுப் பொருளைக் கடத்துவதில்தான் அதிக இலாபம் இருக்கிறது என்று கடத்தல்காரர்களெல்லாம் எண்ணுகின்ற நிலையில், இன்று குறிப்பாக ரேஷனில் வழங்கக்கூடிய உணவுப் பொருளையே குறி வைத்து இருக்கக்கூடிய நிலை; இந்த நிலையிலே இந்த ஆட்சியின்கீழே தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு அரிசி கடத்தப்பட்டிருக்கின்றது. அதை இந்த ஆட்சியின் கீழுள்ள காவல் துறையே பிடித்தும் இருக்கிறது. பிடிபட்ட இந்தக் கடத்தல் சம்பவம் என்பது, நிகழ்த்தப்பட்ட பல கடத்தல்களுக்கு எடுத்துக்காட்டு என்றுதான் கொள்ளவேண்டும்.

மத்தியிலே விலைகள் உயர்த்தப்பட்ட நிலையிலும், மாநிலத்திலே அரிசி விலை உயராது என்ற அந்த இழப்பீடுகளையெல்லாம் அரசு தாங்கி, பல நூறு கோடி ரூபாயை ஏழை எளிய மக்களின் உணவுப் பிரச்சினைக்காக மானிமாக வழங்குகின்ற இந்த நிலையிலே, அந்த ஏழைகளுக்குப் போய்ச் சேரவேண்டிய மானியங்கள் எவ்வாறோ, இருக்கின்ற ஓட்டையின் வாயிலாகக் கடத்தப்பட்டு பல்வேறு மாநிலங்களுக்குக் கொண்டு சென்று விற்கப்பட்டது, பல சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கடத்தல் என்பது இன்றல்ல, நேற்றல்ல, தொடர்ந்து நிகழக்கூடிய ஒரு நிகழ்வு. இதற்காக உணவுக் கட்டுப்பாடு கடத்தல் பிரிவு என்று தனியாக இருந்தும், இந்த அளவிற்கு ஆயிரக்கணக்கான மூட்டைகள் எவ்வாறு கடத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது என்பதை அரசு கண்டுபிடிக்கவேண்டும். ஏதோ கடத்தல்காரர்களைக் கண்டுபிடித்தோம், அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தோம் என்று விட்டுவிடாமல் இந்தக் கடத்தலுக்கு உடந்தையாக, ஊக்கமாக அல்லது ஆதரவாக இருந்தவர்கள் யார், எவ்வாறு அரசுக் கிடங்கிலிருந்து அரிசி வெளியானது என்பதைக் கண்டுபிடித்து, அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*** திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து இரயில் மூலமாக 18 வேகன்களிலே பொது விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த அரிசி பெங்களூருக்குக் கடத்தப்பட்டிருக்கின்றது என்கின்ற செய்தி உண்மையிலே மிகுந்த வருத்தத்தை அளிக்கக்கூடிய செய்தி. தவறுகள் நடக்கின்றபோது அதைச் சுட்டிக் காட்டுவது என்பது எதிர்க்கட்சிகளுடைய கடமைதான். ஆனால், அதேநேரத்திலே அரசியல் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல, உண்மையை மாற்றியோ, மறைத்தோ அல்லது நேர்மைக்குப் புறம்பாகவோ வாதிடுவது என்பது எதிர்க்கட்சிகளுடைய எண்ணமாக இருக்கக்கூடாது என்பதும் என்னுடைய கருத்து.

முற்பகல் 11-30

அண்மையில் இந்தக் கடத்தல் அரிசியைப் பிடித்திருக்கிறவர்கள், நமது பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இதே தமிழக அரசிலே பணிபுரிகின்ற உயர் அதிகாரிகளான அலெக்சாண்டர் போன்றவர்கள், இராதாகிருஷ்ணன் போன்றவர்கள்தான். அவர்கள்தான் இதைப் பிடித்திருக்கிறார்கள். இந்த அரசிலே பங்கு பெறுகின்றவர்கள், அமைச்சர்களோ, மற்ற அதிகாரிகளோ இதைச் செய்திருக்கக்கூடும் என்று சொன்னால் அதை நாம் சிந்திக்கின்ற நேரத்தில், அப்படி பெரியவர்கள் தலையிடுகின்ற நேரத்திலே இப்படி உயர் காவல் துறை அதிகாரிகள் அதைப் பிடிப்பதற்கு முன்வருவார்களா, அது நடந்திருக்கக்கூடுமா, ஏன் அவர்கள் பிடிப்பதையும்கூடத் தடுத்திருக்கலாமே என்கின்ற சிந்தனையும் நம்முடைய உள்ளத்திலே எழாமல் இல்லை.

இன்று, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்ச்சிகூட சுட்டிக்காட்டப்பட்டது. அன்றைக்கும் இதே சட்டமன்றம் இருந்தது; சட்டமன்ற உறுப்பினர் பதவியும் இருந்தது, பொறுப்பும் இருந்தது. அன்றைக்கெல்லாம் சுட்டிக்காட்டவில்லை என்கின்ற நிலையைச் சிந்தித்துப் பார்க்கும்போது, சில அரசியல் உட்காரணங்களுக்காக, அன்றைக்குக் காட்டப்படாதது இன்றைக்குக் காட்டப்படுகிறதோ என்ற ஐயப்பாட்டைக்கூட ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது. எனவே, எது எப்படி இருந்தாலும், நடந்திருக்கின்ற கடத்தல் என்பது மிகப் பெரிய அளவிலே நடந்திருக்கிறது. நமது நண்பர், சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 7 ஆயிரம் மூட்டைகளுக்கு மேலாக அரிசி கடத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது எந்த வழியிலிருந்து

வந்தது, இவ்வளவு பெரிய அளவுக்கு அந்த அரிசி மூட்டைகள் எப்படி இந்தக் கடத்தல்காரர்களுக்குக் கிடைத்தன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டிய நிலையிலே இந்த அரசு இருக்கிறது. எனவே, இந்தத் தவறைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு அரிசியின் விலையை உயர்த்தினாலும்கூட, தமிழகத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நிலையிலே ரேஷன் அரிசி விலையை உயர்த்துவதில்லை என்கின்ற பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருக்கின்ற இந்த அரசுக்கு இப்படிப்பட்ட களங்கங்கள் எல்லாம் நேராத வண்ணம் இன்னும் கடுமையாக நடவடிக்கை எடுத்து, வருகின்ற காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு இந்த அரசு முழுமையான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய ரேஷன் அரிசி, ஏறத்தாழ ரூ.40 இலட்சத்திற்கும் மேலே ஒரு கோடி வரையிலே—துல்லியமாக நாம் ஒரு கணக்கைச் சொல்லிவிட முடியாது. சுமார் ஒரு கோடி வரையில் அதாவது பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய செய்தி பூராவிலும் ஒரு கோடிக்கு அதிகமாக—ரேஷன் அரிசி கடத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் பெரும்பகுதி செய்தியாக வந்தது. எனவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஏதோ கடத்தல்காரர்கள் மட்டும் நினைத்துக் கடத்தக்கூடியதல்ல. இதற்குள்ளே அரசினுடைய அதிகாரிகள் ஒரு சாரார் உறுதுணையாக இருந்ததன் காரணமாகத்தான் ரேஷன் அரிசியை எளிதாகக் கடத்தியிருக்க இயலும். ஏனென்றால், ஒரு குடோனில் இருந்து எவ்வளவு மூட்டை அரிசி லாரியில் போகிறது, அதனுடைய அளவு, அதனுடைய விநியோகம் இதையெல்லாம் பார்ப்போமானால், இத்தனை லாரிகளில் போகக்கூடிய அரிசியில் ஒரு மூட்டை அரிசியைக்கூட—சரியாக வழிநடத்தப்பட்டால்—எடுக்க முடியாது. ஆனால், இதைக் கடத்துகின்ற ஒரு சமூக விரோதக் கூட்டம் இதற்குள்ளே உண்டு. அது தூத்துக்குடியானாலும் சரி, வேறு எங்கானாலும் சரி, இது நடந்துகொண்டே இருக்கின்ற ஒரு நிகழ்ச்சி. அதுபோலவே, இந்தக் கடத்தலுக்கு உடந்தையாக காவல் துறையினுடைய ஒரு பகுதியினரும் இதற்குப் பின்னாலே இருப்பார்கள். அப்படி, அரசு அதிகாரிகள், கடத்தல்காரர்கள், சமூக விரோதிகள் சேர்ந்து செய்த மிகப் பெரிய



கொள்ளை இது. எனவே, இதிலே ஒரு சரியான நீதிவிசாரணை செய்து, இதனுடைய குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சரி அவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனைக்கு உரியவர்களாக்க வேண்டும். ஏனென்றால், இனி இப்படி நம்முடைய ரேஷன் அரசியை, ஒரு மூட்டையைக் கடத்தினான், இல்லை, ஆயிரம் டன்னைக் கடத்தினான் என்ற பேச்சிற்கே தமிழ்நாட்டிலே இடம் தராத வகையில் நாம் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். இந்த அரசுக்கு ஒரு எச்சரிக்கை என்ற முறையிலேதான் அரசு இதைப் பார்க்க வேண்டும். அந்தவகையிலே, அதன் முன்னோடியாக இந்தக் கடத்தல்காரர்களை, சமூகவிரோதிகளை, அதற்கு உடந்தையாக இருந்த அரசு அதிகாரிகளைக் கண்டுபிடித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்காக, இதிலே அரசு சிறப்பான கவனத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து, இதைப்பற்றி விசாரணை நடத்துவது, இன்னும்கூட சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

முற்பகல் 11-35

அதுமட்டுமல்ல, இதற்கு முன்னால் இங்கே சில விவரங்களைப் பேசுகின்றபோது, உண்மையாகக் கண்டுபிடித்த, கடத்தலைத் தடுத்த கடத்தலைக் கண்டுபிடித்த ஓர் அதிகாரி, இந்தச் சமூக விரோதிகளால் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகூட இதற்கு முன்னால் நடந்திருக்கின்றது; அப்படி இந்த சமூகவிரோதிகள் என்று சொல்கின்றபோது அதிலே கடத்தல்காரர்களும் எந்த அளவிற்குப் பங்காளிகளாக இடம் பெற்றிருக்கின்றார்கள் என்பதற்கு இரண்டு விதமான கருத்திற்கு இடம் இல்லை. அந்த வகையிலே அரசு இதிலே சிறப்பாகச் செயல்பட்டு, இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, மக்கள் மன்றத்திலே அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கக்கூடிய அளவிலே காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று, இதைக் கண்காணிக்கின்ற குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அந்த அரசியல் கட்சிகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அதிகாரிகளையும் சேர்த்துக் கொண்டு, கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துவதன் மூலமாக இப்படிப்பட்ட அநியாயங்கள் நடப்பதைத் தடுத்து நிறுத்த முடியும். அந்த வகையிலே அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டு, இந்த அடிப்படையிலே எங்களுடைய கருத்துகளை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Honourable Speaker Sir, I would like to bring to the notice of the Honourable Minister for Food regarding the smuggling of about 18 wagons containing 387 tonnes of PDS rice to other States, like Bangalore. Actually the poor use of this PDS rice and some anti-social elements have taken deep root into this rice smuggling. I am very happy to note that you have already secured five of those smugglers and confiscated their vehicles. The Honourable Chief Minister was telling that the vehicles were also confiscated. This shows that the Government is taking action in the right direction. Some of our friends here were telling that the Government is not taking any step and that some people are involved in smuggling. Your action clearly shows that you have taken proper steps to see that smuggling is prevented. So, I request the Honourable Minister to see that some stern action is taken against those who are held responsible. There will be some officers involved, I know, because without the help of the officers smugglers cannot take rice like this. You must find out the officers and eliminate them from their office. That must be your stern action.

I request the Honourable Chief Minister to see that smuggling will not take place in future. We must try to prevent smuggling from our State, because we are a bordering State to Karnataka where PDS rice is sold at Rs.11 per Kg. But here, we are selling at the rate of Rs.3.50. So, there is likelihood of smuggling lot of rice to other States like Kerala and I request you to see that the borders are tightened properly so that we can prevent smuggling. On behalf of the BJP, I make this suggestion Sir. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சனவரி மாதம் தூத்துக்குடியிலேயிருந்து பெங்களூருக்கு ஏறக்குறைய 400 டன்கள் அரிசி, குறிப்பாக ரேஷன் அரிசி கடத்தப்பட்டதை உரிய நேரத்திலே—அதுவும் திரைப்படங்களிலே வருவதைப்போல—ஓசூருக்கு அருகே தடுத்து நிறுத்திய இந்த அரசை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11-40

அதேசமயத்தில் என்னுடைய ஆழ்ந்த கவலையையும், எச்சரிக்கையையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், இந்த அவைக்கு ஒரு தகவலையும் தர விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தமட்டிலும் இது ஏதோ தனிப்பட்ட ஒரு செய்கை, ஒரு செயல் என்று அரசோ, நாமோ பார்க்கக்கூடாது. தொடர்ச்சியாக நடந்துவரக்கூடிய இந்த அரிசிக் கடத்தலினுடைய விசுவரூபமாக இந்த 400 டன் அரிசிக் கடத்தல் நடந்திருக்கிறது. இப்போது இரண்டு கேள்விகள். ஒன்று இந்த அரிசிக் கடத்தலுக்குக் காரணமானவர்கள் யார்? இரண்டாவது கேள்வி. இந்த அரிசி எங்கேயிருந்து வந்தது என்பதுதான். இதில் அரசோ, அமைச்சரோ சம்பந்தப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர்களே தடுத்து நிறுத்தி இருக்கமாட்டார்கள். எனவே, இது தொடர்ச்சியாக ஒரு கும்பல், இந்தத் தொழிலைச் செய்து வரக்கூடிய ஒரு கும்பல் இதைச் செய்து இருக்கிறது என்பது தெளிவாகிறது. நான் வேண்டுவது, விரும்புவது இந்த நயவஞ்சகத் தொழிலை, ஒட்டுமொத்தமாக ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய இந்த அரிசியைக் கடத்துவதைத் தொழிலாகக் கொண்டிருக்கக்கூடிய அந்தக் கும்பலை நாட்டு மக்களுக்கு அரசு வெளிப்படுத்தியாக வேண்டும். ஏனென்றால், இது ஒருநாள் செயல் அல்ல. இது தொடர்ச்சியாக நடந்து வரக்கூடிய செயல். நாளையும் இது நடக்காது என்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமும் இல்லாமல் இருக்கின்றபோது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். எனவே நான்கு டிரைவர்களையோ 4, 5 லாரிகளையோ பறிமுதல் செய்துவிட்டால் இதை நிச்சயமாகத் தடுத்து நிறுத்திட முடியாது. இதற்குப் பின்புறமாக இருக்கக்கூடியவர்கள் எவ்வளவு பெரிய செல்வந்தர்களாக இருந்தாலும் அல்லது அரசியல் பின்பலத்தை வைத்துச் செயல்படக்கூடிய வணிகர்களாக இருந்தாலும் அவர்களும் கைது செய்யப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தது, இந்த 400 டன் அரிசி என்பது ஒரு வியப்புக்குரிய விஷயம், இதிலே இந்த 400 டன் என்பதைக்காட்டிலும், எண்ணிக்கையை காட்டிலும் நான் தரத்திலேதான் வேதனைப்படுகிறேன். எப்படி என்றால், அந்த 400 டன் அரிசி வந்திருக்கக்கூடிய விதம் 1996-97-லே தஞ்சாவூர் - நாகை மாவட்டத்தில் 1800 டன் அரிசியின் நிறம் குறைந்து தரக்குறைவாக அதாவது 8 சதவிகிதத்திற்கு மேலாகத் தரக்குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த அரிசியைத் தமிழ்நாட்டிலே பயன்படுத்தக்கூடாது

என்று, அந்த அரிசியைத் தமிழ்நாட்டிலே விற்கக்கூடாது என்று முடிவெடுத்தபிறகு தஞ்சாவூரைச் சேர்ந்த நடராஜ் உடையார் என்பவர், அதை ஏலத்திற்கு எடுத்தார். அந்த அரிசி தமிழ்நாட்டிலே விற்கப்படக்கூடாது. இப்போது அந்த அரிசி எங்கே விற்கப்பட்டிருக்கிறது? என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் மனிதர்கள் பயன்படுத்தக்கூடாத அளவிற்கு தரமில்லாத அதாவது 8 சதவிகிதத்திற்கு மேலாகத் தரம் குறைகின்றபோது காளான் உற்பத்தியாகி வயிற்றுப்போக்கையோ அல்லது வேறு வியாதிகளையோ உண்டாக்கும். இதே மன்றத்திலேகூட, ப‌ல உறுப்பினர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக நிறம் குறைந்த அரிசிகளை எல்லாம் இங்கே காண்பித்திருக்கிறார்கள். இப்போதுதான் தெரிகிறது. எந்த நிறம் குறைந்த அரிசிகளெல்லாம் தமிழ்நாட்டிலே விற்கப்படக்கூடாது என்று நாம் ஆடு, மாட்டுத் தீவனங்களாக அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஒதுக்கினோமோ அந்த அரிசியைத்தான் நுகர்வோர் வாணிபக் கழகத்திலே exchange செய்து இப்போது அதைக் கடத்தியிருக்கிறார்கள் என்று நான் குற்றம்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இது மீண்டும் ஆழமாக விசாரிக்கப்பட வேண்டிய விஷயம்.

இதிலே நான் இன்னொரு தகவலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1800 டன் அரிசியை, தரம் குறைந்த அரிசியை திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிற 18 ஆலைகளிலே exchange செய்து அந்த ஆலைகள் எல்லாம் மூடப்பட்டன. மீண்டும் அந்த ஆலைகளுக்கு அனுமதி வேண்டுமென்று இப்போது அவர்கள் நெருக்கடி கொடுத்து வருவதாகத் தெரிகிறது. எனவே, செல்வந்தர்களானாலும் வாணிபர்களானாலும் அவர்கள் மீது இரக்கம் காட்டாமல் அரசு நடவடிக்கை எடுத்தால்தான் இந்த அரசு ஊழலுக்கு அப்பாற்பட்ட அரசு என்ற பெயரைப் பெறமுடியும். அந்த அடிப்படையிலே இந்தக் கடத்தலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தரம் குறைந்த 1800 டன் அரிசியையும் தமிழ்நாட்டிலேயே விற்பனை செய்து தமிழ்நாட்டில் சுகாதாரக்கேட்டை விளைவித்த அவர்கள்மீது கொடிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.



முற்பகல் 11-45

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்குக் கடத்தப்பட்ட அந்த ஏழை மக்களுக்கான ரேஷன் அரிசி தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிற செயலை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே, இத்தகைய கடத்தல்கள் எல்லாம் எதனாலே நடைபெறுகின்றன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொதுவாக, அரிசி ஆலைகள், வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற வழித் தடங்களிலே இருக்கின்ற சோதனைச் சாவடிகள், இவையெல்லாம் இன்னும் மேம்படுத்தப்படவேண்டும். பொதுவாக, தமிழ்நாட்டிலே ரேஷன் அரிசியானது விலை குறைவாக இருக்கிற காரணத்தினால், அது பிற இடங்களுக்கு எளிதாகக் கடத்தப்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்து விடுகிறது.

குறிப்பாக, இந்த மாநிலங்களுக்கு இடையே இருக்கக்கூடிய Check post-களிலே இருக்கின்ற ஊழியர்களைக்கூட, C.B., C.I.D. மூலமாகக் கண்காணிப்பது நல்லது. அந்த இடங்களிலே பணி செய்கிறவர்கள் எல்லாம் பெருவாரியான வசதி வாய்ப்புகளுக்கு குறுகிய காலத்திலேயே வந்து விடுகிறார்கள். அவர்கள், இத்தகைய கடத்துகின்ற சமூக விரோதிகளுக்குக் கையாட்களாக மாறிவிடுகிறார்கள். பொதுவாகவே, மனிதர்கள், மனதிலே மாசு இல்லாமல் இருந்தால்தான் நல்லது; ஆனால் mentally polluted என்று சொல்லக்கூடிய மனிதர்கள் எங்கும் நிரவிக் கிடக்கின்ற காரணத்தினாலே, அத்தகைய சம்பவங்கள் எல்லாம் நடைபெற்று விடுகின்றன. எனவே, அந்தச் சோதனைச் சாவடிகளை மேம்படுத்த வேண்டும். அங்கே கண்காணிக்கப்படுகின்ற பணிகளை மேம்படுத்த வேண்டும்.

அதேபோல், அரிசி ஆலைகளையும் நாம் கண்காணிக்க வேண்டும். ஆக, இவற்றையெல்லாம் செய்கின்றபோதுதான், இத்தகைய கடத்தல் செயல்களையெல்லாம் தடுக்க முடியும். இன்னும்கூட நாம் பார்த்தால், இவ்வாறு தரம் குறைந்த அரிசியை, அல்லது விலை குறைவான அரிசியைப் பெருவாரியாக என்ன செய்கிறார்கள் என்றால், அவற்றைப் பட்டை தீட்டி, உணவகங்களுக்கெல்லாம் விற்பனை செய்து விடுகிறார்கள். உணவகங்களிலே சாப்பிடுகிறவர்களுக்கு, சோறு வெண்மையாக இருந்தாலே போதும் அவை எப்படிப்பட்ட அரிசி என்பதையெல்லாம் அவர்கள் பார்ப்பது இல்லை. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த ரேஷன் அரிசி பரவலாக, பல இடங்களிலே பயன்படுத்தப்படுகின்றன

என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய பகுதியிலே, திண்டிவனம் பகுதியிலே, ஒரு பெரிய புள்ளி தொடர்ந்து அரிசி கடத்துகிற வேலையைச் செய்கிறார். அது Food Cell-க்கு கூடத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அந்தப் பகுதிக்குட்பட்ட அதிகாரிகள் யாருக்கோ பயந்து கொண்டு, சரியான முறையிலே நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள். நான் அவ்வாறு கடத்துகிற லாரியைப் பற்றிகூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கார்த்திகேயன் என்று சொல்லக் கூடிய அந்த லாரியிலேதான் அடிக்கடி அந்த அரிசி, திண்டிவனம் பகுதியிலே இருந்து கடத்தப்படுகிறது என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட செயல்களை, இந்தக் கடத்தல் தொழிலிலே ஈடுபட்டு, அவ்வாறு அரிசி கடத்துகின்ற கொடுமையைச் செய்வதில் எப்பேர்ப்பட்ட சக்தி, யார் அதன் பின்னணியிலே இருந்தாலும், அதை உரிய முறையிலே கண்டுபிடித்து, சட்டத்தைத் திருத்தியாவது அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனையை தொடர்ந்து விரைந்து வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் அவரவர்கள் தங்களுடைய கருத்துகளை, கன்டெய்னர்களிலே அரிசி கடத்துவது பற்றிய கருத்துகளை இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். அது நடந்தது எப்படி, எவ்வாறு அது பிடிக்கப்பட்டது என்பதை விளக்கமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*28-1-2000* அன்று திருநெல்வேலி, உணவுப் பொருள் கடத்தல் தடுப்புக் காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. கே. ராஜா சுப்புரங்கன் என்பவருக்கு மீளவிட்டான் இரயில் நிலையத்திலிருந்து 18 கன்டெய்னர்களில், பொது விநியோக அரிசி கடத்தப்படுவதாகத் தகவல் வருகிறது. உடனடியாக உதவி ஆய்வாளர், தூத்துக்குடி சென்று, இரயில் நிலையத்திலே அந்தக் கன்டெய்னர்களைப் பார்க்கிறார். பார்த்தவுடன் அது ரேஷன் அரிசிதான் என்று சந்தேகப்பட்டு, மதுரையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்குத்



தகவல் தெரிவிக்கிறார். மதுரையிலே இருக்கின்ற உயர் அதிகாரி உடனடியாகத், தலைமை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, ரேஷன் அரிசி 18 கன்டெய்னர்களில் செல்கிறது என்று சொன்னவுடன், உடனடியாக அதைத் தடுக்கச் சொல்லி, மேலதிகாரி திரு. அலெக்ஸாண்டர் அவர்கள் உத்தரவிடுகிறார்கள். அதற்குள்ளாகவே அந்த இரயில் புறப்பட்டு சேலம் வருகிறது. சேலத்தில் இருக்கின்ற உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு அதிகாரி அவர்களும், அங்கு இருக்கின்ற ஆணையர் அவர்களும் இரயில் நிலையம் சென்று, அங்கு அந்த கன்டெய்னர்களைத் திறந்து, அரிசியை எடுத்துப் பரிசோதிக்க வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு இரயில்வே அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்லை. இங்கு கன்டெய்னர்களைத் திறக்க இயலாது என்று சொன்னவுடன், கீழே சிதறி இருந்த அரிசியை எடுத்துப் பரிசோதித்துப் பார்த்ததிலே, மாவட்ட வழங்கல் அலுவலர் இது ரேஷன் அரிசிதான், முழுமையாக இது ரேஷன் அரிசிதான் என்று அவர் தெரிவித்ததற்குப் பிறகு, அந்தக் கன்டெய்னர்களை உடனடியாக இறக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, அதற்கு முயற்சி எடுக்கப்பட்டபோது, அந்தக் கன்டெய்னர்களை இறக்குவதற்கு உரிய கிரேன்கள் அங்கே இல்லை. கிரேன்கள் இல்லாதபோது, 3 மணி நேரம் அல்லது 4 மணி நேரம் அந்த Goods வண்டியை அங்கேயே நிறுத்தி இறக்கலாம் என்றால் வேறு மாற்றுப் பாதை இல்லை. உடனடியாக முடிவெடுக்கிறார்கள். "அது சரி; அது பெங்களூர் போகட்டும்;அரிசியை யாரும் எடுத்துச் செல்லாதவாறு பார்த்துக் கொண்டு நாமும் அதனுடனே பெங்களூர் செல்லலாம்" என்று சொல்லி, உணவுத் தடுப்பு அதிகாரிகள் Food Cell அதிகாரிகள், அதனுடனே அந்த Goods வண்டியிலேயே ஏறி, பெங்களூர் ஒயிட்ஃபீல்டு செல்கிறார்கள். ஒயிட்ஃபீல்டுக்குச் சென்று அங்கே இருக்கின்ற அரிசியை வேறு யாரும் எடுத்துக்கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-50*

அதற்கிடையிலே திருநெல்வேலியிலே இருக்கின்ற உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு உதவி ஆய்வாளர், சரக்கு இரயிலில் ரேஷன் அரிசி அனுப்பப்பட்டது குறித்து மேல் விசாரணை மேற்கொண்டார். அவர்களது விசாரணையில் சரக்கு இரயிலில் அனுப்பப்பட்ட அரிசி, தூத்துக்குடி சௌத் காட்டன் ரோடிலுள்ள இலட்சுமி டிரேடர்ஸ் மூலம் அனுப்பப்பட்டது என்றும், பெங்களூரில் ஒயிட்ஃபீல்ட்-ல் அரிசியைப் பெற்றுக்கொள்ளவிருக்கிற நிறுவனமும் அதே நிறுவனம்தான் என்றும் அறிந்துகொண்டார். இந்த நிறுவனம் குறித்து அவர்

மேற்கொண்ட விசாரணையில் இதுபோன்ற நிறுவனம் தூத்துக்குடியில் இல்லையெனவும், இது போலியான நிறுவனம் எனவும் அறிந்துகொண்டார். அரிசி அனுப்பிய நிறுவனமும், பெற்றுக்கொள்வதாக இருக்கும் நிறுவனமும் போலியானவை என அறிந்து மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். மேலும் இவ்வாறு தூத்துக்குடி மீளவிட்டானிலிருந்து போலியான நிறுவனத்தின் பெயரில் பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்கு அரிசி அனுப்பிய நபர்கள் கோபால், சுரேஷ் மற்றும் பெங்களூர் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவன உரிமையாளர் ஆகியோர் மீது திருநெல்வேலி குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை குற்ற எண் *3/2000*, பிரிவு *4 (1)* ...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த உரிமையாளர் பெயர் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** உரிமையாளர் பெயரைச் சொல்கிறேன் உட்காருங்கள். இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது, சொல்கிறேன்.

குற்றப் புலனாய்வுத் துறை குற்ற எண் *3/2000*, பிரிவு 4(1) 19(1) Tamil Nadu Essential Trade Articles (Regulation of Trade) Order 1984 r/w 7(1) a(ii) of Essential Commodities Act 1955-ன்படி வழக்குப் பதிவு செய்தார். முழுமையான விசாரணைக்கு முன்னதாக, போலி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட அரிசி மூட்டைகளை, பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்குச் சென்று, யாரேனும் எடுத்துக்கொண்டு செல்வதைத் தடுப்பதற்காக, மதுரை உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு, காவல் கண்காணிப்பாளர், மதுரையிலிருந்து பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்கு ஒரு குழுவுடன் விரைந்து சென்று, *18* கன்டெய்னர்களிலிருந்த அரிசி மூட்டைகளை யாரும் எடுத்துச்செல்லாத வண்ணம் பாதுகாப்பைப் பலப்படுத்தினார். இதற்கிடையில் கிருஷ்ணகிரியிலிருந்து நமது தரக்கட்டுப்பாடு அதிகாரி வெங்கடாசலம் அவர்கள் பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்குச் சென்று அங்கு அந்த அரிசியைப் பரிசோதித்துப் பார்த்தார். அந்த அரிசியைப் பரிசோதித்ததிலே முழுமையான ரேஷன் அரிசிதான் என்பதைக் கண்டறிந்து அவர் தகவல் சொல்கிறார். அது ரேஷன் அரிசி என்பது மட்டுமல்ல; தரம் குறைந்த கறுப்பு அரிசியான ஏற்கெனவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக ஏலம் விட்ட அரிசி இது இல்லை, இது முழுமையான ரேஷன் அரிசி என்று நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய தரக்கட்டுப்பாட்டு அதிகாரி சொன்னதற்குப் பிறகு, அந்த *18* கன்டெய்னர்களிலிருக்கின்ற அரிசியை



எடுத்து வந்து, நேராக, ஓசூரில் இருக்கின்ற தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே *7740* மூட்டைகளையும் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறார்கள். பிறகு, இந்த அரிசியினைக் கொண்டிருந்த அதே கன்டெய்னர்களை டிரெய்லர்களில் ஏற்றி, ஓசூர் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் குடோனுக்குக் கொண்டு வந்து, *2-2-2000* அன்று ஒப்படைத்தனர்.

பின்னர், உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் போலீசார் *5* சிறப்புக் குழுக்களாகப் பிரிந்து, தூத்துக்குடி, நாகப்பட்டினம், கோவில்பட்டி, பெங்களூர், சென்னை ஆகிய இடங்களில் இவ்வழக்கு குறித்து தீவிர மேல் விசாரணை மேற்கொண்டனர். இவர்களது விசாரணையில் பின்வரும் தகவல்கள் புலனாயின:

கோவில்பட்டியைச் சேர்ந்த பழனிசெல்வம்—இவர் ஒரு பழைய அரிசிக் கடத்தல் குற்றவாளி, திருநெல்வேலி குற்ற எண் *156/99*—கோபால் என்ற பாலகோபால் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த ஜெகதீஷ் ஆகிய மூவரும் கூட்டாகச் சேர்ந்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரேஷன் அரிசியினைச் சட்டவிரோதமாகப் பலரிடமிருந்து வாங்கி அதனை கோவில்பட்டி கரிசல்குளத்திலுள்ள பழனிசெல்வத்தின் ரைஸ் மில்லில் ஏற்கெனவே இருந்த தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் முறையாக ஏலம் எடுத்து வைத்திருந்த நிறம் மங்கிய அரிசி மூட்டைகளுக்கு இடையே மறைத்து வைத்து, அதனை லாரிகள் மூலமாக வேறு மாநிலத்திற்கு அனுப்ப முடியாத சூழ்நிலையில், இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய முடிவு செய்தனர். இந்த மூவரும் மதுரை-தூத்துக்குடி பை-பாஸ் ரோட்டிலுள்ள ராஜா ஏஜென்சி நிறுவனத்திற்கு—Clearing and forwarding agent-சென்று தாங்கள் அரிசியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது எனவும், அந்த அரிசியைத் தாங்கள் நாகப்பட்டினத்திலுள்ள Civil Supplies Corporation godown-லிருந்து ஏலம் எடுத்து இருப்பதாகவும், அதற்கு, Civil Supplies Corporation வழங்கிய *31* issue memos-ஐயும் கொடுத்துள்ளனர். தாங்கள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய அரிசியினை ஒரு மாத காலத்திற்குள் அனுப்புவதாகக் கூறி *14-12-1999* முதல் *14-1-2000* வரை *43* முறை லாரிகளில் ரேஷன் அரிசியினை கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடி ராஜா ஏஜென்சிக்கு அனுப்பியுள்ளனர். இப்படி, ஏற்கெனவே, கடந்த காலத்திலே *1997-98* ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சார்பாக, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக, அதிகமான மழை பெய்த காலத்திலே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரைத்தபோது அரிசி கறுப்பாக இருந்தது. அதை மக்களுக்கு

வழங்கக்கூடாது என்று முதலமைச்சர் ஆணையிட்டு, அது வெளி ஏலத்திலே விடப்பட்டது.

*முற்பகல் 11-55*

இப்போது *1500* டன் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட *40* ஆயிரம் டன் அன்றைக்கு வெளி ஏலத்திலே விடப்பட்டது. அப்படி எடுக்கப்பட்ட அந்த அரிசியை, அதனுடைய போலி ரசீதுகளை வைத்துக்கொண்டு, இந்த அரிசியைக் கடத்தியிருக்கிறார்கள் என்றும் விசாரணையில் தெரிய வந்தது. ராஜா எஜென்சி நிறுவனத்தாரிடம் குடோன் வசதி இல்லாததால் தூத்துக்குடியிலுள்ள செயின்ட் ஜான் பிரைட் சிஸ்டத்தில் உள்ள குடோனில், ரேஷன் அரிசி மூட்டைகளை இறக்கி வைக்க, ராஜா ஏஜென்சியினர் ஏற்பாடு செய்தனர். ஜெகதீஷ், பழனிசெல்வம், கோபால் என்கிற பாலகோபால் ஆகிய மூவரும் Civil Supplies Corporation tender மூலம் விற்ற நிறம் மங்கிய அரிசிக்கு உரித்தான ஆவணங்களைப் பயன்படுத்தி, தாங்கள் சேகரித்து வைத்திருந்த பொது விநியோகத் திட்ட ரேஷன் அரிசியினைச் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்ய முனைந்தனர். இந்தச் சட்ட விரோதச் செயலுக்கு இவர்களிடத்திலே பணிபுரியும் கோவில்பட்டியைச் சேர்ந்த இசக்கியப்பனும் துணையாக இருந்தார். ஆனால், இலங்கையில் அரிசி பேரம் படியாததாலும், இலங்கையில் ஏற்றுமதி செய்ய விலை ஒத்துவராததாலும், இலங்கைக்கு அரிசியை ஏற்றுமதி செய்யும் எண்ணத்தினைக் கைவிட்டு குடோனிலிருந்து ரேஷன் அரிசியை பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்குக் கொண்டு சென்று அதிக லாபம் வைத்து விற்கத் தீர்மானித்தனர்.

ரேஷன் அரிசியினைக் கள்ளத்தனமாக வாங்கியதாலும், தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலத்திற்கு ரேஷன் அரிசியினை எடுத்துச் செல்வது சட்ட விரோதமான செயல் எனத் தெரிந்திருந்ததாலும், கோவில்பட்டி பழனிசெல்வம், கோபால் என்கின்ற பாலகோபால் மற்றும் பெங்களூர் ஜெகதீஷ் ஆகியோர் லட்சுமி டிரேடர்ஸ் என்ற போலி நிறுவனத்தின் பெயரில் ரேஷன் அரிசி மூட்டைகளை கன்டெய்னர்கள் மூலம் அனுப்பவும், அதனை பெங்களூர் ஒயிட்ஃபீல்டில் அதே போலி நிறுவனத்தின் பெயரிலேயே பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடு செய்தனர்.

இவ்வரிசியினைக் கொண்டு செல்வதற்கு கன்டெய்னர்களை கன்கார் என்ற ரயில்வே நிறுவனத்திலிருந்து பெறுவதற்கு சுரேஷ் என்ற போலியான





பெயரில் கோபால் என்கின்ற பாலகோபால் பொய்யான கையெழுத்துப் போட்டு விண்ணப்பித்து ஏற்பாடு செய்துள்ளார். இக் கன்டெய்னர்களுக்கு வாடகையாக ரூ. *2,25,150* ரொக்கப் பணமாகவும், *27-1-2000* அன்று கோபால் என்ற பாலகோபால் தூத்துக்குடி கன்டெய்னர் கார்ப்பரேஷனுக்கு செலுத்தி உள்ளார். கன்கார் நிறுவனத்திலிருந்து *18* கன்டெய்னர்களைப் பெற்று, செயின்ட் ஜான் பிரைட் சிஸ்டம் குடோனுக்கு எடுத்துச் சென்று, அரிசி மூட்டைகளை ஏற்றி தூத்துக்குடி மீளவிட்டான் ரயில் நிலையத்திற்குக் கொண்டுவந்து *28-1-2000* அன்று இரவு *7.40* மணிக்குச் சென்ற சரக்கு ரயிலில் பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்கு அனுப்பி உள்ளார். இவ்வழக்கில் லட்சுமி டிரேடர்ஸ் என்ற போலி நிறுவனத்தின் பெயரால் ஆவணங்களைத் தவறாகத் தயாரித்து ரேஷன் அரிசியினைக் கடத்தியதில் முக்கியக் குற்றவாளியான அரிசி ஆலை அதிபரும் பழைய குற்றவாளியான கோவில்பட்டி பழனிசெல்வமும் *9-2-2000* அன்று உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொய்யான கையெழுத்திட்டு ரொக்கப் பணம் கட்டி, ரேஷன் அரிசிக் கடத்தலுக்கு கன்டெய்னர்களைத் தருவித்து ரேஷன் அரிசிக் கடத்தலில் சம்பந்தப்பட்ட கோவில்பட்டி கோபால் என்கிற பாலகோபால் *9-2-2000* அன்று உணவுப் பொருள் கடத்தல் தடுப்புக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விருவரும், *21-2-2000* அன்று உணவுப் பொருள் கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தடுப்புக் காவலில் பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கு விசாரணையில் இக்கடத்தலுக்கு உதவியாக இருந்த கோவில்பட்டி இசக்கியப்பன் *8-2-2000* அன்று கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும், விசாரணையில், கைது செய்யப்பட்ட கோவில்பட்டி பழனி செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பழனிசெல்வம், தனக்கும், கோவில்பட்டி கோபால் என்ற பாலகோபாலுக்கும் மற்றும் பெங்களூர் ஜெகதீஷ் எக்ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் ஜெகதீஷ் ஆகிய மூவருக்கும் (*1*) அரிசி வியாபாரி செல்வராஜ், தந்தை பெயர் பொன்னுசாமி நாடார், *55*, சிவந்திபுரம் மூன்றாவது தெரு, முத்துராம்பட்டி, விருதுநகர் (*2*) பலசரக்கு வியாபாரி மூக்கன், தந்தை பெயர் பழனிச்சாமி நாடார், எண் *8*, முத்துகாமாட்சி நாடார் தெரு, அருப்புக்கோட்டை (*3*) அரிசி வியாபாரி மாரிமுத்து,

தந்தை பெயர் சங்கரநாராயணன், 272-ஏ, பாரதி சோடா பேக்டரி காம்பவுண்ட், சின்ன சுரைக்காய்ப்பட்டி தெரு, ராஜபாளையம் (4) ஆட்டோ ஸ்டோர்ஸ் மற்றும் அரிசி வியாபாரி மாடசாமி, தந்தை பெயர் சங்கிலி செட்டியார், எண் 40, ராமசாமிபுரம் மூன்றாவது தெரு, சங்கரன்கோவில் (5) பனங்குடி செல்வபாண்டி என்ற செல்லபாண்டி (6) தூத்துக்குடி ரவி என்ற ரவீந்திரன் (7) தூத்துக்குடி ஜெயச் சந்திரன் மற்றும் (8) ராஜபாளையம் பாலகிருஷ்ணன் ஆகியோர் ரேஷன் அரிசி மூட்டைகளை பல நாட்களில் விற்றுவந்ததாகவும், அந்த ரேஷன் அரிசிதான் பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்கு அனுப்பப்பட்ட ரேஷன் அரிசி என்றும் கூறியிருக்கிறார்.

மேலும், பழனிசெல்வம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில், மேலே குறிப்பிடப்பட்ட 8 பேர்களைத் தவிர, தானும், கோபால் என்ற பாலகோபாலும் சேர்ந்து கோவில்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களிடமிருந்து ரேஷன் அரிசியை வாங்கி தனது மில்லில் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறினார். எந்தெந்த ஊர்களில், யார் யாரிடம் இவர்கள் ரேஷன் அரிசிகளை விலைகொடுத்து வாங்கினார்கள் என்பது விசாரணையில் உள்ளது. மேலும் பழனிசெல்வம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில், தனக்குச் சொந்தமான 6 லாரிகளில் தனது மில்லில் பதுக்கி வைத்திருந்த ரேஷன் அரிசி மூட்டைகளை தூத்துக்குடி செயின்ட் ஜான் பிரைட் சிஸ்டம் குடோனுக்குக் கொண்டு சென்றதாகவும் கூறினார். இங்கு எல்லாம் கேட்டார்கள் "எப்படி இந்த ரேஷன் அரிசி இவர்களுக்குக் கிடைத்தது; 7 ஆயிரம் மூட்டை என்றார்களே;" என்று. இது தவிர பழனிசெல்வத்திற்கு ரேஷன் அரிசி விற்ற 8 பேர்களில் ஒருவரான தூத்துக்குடி மாரியப்பா டிரேடர்ஸ் உரிமையாளரும், அரிசி வியாபாரியுமான ரவி என்கின்ற ரவீந்திரனும், அவர்தம் கூட்டாளியுமான ஜெயச்சந்திரனும், பழனிசெல்வத்திற்கு சுமார் 63.85 மெட்ரிக் டன் ரேஷன் அரிசியினை விற்றதோடல்லாமல், அதனை தூத்துக்குடியில் தாங்கள் வாடகைக்கு எடுத்து உபயோகித்து வந்த Tamil Nadu Warehousing Corporation கிடங்கில் பதுக்கி வைத்திருந்ததும், அந்த ரேஷன் அரிசி மூட்டைகளை 6 லாரிகளில் 13-1-2000 அன்று ஏற்றி செயிண்ட் ஜான் பிரைட் சிஸ்டம் குடோனுக்கு அனுப்பி, பின்பு அந்த ரேஷன் அரிசி மூட்டைகளை கன்டெய்னர்களில் ஏற்றி அனுப்பியதும் இசக்கியப்பன் வாக்குமூலத்திலிருந்து, ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலிருந்து தெரிய வந்தது.

இவ்வாறு ரேஷன் அரிசி சப்ளை செய்த 8 நபர்களில், விருதுநகர் செல்வராஜ், அருப்புக்கோட்டை மூக்கன் ஆகியோர் 12-2-2000-ம் தேதியும், ராஜபாளையம் மாரிமுத்து, சங்கரன்கோவில் மாடசாமி ஆகியோர் 16-2-2000 ஆம் தேதியும் கைது செய்யப்பட்டு ரிமாண்டுக்கு அனுப்பப்பட்டனர்.



நண்பகல் 12-00

இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள விருதுநகர் செல்வராஜ், அருப்புக்கோட்டை மூக்கன், ராஜபாளையம் மாரிமுத்து, சங்கரன்கோவில் மாடசாமி ஆகியோரிடம், அவர்களுக்கு ரேஷன் அரிசி எவ்வாறு கிடைத்தது என்று விசாரணை செய்தபோது, தாங்கள் விருதுநகர், அருப்புக்கோட்டை, ராஜபாளையம், சங்கரன்கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் ரேஷன் குடும்ப அட்டைதாரர்களிடமிருந்து ஒரு கிலோ ரேஷன் அரிசி ரூ. 4.50 வீதம் விலை கொடுத்து, பல்வேறு சமயங்களில் வாங்கிச் சேகரித்து வைத்து, பின்பு அதனை கோவில்பட்டி பழனிசெல்வம் மற்றும் கோபால் என்கின்ற பாலகோபால் ஆகியோருக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 5.50- லிருந்து ரூ. 6.00 வரை விலை வைத்து விற்றதாகக் கூறினார்கள்.

இவ்வழக்கில் இதுவரை ஏழு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கோவில்பட்டியிலும், தூத்துக்குடியிலும், ரேஷன் அரிசியைக் கடத்திச்செல்லப் பயன்படுத்தப்பட்ட, பழனிசெல்வத்திற்குச் சொந்தமான 5 லாரிகள் கைப்பற்றப்பட்டு உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு போலீஸார் வசம் உள்ளது.

இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள மற்ற எதிரிகளைக் கைது செய்யவும், கைப்பற்றப்பட வேண்டிய வாகனங்களைக் கைப்பற்றவும் தொடர்ந்து புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதிலே இங்கே பேசியபோது டிரைவரையும், இருக்கின்ற கிளீனர்களையும் வைத்து, கேஸைப் போட்டுவிட்டு மற்ற, பெரும் பணம் படைத்த பெரும் முதலாளிகளை இதுவரையில் கைது செய்யவில்லை என்று சொன்னார்கள்.

**திரு. ச. அழகிரி:** ஒரு Clarification,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொன்ன பிறகு நீங்கள் கேட்க அனுமதி கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மொத்த குற்றவாளிகள் 12 பேர், இதிலே கைது செய்யப்பட்டவர்கள் 7 பேர். முக்கிய குற்றவாளிகள் 3 பேர். இதிலே 2 பேர் கைதாகி விட்டனர். A1 பழனிசெல்வம் ஒரு பெரிய பணக்காரர். அவருடைய லாரிகள் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டுள்ளார். A2-கோபால் என்கின்ற பாலகோபால், அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். A3-ஜெகதீஷ் இவனும் தேடப்பட்டு வருகிறான். காவல் துறை அதிகாரிகள் இவனைப் பிடிப்பதிலே மிக முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இதிலே இங்கே பேசியவர்கள் எல்லாம் முழுமையாக, ஏதோ இந்த ஆட்சி வந்த பிறகுதான் பெரிய கடத்தல்கள் நடைபெறுவதைப் போலவும், இதிலே அமைச்சர்களும், மற்றவர்களும் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதைப் போலவும் இங்கே உருவம் கொடுத்துப் பேசினார்கள். இங்கே நான் ஒன்றை முழுமையாக உங்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே எங்களை போலீஸ் துறையின் மூலமாகவோ அல்லது இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள், நீங்கள் எல்லாம் ஆதாரம் தந்து அமைச்சர்கள் மீது குற்றம் சாட்டுவது போலவோ இல்லாமல், தொடர்ந்து ஒரு குற்றம் என்றாலே முதலமைச்சர் அவர்களே அதைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். இந்த நான்கு ஆண்டு காலத்தில் எந்த அமைச்சரும், எந்தத் தவறும் செய்யாது நேர்மையான முறையில் ஆட்சி செய்ய வேண்டுமென்பதிலே மிகக் கவனமாக முதலமைச்சர் அவர்கள் எங்களை வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதிலே நீங்கள் சொல்லித்தான் என்று இல்லை. நிச்சயமாக நான் ஒரு தவறு செய்திருப்பேனேயானால், உங்களுக்கு முன்பாகவே என் மீது அவர் நடவடிக்கை எடுத்திருப்பார். அந்த உறுதியை - என் மீது மட்டும் இல்லை. தவறு செய்வோர் மீது நடவடிக்கை எடுப்பதிலே இந்த முதலமைச்சர் அப்படி இருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உறுதியை—உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 1990 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை என்னென்ன வழக்குகள் Food Cell மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1990 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை அவர்களுடைய ஆட்சியிலே ஒருவர்கூடக் கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. ஆனால் உணவுப்பொருள்



கடத்தப்படாமல் இருந்ததா என்றால் இல்லை. ரூ.6,56,70,950 பெறுமானமுள்ள உணவுப் பொருட்களை அவர்களுடைய ஆட்சியிலே கடத்தியிருக்கிறார்கள். கடத்தலுக்கு உபயோகித்த வண்டிகள் 1139-ஐ பறிமுதல் செய்து, 1510 பேருக்கு மேலாக அன்றைக்குக் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் இங்கே 1996 ஆம் ஆண்டு நான்காவது முறையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, பொறுப்பேற்ற அன்றைக்கே அவர் எப்படிச் சொன்னார் என்றால், 'நேர்மையான நல்லாட்சியைத் தருவோம்' என்று சொன்னார்கள். அதிலே முக்கியமான பங்கு இந்த உணவுத் துறைக்கு வேண்டுமென்று இந்த உணவுத் துறையை - நமது Food Cell துறையைப் பலப்படுத்தினார்.

பிற்பகல் 12-05

ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நபர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது, எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை உங்களிடம் நான் சொல்ல விரும்புகிறேன். 1996 ஆம் ஆண்டு 5359 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதிலே P.D.S. rice மட்டும் கிட்டத்தட்ட 23,967 குவிண்டால். கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள அரிசியைக் கைப்பற்றியிருக்கிறோம் Number of persons arrested 831. 446 வண்டிகளை நாங்கள் சிறைப்பிடித்திருக்கிறோம். மொத்த மதிப்பு ரூ. 3 கோடியே சில்லரை. 1997 ஆம் ஆண்டு 4163 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. P.D.S. அரிசி என்று எடுத்துக்கொண்டால் 18,320 குவிண்டால். அதனுடைய மதிப்பு ரூபாய் ஒரு கோடியே எண்பத்தேழு இலட்சம். 1,405 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பறிமுதல் செய்த, கடத்தலுக்குப் பயன்படுத்திய வண்டிகள் 351. அதனுடைய மொத்த மதிப்பு 4,46,92,533 ரூபாய். 1998 ஆம் ஆண்டு 3,758 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கடத்தப்பட்ட அரிசியினுடைய அளவு 26,747 குவிண்டால் ரேஷன் அரிசி. அதனுடைய மதிப்பு ரூபாய் இரண்டு கோடியே எண்பத்திரண்டு இலட்சம் ரூபாய். அதிலே 956 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 356 வண்டிகள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனுடைய மதிப்பு 5,40,21,095 ரூபாய். 1999 ஆம் ஆண்டு 3500 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே சுமார் 2 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள அரிசி 20,385 குவிண்டால். 2,47,51,868 ரூபாய் அதனுடைய மதிப்பு. கடத்தப்பட்ட

ஆசாமிகளுடைய எண்ணிக்கை 1,141. வண்டிகளுடைய எண்ணிக்கை 582. மொத்த மதிப்பு 8,45,84,766 ரூபாய். 2000 ஆண்டு 31 லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள சரக்கு பிடிபட்டிருக்கிறது. இதிலே 1997-லே 4 பேரைத் தடுப்புக் காவல் சட்டத்திலே கைது செய்து வைத்திருக்கிறோம். 1998-லே 3 பேர்; 1999-லே 3 பேர்; 2000-ல் 4 பேர்;. மொத்தம் 14 பேர். இதுவரை பெரிய வியாபாரிகளை ஓராண்டு காலம் தடுப்புக் காவல் சட்டத்திலே இந்த உணவுப்பொருள் தடுப்புக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, கைது செய்திருக்கிறார்கள். தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறோம். இதிலே ஒவ்வோர் ஆண்டும் எந்தெந்த இடத்திலே எவ்வளவு அரிசி போனதோ அது முதற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்படி அமைச்சருக்குத்தான் இதிலே பங்கு; உயர் அதிகாரிகளுக்குப் பங்கு என்று இல்லாமல், நிச்சயமாக, யார் குற்றம் செய்திருந்தாலும் அவர்களுக்குத் தக்க தண்டனையை இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்டெய்னர்களில் கடத்தப்பட்ட அரிசியை இரயில்வே இலாக்காவினர், உணவு வழங்கல் துறையினுடைய சான்றிதழ் இல்லாமல் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே உணவு வழங்கல் துறையிலிருந்து ஓர் அதிகாரி சான்றிதழ் கொடுத்த பிறகுதான் இந்த அரிசி ஏற்றப்பட்டிருக்கிறது. அப்படி No Objection Certificate கொடுத்த அதிகாரி யார்? அவர் எந்தப் பதவியிலே இருக்கிறார்? அவர் மீது அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன? அதைப்பற்றி அமைச்சர் ஏன் எதுவும் கூறவில்லை என்பதனை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தெளிவாகக் கூறியிருக்கிறேன். நாகப்பட்டினம் மாவட்டத்திலே கறுப்பு அரிசியை ஏலம் எடுத்தவர்கள் கோவில்பட்டிக்குக் கொண்டு சென்று அந்த அரிசியை அங்கு வைத்திருக்கிறார்கள். அந்த அரிசி இப்போது Food Cell-ல் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக ஏலம் விடப்பட்டு, அதன் மூலம் வாங்கிய அந்த ரசீதுகளை போலியாகக் காண்பித்துத்தான் இந்த அரிசியைக் கடத்தி இருக்கிறார்கள். 31 Issue Memos, அவை கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றினுடைய Xerox copy எடுக்கப்பட்டிருக்கின்றன. அதை அவர்களே ஒப்புகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி கிட்டத்தட்ட ஆயிரம் கிலோமீட்டர் பிரயாணம் பண்ணியிருக்கிறது. தூத்துக்குடியிலிருந்து பெங்களூர் வரைக்கும் ஆயிரம் கிலோமீட்டர் பிரயாணம் பண்ணியிருக்கிறது அந்த அரிசி. நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த உணவுத் துறைக்குப் பொறுப்பு ஏற்ற பிறகு நடந்த ஊழல்களை எல்லாம் பட்டியல் போட்டு இப்போது காண்பித்திருக்கிறார். இதிலிருந்தே இந்த அமைச்சரை இந்தத் துறையிலிருந்து நிச்சயமாக வேறு துறைக்கு மாற்ற வேண்டியது நம்முடைய முதலமைச்சருடைய கடமை என்பதை அவரே சொல்லிவிட்டார். அதோடு இவ்வளவு பெரிய ஊழலை, ஏழை எளிய மக்களுக்காக 1500 கோடி ரூபாய் நம்முடைய வரிப் பணத்திலிருந்து கொடுக்கின்ற இந்த அரிசி இவ்வளவு மோசமான முறையில்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "இந்த அளவு கண்டுபிடித்து, இந்த ஊழல்களை எல்லாம் அமைச்சர் சொன்னார்; ஆகவே அத் துறையிலிருந்து அவரை மாற்ற வேண்டும்" என்றார். இனி வருகின்றவர்கள் இதையெல்லாம் கண்டுபிடிக்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்துகிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-10

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது இதிலே கண்டுபிடிப்பது என்பது, கொஞ்சமாக இருக்கும்; வெளியிலே வராமல் மறைத்திருப்பது மிக அதிகமாக இருக்கும் என்பதனால் அதைச் சொல்கிறேன். ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள்.....(குறுக்கீடு) இதிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து இந்த ஊழலை முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு, பணக்காரன், ஏழை என்ற பாகுபாடில்லாமல் "எவனாக இருந்தாலும் அவனை உள்ளே தூக்கிப் போடு" என்று உத்தரவிடப்பட்டு, அப்படி அவனுடைய லாரிகளும் பிடிக்கப்பட்டு

புலனாய்வு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நீதி விசாரணை வைத்தால் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்குத்தான் பயன்படும். எப்படியென்றால்—நான் நீதிபதி மீது குறை சொல்லவில்லை—விசாரணை எல்லாம் முடித்து Charge Sheet போடுகிற நேரத்தில் நீதி விசாரணை வைத்தால் அப்போது இன்னும் ஆறு மாத காலத்திற்கு மேலேயோ அல்லது தீர்ப்புச் சொல்கிற நேரத்திலே இன்னும் 6 மாதம் time வேண்டுமென்றோ கேட்பார்கள். கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிடும். எனவே, விவரம் முடிந்து விட்டது; விவகாரம் முடிந்துவிட்டது; விசாரணை முடிந்துவிட்டது. குற்றவாளிகள் யார் யார் என்று A-1, A-2, A-3, A-4, A-5 என்று சுட்டிக்காட்டியாகிவிட்டது. இதற்குப் பிறகு நீதி விசாரணை தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. நீங்கள் Walk out செய்வதற்குத் தயாராக இருந்தால், தயாராக இருங்கள் (சிரிப்பு).

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 28-1-2000-ல் 4200 டன் அரிசி தூத்துக்குடியிலேயிருந்து பெங்களூருக்குக் கடத்தப்பட்டிருக்கிறது. அதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் போலீஸ் அதிகாரிகள். அதன்பிறகுதான் ஓராயிரம் டன் அரிசி, கடத்துவதற்குத் தயாராக இருந்த அரிசி பிடிபட்டிருக்கிறது. ஆகவே, இதெல்லாம் மிகப் பெரிய சதி. இந்தச் சதியைக் கண்டுபிடிப்பதற்கு உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயாராக இல்லாததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

**திரு. ஜி. பழனிசாமி:** முதலமைச்சருடைய பதில் திருப்தியளிக்காததால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

**டாக்டர் தே. குமாரதாஸ்:** (வெளியில் சென்றுவிட்டு வந்து) ஒரு சில வார்த்தைகள் பேச அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பேச அனுமதிக்கமாட்டேன்.



**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கோரிக்கையை ஏற்காததால் நீங்களே தீர்ப்பு எழுதிக் கொண்டு....

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் வெளியிலே சென்றுவிட்டு வந்துவிட்டேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைக் கூப்பிடமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்களே தீர்ப்புக் கூறியதை எதிர்த்து எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் வெளிநடப்புச் செய்கின்றது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், இந்திய தேசிய லீக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. ரா. சேதுநாதன். (குறுக்கீடு) திரு. ரா. சேதுநாதன் என்று பெயர் கூப்பிட்டுவிட்டேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் வெளியிலே சென்றுவிட்டுதான் வந்தேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தாற்போலத்தான் கூப்பிடுவேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் பாரபட்சமாக நடக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம். நான் பாரபட்சமாக நடக்கிறேன், அடுத்தவரைப் பேசுமாறு கூப்பிட்டுவிட்டேன். வெளிநடப்புச் செய்யுங்கள். அப்புறம் கூப்பிடுகிறேன் (குறுக்கீடு) அதிலே என்ன தவறு. இரண்டு முறையிலே நடக்கக்கூடாது.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"போற்றுவோர் போற்றட்டும்.; புழுதி வாரித் தூற்றுவோர்
தூற்றட்டும், ஏற்றது ஒரு கருத்தை எனது
உள்ளம் என்றால், எடுத்துரைப்பேன்.... (குறுக்கீடு)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### பொது விநியோக அரிசி கடத்தல்—தொடர்ச்சி

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Hon. Speaker Sir, Point of Order. நான் பேசுகின்றபோதே குறிப்பிட்டேனே. இந்த அரிசி கடத்தலுக்குக் காரணமாக இருந்து வந்து—தரக்குறைவான அரிசி நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களிலேயிருந்து, அதாவது மக்களுக்குப் பயன்படுத்தக்கூடாத அரிசியை அதுவும் தமிழ்நாட்டிலே விற்பனை செய்யக்கூடாத இந்த அரிசியை, ஏலத்தில் எடுத்தவர், ஜெயகணேஷ் என்ற பெயரில்—நடராஜ உடையார்; "40,000 டன்கள்" என்று அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஒட்டுமொத்தமாக இந்தக் கடத்தலுக்குக் காரணமாக விளங்கக்கூடியவர் அவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். எனவே அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை அல்லது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒட்டுமொத்தமாகப் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யார் யார் இதற்குத் துணை போனார்களோ, யார் யார் ஒத்துழைத்தார்களோ அவர்கள் யாராக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. நம்முடைய மாண்புமிகு நேரு அவர்கள் இங்கே படித்துக்காட்டிய பட்டியல், தவறு செய்தவர்களை எல்லாம் கண்டுபிடித்த பட்டியல். அதுவே தவறு என்று சொல்கின்ற அளவிற்கு எதிர்க்கட்சியினர் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். பரவாயில்லை.



## (3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது கருத்துகளைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, சில கருத்துகளைச் சொல்ல நான் விரும்புகின்றேன்.

"போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரி தூற்றுவோர்
தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை கலைஞர்
உள்ளம் என்றால், எடுத்துரைப்பார், எவர்வரினும்
நில்லார்; அஞ்சார்."

என்ற இலட்சியப் பயணத்தை மேற்கொண்டு, நாட்டுமக்களால் போற்றப்படுகிற தலைவர் அவர்களால் நடக்கின்ற ஆட்சி இந்த ஆட்சி. ஏதோ சொல்லுவார்களே, "வேண்டாத மனைவி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்" என்று. கலைஞர் அவர்கள் மக்களுக்கு வேண்டிய மனைவியாக இருக்கிறார்கள். சிலர் வேண்டுமென்றால், ஏற்கெனவே இருந்த உறவை மாற்றிக்கொண்டு, இப்போது வேண்டாத மனைவியாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

1996 ஆம் ஆண்டு, 1997 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்திலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கின்றபோது, ஏன் அம்மையாரைக் கைது செய்யவில்லை? ஏன் தனி நீதிமன்றம் அமைப்பதிலே காலதாமதம்? அம்மையார் சுருட்டிய சொத்துக்களை, நாட்டுமக்களுடைய பணத்தைக் கொள்ளையடித்துச் சேர்த்த சொத்துக்களை, ஏன் கைப்பற்றி, அரசுக் கஜானாவிலே ஒப்படைக்கவில்லை என்று கேட்டவர்கள் இப்போது உறவை மாற்றிக் கொண்டார்கள். வாழட்டும் அவர்கள். ஆனால், உறவு சேர்ந்து நம்மை அளவுகோல் வைத்து அளவு எடுத்தார்கள். மக்கள் சேர்ந்து நம்மை அளவுகோல் வைத்து அளவு எடுத்தார்கள். மக்கள் மத்தியிலே நமக்கு இருக்கிற நியாயத்தைக் கேட்டார்கள். மக்களும் நியாயம் வழங்கியிருக்கின்றார்கள். மூன்று தொகுதிகளின் முடிவு அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இதுதான் நாளைய வரலாறு என்பதை அவர்கள்

நினைத்துக் கொண்டு அவர்கள் அரசியல் பயணம் தொடர வேண்டும்; தொடரட்டும்; அதற்கு நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவிப்போம்; 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைக்கின்ற ஒரு தலைவர் அகில இந்தியாவிலேயே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அந்த இலட்சியப் பயணத்தோடு நாட்டு மக்களுக்காகப் பல நல்ல திட்டங்களை கவர்னர் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஒன்றை நான் தெளிவாகச் சொல்லியாக வேண்டும். திண்டிவனத்திலே உழவர் சந்தை நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய பொற்கரங்களால் திறக்கப்பட்டது. அதை எத்தனை மக்கள் பாராட்டுகிறார்கள், எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டை நான் சொல்ல விரும்புகின்றேன். 28-2-2000-லிருந்து 5-3-2000 வரையில் திண்டிவனத்திலே, அந்தச் சந்தைக்கு உழவர்களுடைய வருகை எண்ணிக்கை 747. விற்பனையான காய்கறிகளினுடைய எடை 85,152 கிலோ; ஏழு நாட்களிலே அதனுடைய மதிப்பு ரூபாய் 3,71,610. நுகர்வோர்—முக்கியமாகக் கவனிக்க வேண்டும், நுகர்வோர்—88,792 பேர் ஏழு நாட்களிலே திண்டிவனம் பகுதியிலே பயன்பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அதைவிட ஓர் அற்புதமான திட்டம் இந்த நாட்டிலே இன்னும் பிறக்கவில்லை. அந்தச் சந்தை நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய சிந்தையிலே உருவாகி, நாட்டுமக்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். நகர மக்கள் பயன்பெறுகிறார்கள்.

நான் சந்தைக்கு வாரத்திற்கு இரண்டு முறை செல்வதுண்டு. ஏன் என்றால், என்னைக் கேட்பார்கள். "ஏன் நீங்கள் வாரம் இரண்டு முறை வருகிறீர்கள்" என்று. நான் சொல்வேன். "இந்தத் திட்டம் கலைஞரின் செல்லப்பிள்ளை, அந்தப் பிள்ளையைப் பார்க்காமல் நான் என்ன இங்கே சட்டமன்ற உறுப்பினர்?" என்று சொல்லிக்கொண்டு நான் அந்தப் பிள்ளையைப் பார்த்து வருகிறேன்.

அதேபோல உழவர் சந்தை கோயம்புத்தூரிலே; அங்கே விற்கப்பட்ட காய்கறிகளினுடைய விவரங்களைச் சொல்லியாக வேண்டும். 25-2-2000 முதல் 7-3-2000 வரையில் காய்கறிகளினுடைய வரவு, அங்கே விற்பனை செய்யப்பட்டது. 3,04,714 கிலோ; அதனுடைய மதிப்பு ரூபாய் 20,49,542. உழவர்களுடைய எண்ணிக்கை 2,309. நுகர்வோருடைய எண்ணிக்கை 83,510 இப்படி குறுகிய காலத்திலே அதிகமான நுகர்வோர் பயன்பெறக்கூடிய அளவிற்கு திட்டங்களைத் தீட்டினார் மாண்புமிகு கலைஞர் அவர்கள்; இந்த நாட்டுமக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



அந்தப் பாராட்டின் சான்றிதழ்தான் மூன்று தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிவு என்பதை அவர்கள் புரிந்து கொள்ளட்டும்; புரிந்து கொண்டிருக்கிறார்கள். "சேர்ந்தோம், வீழ்த்திவிடலாம்" என்றார்கள்; சேர்ந்தார்கள், வீழ்ந்துவிட்டார்கள். ஏனென்றால் நாட்டுமக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்; கலைஞரின் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல பட்டா கொடுக்கிற திட்டம். அரசுக்குத் தேவையில்லாத நிலங்களை, 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்துக்கொண்டிருக்கின்ற வீட்டுமனைகளை, அந்த வீடுகளை அனுபவிக்கின்றார்களே அவர்களுக்கே பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைத் தீட்டியவர் கலைஞர் அவர்கள். அந்தத் திட்டத்தை மட்டும் விரைவில் நிறைவேற்றுவார்களேயானால் நாட்டுமக்களில் பெரும் பகுதியினர் கலைஞரின் பக்கம்தான் இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-20

ஒரு வேண்டுகோள். 20 ஆண்டுகாலம் குடியிருந்தால்தான் பட்டா கொடுக்கப்படும் என்று சொல்வதைத் தளர்த்தி, 10 ஆண்டுகாலம் அந்த வீட்டில் இருந்தால் அவர்களுக்குப் பட்டா கொடுக்கலாம் என்று அந்தத் திட்டத்தைச் சற்று ஆய்வு செய்து அறிவிக்கவேண்டும். குடியிருப்பவர்கள் இப்போது சொல்கிறார்கள், எங்கே ஐயா இருக்கிறாய் என்று கேட்டால், புறம்போக்கில் இருக்கிறேன் என்று சொல்வார்கள். அந்தப் புறம்போக்கு என்று சொல்கிற வார்த்தையை மாற்றி, பட்டாவாக ஆக்கி, அதன்மூலம் நமக்கு மக்கள் பட்டயம் கொடுக்க கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மிக வணக்கத்தோடு கேட்டுக் கொள்கின்றேன்.

'வருமுன் காப்போம்' திட்டம். நான் என்னுடைய நிலத்திற்கு சில நேரங்களில் பதினைந்து நாட்கள் போகாமல் இருந்து விடுவேன். பிறகு போய், "என்னய்யா, அந்த குப்புசாமி எங்கே" என்று கேட்டால், "செத்துவிட்டான்" என்று சொல்வார்கள். "ஏன்?" என்று கேட்டால், வயிற்று வலியால் இறந்துவிட்டதாகச் சொல்வார்கள். "வயிற்றுவலியில் எப்படிச் செத்தார்?" என்று கேட்டால், "என்னமோ தெரியவில்லை.

பத்து நாட்கள் படுத்தான், செத்துவிட்டான்." என்று சொல்வார்கள். "ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்க் காட்டியிருந்தால் காப்பாற்றி இருக்கலாமே" என்று கேட்டால், "அப்படியே இருந்தான், அப்படியே செத்துப்போய்விட்டான்" என்று சொல்வார்கள். இதையெல்லாம் கண்டறிவதற்காக முதல்வர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து, பத்து நாட்களில் ஒரு இறப்பா என்று எண்ணி, இத்திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இவ்வளவு பெரிய விஞ்ஞானம் வளர்ந்த காலத்திலே, அறிவியல் வளர்ந்த காலத்திலே, மருத்துவம் வளர்ந்த காலத்திலே, பத்து நாட்களிலே ஒருவன் இறந்து விடுகிறானே என்ற வேதனை எனக்கு உண்டு. அந்த வேதனையை நான் முதல்வரிடத்திலே சொல்லவில்லை. ஆனால் அதையெல்லாம் எண்ணிப்பார்த்து அப்படிப்பட்ட பல நோய்களை—குறுகிய காலத்திலே இறப்பை ஏற்படுத்துகிற நோய்களைக்—கண்டறிய இத்திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். "மார் வலி என்று சொன்னார்கள். செத்துவிட்டார்கள்" என்று சொல்வார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் பயன்பெறுகின்ற வகையில் ஒரு முன்னோடித் திட்டத்தை இந்த நாட்டு மக்களுக்கு அளித்திருக்கிறார்கள். பல லட்சம் பேர், அதில் பயன் பெற்று இருக்கிறார்கள். மக்கள் பாராட்டுகிறார்கள். ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால் நான் சொல்லவில்லை. யதார்த்தமாகச் சொல்கிறேன். மக்கள் கருத்துகளை மன்றத்தில் தெரிவிப்பது ஓர் உறுப்பினருடைய கடமை என்ற காரணத்தால் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

அதைப்போல வாயில்லாத ஜீவன்கள். அதைக் கேட்பதற்கு யாரும் இல்லை. பார்ப்பதற்கு யாரும் இல்லை. கலைஞர் கண்ணெடுத்துப் பார்த்து, அந்தக் கால்நடைகளுக்கு இப்போது அறிவித்திருக்கிற திட்டம் உண்மையிலேயே சிறப்பானது. நான் கூட ஒரு ஊருக்குப் போனேன் அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்க்க, 500 ஆடு, மாடு, கோழிகள்; நானே எதிர்பார்க்கவில்லை. ஆனால் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு நாளும் ஒரு தொகுதியிலே ஏதாவது ஒரு ஊரில் அந்த முகாம் நடைபெற வேண்டும். முதல்வர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, அது தொடர்ந்து செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கருத்து, கலைஞர் அவர்கள் எப்போதுமே நாளைய தேர்தலைப் பற்றிச் சிந்திக்கின்ற தலைவர் அல்ல. நாளைய சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரு தலைவர்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலைஞர், கலைஞர் என்று சொல்லக்கூடாது. முதலமைச்சர் என்று சொல்ல வேண்டும்.

**திரு. ரா. சேதுநாதன்:** அன்பின் காரணமாகத்தான் சொல்லிவிடுகிறேன். மன்னிக்க வேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் நாளைய தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல் நாளைய தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கிறார் என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்றுதான் சொல்லியாக வேண்டும்.

திண்டிவனம் தொகுதிக்கு மட்டும் 12 பள்ளிக்கூடங்கள். நம்முடைய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கல்வியிலே என்னுடைய தொகுதியிலே ஏற்பட்ட வறட்சியை நீக்கிய பெருமை நம்முடைய அன்புத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் உண்டு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திண்டிவனத்திலே கலைக்கல்லூரியும், விழுப்புரத்திலே கலைக்கல்லூரியும், கடலூரிலே கலைக்கல்லூரியும் என்றால், அவை நம்முடைய முதல்வர் அவர்கள் காலத்திலே வந்த கலைக்கல்லூரிகள். ஏனென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் பற்றிச் சிந்தித்து, நாளைய தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல், நாளைய சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்து கல்வி அறிவை ஊட்டிய பெருமை நம்முடைய கலைஞர் அவர்களுக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீண்டும் சொல்கிறேன். நாளைய சமுதாயத்தை பற்றிச் சிந்திக்கிற காரணத்தால் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி தேவை என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். நாட்டு மக்களால், அந்தப் பிள்ளைகளால், மாணவச் செல்வங்களால் பாராட்டப்படுகின்ற திட்டம் அது.

அதைப்போல சாதிச் சான்றிதழ். ஒரு சான்றிதழ் வாங்குவதற்கு, V.A.O., R.I., துணை தாசில்தார் போன்றவர்களிடம் ஒரு வாரம் நடக்க வேண்டும்; செலவு செய்ய வேண்டும்;. பத்து முறை பஸ்சில் போக வேண்டும். அதைப் பள்ளிக்கூடத்திலேயே கொடுப்பதற்கு ஆவன செய்தார்களே கலைஞர் அவர்கள். அதைப் பள்ளிச் செல்வங்கள் வாயாரப் பாராட்டுகிறார்கள். உளமாரப் பாராட்டுகிறார்கள். அந்த மக்கள் பாராட்டுகிற பாராட்டை இந்த மன்றத்திலே நான் முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களைப் பற்றிக் கேட்பார் இல்லை. ஒருவர் நான்கு மாடி கட்டுவார். அங்கேயிருந்து கீழே விழுந்துவிட்டால் ஆதரவில்லை. அனாதையாக்கப்பட்டு நொண்டியாகி, முடமாகி இறந்துவிடுகிற காட்சி பல இடங்களில் நடைபெறுகிறது. அந்தக் கட்டடத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்த பெருமை நம்முடைய அன்புத் தலைவர் முதல்வர் அவர்களுக்கு உண்டு. அதைப்போல, அமைப்பு ரீதியல்லாத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஒரு அமைப்பு ரீதியாகக் கொண்டுவந்து, அந்தத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வை ஏற்படுத்தி, அவர்களுக்கு விபத்து நிவாரணம், மகப்பேறு திட்டம், இப்படிப் பல திட்டங்களை அறிவித்த பெருமை கலைஞர் அரசுக்கு உண்டு. கேட்பாரற்றுக் கிடந்த தொழிலாளர்களுக்கு, ஆதரவற்றிருந்த தொழிலாளர்களுக்கு, அமைப்பு ரீதியல்லாத தொழிலாளர்களுக்கு ஆதரவளித்துள்ள நம்முடைய முதல்வர் அவர்களைத் தொழிலாளர் பெருமக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இப்போது நல்ல விடை கிடைத்திருக்கிறது நாட்டு மக்களிடத்திலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலச் சர்க்கரை ஆலை;. திண்டிவனம் பகுதிக்குச் சர்க்கரை ஆலை கேட்டோம். தனியார் ஆலைகள் இரண்டைக் கொடுத்தார்கள். தரணி சுகர்ஸ், சவுத் இந்தியா சுகர்ஸ் என்ற இரண்டு ஆலைகளைக் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் ஆரம்பிக்கவில்லை. ஏன் என்று தெரியவில்லை. எனவே அதற்குரிய நடவடிக்கைகளை முதல்வர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனத்திற்கு புளிச்சபள்ளத்திலேயிருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அது நம்முடைய முதல்வர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திட்டம் முடிகிறபோது ஆட்சி மாறிவிட்டது. அதனால் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அந்தக் குழாய்களில் அடிக்கடி வெடிப்புகள் ஏற்பட்டு தண்ணீர் வந்து சேரவில்லை. அதுமட்டுமல்ல, அந்தத் தண்ணீரின் சுவை குறைந்திருக்கிறது. நான் வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன், செஞ்சிக்கு வருகின்ற பெண்ணையாற்றுத் தண்ணீரைத் திண்டிவனத்திற்கு நீட்டித்துத் தாருங்கள்; தாருங்கள்; எங்களுடைய தாகத்தைத் தீருங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கேட்டிருக்கிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.



SIPCOT, எங்களுடைய பகுதிக்குத் தேவையென்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அந்தத் திட்டத்தையும் எங்களுடைய தொகுதிக்குத் தாருங்கள், தாருங்கள்; எங்கள் மக்களுடைய வறுமையைப் போக்குங்கள், வளமான வாழ்வைத் தாருங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, நிறைவு செய்கின்றேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ். நீங்கள் என்ன டாக்டர்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சித்தா டாக்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது சில கருத்துகளைக் கூறுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றியினைச் சொல்லி, இந்த ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்கிறபோது, அவற்றுக்குள் சென்றால் எனக்கு அதிக நேரம் கிடைக்காது என்ற காரணத்தால், சில வேண்டுகோள்களையும் அரசு கவனிக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளையும் பற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, "கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி தருவோம்" என்று அறிவித்து இருந்தார்கள். அதைச் சொல்லியிருப்பீர்கள் என்று எதிர்பார்த்தோம்; காணவில்லை; 'குமரி மாவட்டத்திற்கு இரப்பர் தொழிற்சாலை தருவோம்' என்று சொல்லியிருந்தார்கள்; எதிர்பார்த்தோம், காணவில்லை. மாவட்டங்கள்தோறும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வரும் என்று எதிர்பார்த்தோம், காணவில்லை. குமரி மாவட்டத்திலே மீனவ தொழிலாள நண்பர்களுக்கு மீன் பிடிக்கச் செல்வதற்காக தூண்டில் வளைவு அமைக்கப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்த்தோம், காணவில்லை. குளச்சலிலே துறைமுகம் அமைக்கப்படும், அதன்மூலம் அங்கே பல்லாயிரக்கணக்கான மீனவத் தொழிலாள நண்பர்களுக்கு மீன் பிடிக்கின்ற வாய்ப்பு வரும் என்று எதிர்பார்த்தோம், காணவில்லை. அதேபோல கட்டடத் தொழிலாளர்களுடைய வெகு நாளைய கோரிக்கை; சென்னையிலே புதிதாகக் கட்டப்படும் மேம்பாலங்கள் 12-க்கு, தமிழ்நாடு முழுவதும், இந்த அரசு வசூல் செய்யும் 0.3% லெவி வசூலிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கட்டடத் தொழிலாளர்களுக்கு E.S.I., P.F., Pension, வீட்டு வசதி, மழைக்கால நிவாரணம் போன்ற திட்டங்களை அரசு ஏன் அமல்படுத்தவில்லை என்பதை அறிய விரும்புகிறேன். அரசு அறிவித்த விபத்து நிவாரணத் தொகை மற்றும் அனைத்து ஊதியங்களையும் உடனடியாக வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட வாரியாக கட்டடத் தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள் அமைக்கப்பட்டாலும், அங்கே தேவையான எழுத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கல்வி இலாகாவைப் பொறுத்தவரைக்கும், அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு உதவியாளர் பணியிடங்கள் வழங்கிட அரசு ஆணை எண் 1473-ஐ அமல்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை உங்கள் முன்னால் வைத்து, அதேபோல கோவை மாவட்டத்திலே அவிநாசிலிங்கம் பெண்கள் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்குச் சட்டக் கல்லூரி தொடங்க மத்திய Bar Council அங்கீகாரம் கொடுத்துவிட்டது. ஆனால் மாநில அரசு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூத்த உறுப்பினர். உரையை எழுதி வைத்துக்கொண்டு படிக்கிறீர்களே! பேப்பர்களைக் கீழே வையுங்கள். அதை ஞானசேகரன் எழுதிக் கொடுத்திருக்கிறாரா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அந்தச் சட்டக் கல்லூரிக்கு மாநில அரசு அங்கீகாரம் கொடுக்கவில்லை. அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது சிறந்த கல்வி ஸ்தாபனமாகச் செயல்படுகிறது. முன்னாள் மத்திய அமைச்சர், மறைந்த மரியாதைக்குரிய அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களால் தொடங்கப்பட்ட ஸ்தாபனம் அது. அதனுடைய துணை வேந்தர் இராஜம்மாள் தேவதாஸ் அவர்கள். அவர் நல்லமுறையிலே செயல்பட்டு வருகிறார். எனவே அந்தக் கல்லூரிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் எங்களுடைய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் "மக்கள் விரோத சர்க்கார்" என்று சொன்னார். உடனே பல்வேறுவிதமான எதிர்ப்புகள் பல்வேறு தரப்பிலேயிருந்து வந்தன. ஏன் அதனை நான் சொல்கிறேன் என்றால், நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, வந்த விலைவாசி ஏற்றத்தை ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகிற



பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. மின்சாரத்திற்கு அதிகமான கட்டணத்தினை வசூலிக்கிறீர்கள். ரேஷன் அரிசியை அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோல மத்தியிலே இருக்கக்கூடிய சர்க்கார், உங்களுடைய தோழமை சர்க்கார் என்று உறவு கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களே அவர்கள், சமையலுக்குப் பயன்படுத்துகிற கேஸ், மண்ணெண்ணெய், ரேஷன் பொருட்கள், டீசல், இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே விவசாயிகளின் முதுகெலும்பாகக் கருதப்படுகிற, 80% விவசாயிகள் பயன்படுத்துகிற Urea போன்றவற்றுக்கு விலை உயர்வு ஏற்படுத்தியிருப்பதை நான் இங்கே வன்மையாகக் கண்டிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—திரு. குத்தாலம் பி. கல்யாணம்—தலைமை)

பிற்பகல் 12-30

அதைப்போல 1967-ல் ஆட்சிக்கு வந்த பிறகு—இப்போது 2000 ஆண்டு நடந்து கொண்டிருக்கிற காலகட்டம்—33 ஆண்டுகளாக கழகங்களுடைய ஆட்சி தமிழகத்திலே மாறி மாறி வந்திருக்கிறது. 33 ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சியிலே ஆரம்பப் பள்ளியினுடைய கல்வி தமிழிலே இருந்தது. 33 ஆண்டுகள் கழிந்து இப்போது நீங்கள் தமிழிலே பயிற்சி மொழி ஐந்தாவது வகுப்பு வரை வரவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்ததாக மார்தட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்குத் தமிழனுடைய நிலையை நான் எண்ணிப்பார்க்கிறேன். "தமிழ் படி ,தமிழ் படி," என்று சொல்கிறோம். தமிழ் படிக்கிறோம். ஆனால் இப்போது சென்னை மாநகராட்சியில், சிங்காரச் சென்னையில் குப்பை அள்ளவேண்டுமென்று சொன்னாலும் தமிழர்களுக்கு வாய்ப்பில்லை. சிங்கப்பூர்க்காரர் வந்து தமிழகத்திலே குப்பை அள்ளுகின்ற ஒரு சூழ்நிலை இப்போது தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலப் பாலங்கள்; இந்தப் பாலங்கள் கட்டப்படுகின்றபோது, இதற்கு முன்பு இந்திய அளவிலே டெண்டர் விடப்படும் அல்லது அந்தந்தப் பகுதியிலே, வேலைகள் நடைபெறும் பகுதியிலே டெண்டர் விடப்படும். ஆனால் அந்தச் சூழ்நிலையை மாற்றி Global Tender, ஏன்? அங்கேதான் ஊழலுக்கு வசதியாக இருக்கும் என்கிற காரணத்தாலே

உலக நாடு அளவிலே ஊழலுக்கு tenderவிட்டு இன்றைக்குப் பாலங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறீகள். இங்கேயுள்ள கட்டுமான.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாற்றுத் தலைவரவர்களே, ஆரம்பமே நன்றாக இல்லை. ஊழலுக்காகத்தான் tender விட்டமாதிரி சொல்கிறார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சந்தேகமே இல்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நிரூபிக்கலாம். எதெதில் ஊழல் நடந்திருக்கிறது என்ற விவரம் கொண்ட பட்டியலைக் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு பேசலாம். ஊழல் என்கிற வார்த்தையை எதற்கெடுத்தாலும் சொல்வது நன்றாக இருக்காது. அந்த ஊழல் என்பதற்கு என்ன ஆதாரம் என்பதைக் கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். இப்போதுதான் முதலில் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறோம். இந்த மாதிரி சொல்லிக் கொண்டிருப்பது நல்லது அல்ல.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பணம் கை மாறியிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். இல்லையென்று நிரூபிக்க வேண்டியது உங்களுடைய கடமை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இப்படித்தான், "கை மாறியிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன், கேள்விப்படுகிறேன்" என்று பேசி முடிக்கிறீர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் "பணம் கை மாறி இருக்கிறது" என்று கேள்விப்படுகிறார். அப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமானால் அதற்கான ஆதாரத்தை சபாநாயகர் அவர்களிடத்திலோ அல்லது தற்காலிகத் தலைவரிடத்திலோ கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டும். இல்லையானால் அந்த வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உலக நாடுகள் அளவிலே இந்த tender...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினர், அவை முன்னவர் சொன்னதைப்போல பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா?



**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதாவது திட்டம் போட்டு என்னைப் பேசவிடக்கூடாது என்று நீங்கள் முடிவு எடுத்தால்.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட பொத்தாம்பொதுவான குற்றச்சாட்டை இங்கே பேசக்கூடாது. நாங்கள் ஒன்றும் Bofors ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை. அதனால், மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் "இன்னது இருக்கிறது. அதற்கு பதில் சொல்லட்டும்" என்று எழுதிக் கொடுங்கள். பின்னர் நீங்கள் அந்தக் குற்றச்சாட்டு பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Global Tender விட்டதிலே முறைகேடுகள் நடந்திருப்பதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். இல்லை என்று சொன்னால் நீங்கள் "இல்லை" என்று மறுத்துவிடுங்கள், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அந்தக் குற்றச் சாட்டைக்கூட இல்லையென்று மறுப்பதற்கு இன்னமாதிரி நடைபெற்று இருக்கிறது என்று சொன்னால்தானே, "அப்படி இல்லை" என்று சொல்லலாம். பணம் கை மாறியிருக்கிறது என்றால், உங்களிடம்கூடத்தான் தினமும் பணம் கை மாறுகிறது. அதனால் பணம் கை மாறியிருக்கிறது என்ற வார்த்தை போதுமானதல்ல. "இன்னமாதிரி நடைபெற்று இருப்பதாகச் சந்தேகப்படுகிறேன்" என்றுகூடச் சொல்லலாம். இன்னமாதிரி நடைபெற்று இருக்கிறது என்று சொல்லாமலேயே பேசினால் எப்படிப் பதில் கூறமுடியும்? பணம் கை மாறாமல் எந்த வேலை நடைபெறுகிறது இந்த நாட்டிலே?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் Global Tender விட்டதையே ஊழலுக்கு அடிப்படை என்று சொல்கிறார். Global Tender ஏன் விடுகிறோம்? இந்திய அளவிலே, இந்த அரசாங்கம் மட்டுமல்ல மத்திய அரசாங்கமாக இருந்தாலும், மாநில அரசாங்கமாக இருந்தாலும் Global Tender விடுவதினுடைய நோக்கமே ஊழல் நடக்கக்கூடாது; உலகத்திலே யார் வேண்டுமானாலும் அந்த tender-லே பங்குகொள்ளலாம் என்பதற்காகத்தான். இது transparent Government. ஆகவேதான் Global Tender நாங்கள் கேட்டோம். நாங்கள் தவறு செய்ய வேண்டுமென்று நினைத்தால் இங்கே இருக்கக்கூடிய நான்கு,

ஐந்து Contractor-களைக் கூப்பிட்டு tender போடச் சொல்லி அதிலே ஊழல் செய்யலாம். அப்படி ஊழல் நடைபெறக் கூடாது. ஊழலுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் Global Tender கேட்கப்படுகிறது. இது அகில இந்திய அளவிலே ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று.

**டாக்டர் அ. செல்லக்குமார்**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "ஊழல் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் Global Tender நாங்கள் கோரியிருக்கிறோம்" என்று சொன்னார்கள். அப்படி என்று சொன்னால், Global Tender கோராத இடங்களில் அந்த ஒப்பந்தங்களில் ஊழல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா என்பதை இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் *12-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Global Tender எது, எதற்குக் கேட்க வேண்டும். எது, எதற்கு M.O.U. போட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கம் வரையிலே ஒரு வரைமுறை இருக்கிறது. ஒன்றை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு நரசிம்மராவ் அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்தபோது இந்தியாவிலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்று எண்ணி, இந்தியாவிலே ஏறக்குறைய 50-க்கும் மேற்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களோடு M.O.U. போட்டிருக்கிறார். அந்த அடிப்படையிலே சிலவற்றிற்கு M.O.U. போட்டும் வேலைகள் நடைபெறுவதுண்டு.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சுமார் 3 தினங்களுக்கு முன்பு மேற்கு பகுதியினுடைய இராணுவ தளபதி லெப்டினட் ஜெனரல் மரியாதைக்குரிய விஜய் ஓபராய் அவர்கள் சென்னைக்கு வருகை தந்து ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். நீங்கள் இந்த விஷயத்தை மிகக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருட்கள் தமிழகம் வழியாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது. இங்கே கடத்தப்படுகிற பொருட்கள்



அத்தனையும் பெரும் பகுதி சாத்தான்குளம், திசையன்விளை பகுதியில் பிடிபட்டிருக்கின்றன. கடந்த 1½, 2 ஆண்டுகளில் கிட்டத்தட்ட *200* கோடி ரூபாய்க்கான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

கன்னியாகுமரி முதல் தூத்துக்குடி வரைக்கும் கடற்கரைப் பகுதிகள் தமிழக அரசினுடைய கட்டுப்பாட்டிலோ மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலோ இல்லை. ஒரு தனியார் நபருக்கு, வீ.வீ. மினரல்ஸ் என்பவருக்கு, மணல் எடுப்பதற்காக அந்தக் கடற்கரை பகுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்தப் பகுதிகளில் அதிகாரிகள் செல்லாமல் இருப்பதால் விடுதலைப் புலிகளுடைய ஊடுருவல் இந்தப் பகுதி வழியாகத்தான் நடைபெறுகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு போதைப் பொருள் அதிகாரிகள், மூன்று பேரைக் கைது செய்திருக்கிறார்கள். அந்த மூன்று பேரில் இரண்டு பேர் இலங்கையைச் சார்ந்தவர்கள்; ஒருவர் கூடங்குளம் பகுதியைச் சார்ந்த பிரான்சிஸ் என்பவர். அவரையும் கைது செய்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து *40* கோடி ரூபாய்க்கான கடத்தல் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அந்த பிரான்சிஸ் என்பவர் சாதாரண மீன்பிடித் தொழிலாளி. அவர் *40* கோடி ரூபாயை வாழ்க்கையிலே பார்க்கவே முடியாதவர். அந்த போதைப் பொருளைக் கடத்துவதற்கு அவ்வளவு பெரிய பணம் அவருக்கு எப்படி வந்தது என்பதை ஒரு கணம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் *15* எம்.எல்.-ஏ.க்கள் அந்த வி.வி. மினரல்சினுடைய நிறுவனத்தின்மீது "இவர்கள் கடத்தல் செய்கிறார்கள். இவர்கள் போலியாக மணல் எடுக்கிறார்கள். அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள். விசாரணை நடத்த வேண்டும்" என்று ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அதன்பிறகு குங்குமம் பத்திரிகையினுடைய நிருபர் அந்தப் பகுதியிலே சென்று *20-6-1998* அன்று ஒரு பத்திரிகையிலே அங்கே மணல் கடத்தப்படுவது உண்மை, இப்படிப்பட்ட தவறான செயல்கள் அங்கே நடைபெறுவது உண்மை என்கிற செய்தியினை வெளியிடுகிறார். ஆனால், அதற்குப் பிறகு தீபாவளி வருகிறபோது சன் டி.வி.-யிலே வெளியிடுகிறார்கள். என்ன தெரியுமா? அந்தப் பரிசுப் போட்டிகளை வைத்து இரண்டு ஹோண்டா கார்கள் இந்த வி.வி. மினரல்ஸ்சினுடைய முதலாளியிடமிருந்து வருவதாக விளம்பரப்படுத்தி வாங்குகிறார்கள். ஆக, கடத்தலுக்கு உடந்தையாக இருக்கிற அவர்களிடமிருந்து இந்தப் பணத்தை, இரண்டு ஹோண்டா கார்களை குங்குமம் நிறுவனம் பெற்றிருக்கிறது என்று சொன்னால்

அதற்குப் பிறகுதான் இன்னும் அதிகமான கடத்தல்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக, இப்படிப்பட்ட கடத்தல்காரர்களோடு முதலமைச்சருக்குத் தொடர்பு இருக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், நிச்சயமாகத் தொடர்பு இல்லாமல், விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் இல்லாமல் பாகிஸ்தான்காரர்களுடைய ஊடுருவல் இல்லாமல் இப்படிப்பட்ட கடத்தல்கள் அங்கே நடக்க முடியாது. எனவே....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வி.வி. மினரல்ஸ் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால் "200 கோடி ரூபாய் அளவுக்கு போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன" என்று சொன்னார்கள். ஆனால், அதேநேரத்தில் "அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள்ளேயும் இல்லை" என்றும் சொன்னார்கள். நான் கேட்கிறேன் தெரிந்து கொள்வதற்காக. தமிழக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாவிட்டால் அந்தப் போதைப் பொருட்களை எப்படிக் கண்டுபிடித்திருக்க முடியும்? எப்படி 3 பேரைக் கைது செய்திருக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்று. இரண்டாவது, வி.வி. மினரல்ஸ் ஏதோ இரண்டு வேன்கள் கொடுத்தார்கள்" என்று எல்லாம் சொன்னார்கள். அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. அதுகுறித்து நிச்சயமாக விளக்கம் கிடைக்குமானால் அவைக்குத் தரத் தயாராக இருக்கிறோம். ஆனால், அந்த வி.வி.மினரல்ஸ் 1998-க்கு முன்னாலே யாருக்குப் பின்னாலே இருந்தார்கள். யாரை ஆதரித்தார்கள், எங்கே மத்தியிலே அமைச்சர்களாக அவர்களெல்லாம் இருந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-40*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்குள் 200 கோடி ரூபாய் போதைப் பொருள் கடத்தப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வந்த செய்திகளைக் கோர்வையாக வைத்து இருக்கிறோம்; தருவதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதில் எனக்கு நாட்டம் அல்ல. நம்முடைய நாட்டிலே இலங்கையைச் சார்ந்தவர்களும் பாகிஸ்தானைச் சார்ந்தவர்களும் ஊடுருவலுக்கு வழி வகுக்கிற பகுதி தென் மாவட்டங்களாக அமைந்துவிட்டன; அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆக, தென் மாவட்டங்கள் முழுவதும் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறதா? விடுதலைப்புலிகளுடைய நடமாட்டம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறதே! போதைப் பொருள் கடத்தப்படுகிறதே! தற்போது இந்தியாவுக்கு திரு. கிளிண்டன் வருகிற நேரத்திலே, இந்தியத் திருநாட்டிலே கலவரம் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்ட சதிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் உண்மைதானா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரச்சினையைப் புரிந்துகொண்டு பேச வேண்டும். ஊடுருவல் என்று சொன்னாலே, கட்டுப்பாடு நம்மிடத்திலே இருந்தால்தான் பிறர் ஊடுருவல் செய்ய முடியும். ஊடுருவல் என்று சொன்னாலே, நம்மிடத்தில் கட்டுப்பட்டு இருக்கிறது என்று அர்த்தம். இல்லையென்றால் அது ஊடுருவல் அல்ல. அவர்களிடம் நாடு இருக்கிறது என்றால் நாம் போய்ப் பார்த்துவிட்டு வருகிறோம் என்று அர்த்தம். ஆகவே, ஊடுருவல் பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது; அது பாகிஸ்தான் வேறு; விடுதலைப் புலிகள் வேறு;— கஞ்சா—அவர் சொன்ன போதைப் பொருள் எனக்கு அவ்வளவு பழக்கம் இல்லை; அதுபற்றி அவரைத்தான் கேட்க வேண்டும், அதைக் கடத்துவது வேறு; பணம் சம்பாதிப்பது வேறு; இவற்றைக் கண்டுபிடிக்கிறது அரசாங்கம்; அப்படிக் கண்டுபிடித்த அளவு அதிகமாக இருக்கிறது என்றாலும், குற்றம் அதைவிடக் கூட இருக்கலாம்; ஆனால், பெருமளவுக்குக் கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்பது காவல் துறைக்கு அகில இந்திய அளவிலே, உலக அளவிலே பாராட்டு ஆகுமே தவிர, எல்லாவற்றையும் கண்டுபிடித்த காவல் துறை உலகத்திலேயே கிடையாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது மூன்று நாடுகள் சம்பந்தப்பட்ட சமாச்சாரம்; பாகிஸ்தான், இந்தியா, இலங்கை. இவற்றை நீங்கள் விசாரிப்பதற்கு உங்களால் இயலாது . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களாலே இயலாத பிரச்சினையிலே, எங்கள் மேலே எப்படிக் குற்றம் வரும்? இது அகில இந்திய பிரச்சினை; மத்திய அரசினுடைய பிரச்சினை. பாகிஸ்தான் பிரச்சினையாக இருந்தாலும், இது மத்திய அரசினுடைய பிரச்சினை; பாகிஸ்தானாக இருந்தாலும்

சரி; இலங்கையாக இருந்தாலும் சரி; நாங்களே இலங்கைத் தமிழர்களை ஆதரிக்கிறோம் என்றாலும், நாங்களாக ஒரு முடிவு எடுக்க முடியாது. ஆகவே, இது மத்திய அரசு மேற்கொள்ள வேண்டிய பிரச்சினை. அதிலே இந்த அரசைச் சம்பந்தப்படுத்தி அநாவசியமாகக் குறைபடுவதில் அர்த்தமில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நடைபெறுகிற குற்றச்சாட்டை மத்திய புலனாய்வுத் துறை—C.B.I., D.R.I., N.C.B., RAW,—போன்றவை விசாரிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையே. மத்திய புலனாய்வுத் துறையினுடைய இந்தப் பிரிவுகள் விசாரிக்கும் என்று சொன்னால்தான், 3 நாடுகள் தொடர்புடைய சமாச்சாரங்கள் வெளியே வரும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** நீங்கள் முடித்துவிடுங்கள்; உங்களுடைய நேரம் exceed ஆகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எனது நேரத்தை அமைச்சர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** உங்களுக்குக் கொடுத்த நேரம் exceed ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இதிலே வி.வி. மினரல்ஸ் நிறுவனம் கண்காணிக்கப்பட வேண்டும். கடற்கரைப் பகுதிகள் பூராவும், கன்னியாகுமரியிலிருந்து தூத்துக்குடி வரைக்கும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற lease-ஐ நீங்கள் இரத்துச் செய்ய வேண்டும். அப்படி இரத்துச் செய்தால்தான், அந்தப் பகுதியிலே நம்முடைய மக்கள் நடமாட்டம் செய்ய முடியும். எனவே, அரசு இதற்கு முன்வந்து ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டு, அவர்களுக்குக் கொடுத்து இருக்கிற அந்த உரிமத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

அதேபோல சட்டம் ஒழுங்கைப்பற்றிச் சொல்கிறபோது, நெல்லை மாவட்டத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வி.வி. மினரல்ஸ்-க்குக் கொடுத்து இருக்கின்ற



licence-ஐ இரத்துச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். Licence ஏதோ திடீரென்று ஆற்காடு வீராசாமியோ அல்லது இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணியோ நினைத்தால் யாருக்கும் கொடுத்துவிடுவதில்லை. Licence-ஐ வாங்குவதற்கு என்று மத்திய அரசாங்கம் சில விதி முறைகளை வகுத்து இருக்கிறது. குறிப்பாக, இப்படிப்பட்ட Minerals-க்கு, மத்திய அரசாங்கம், யார் யாருக்கு எந்த விதிமுறைப்படி licence கொடுக்க வேண்டும் என்று விதிமுறைகளை வகுக்கிறது. அந்த விதிமுறைகளின்படிதான் அந்த licence வழங்கப்பட்டு இருக்கும். அதிலே ஏதாவது முறைகேடுகள் நடந்தால், தவறு நடந்தால், அந்த மணல் எடுப்பதிலே அவர் தன்னுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி இருந்தால், அதைச் சுட்டிக்காட்டினால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** டாக்டர் தே. குமாரதாஸ் ஒரு மணித் துளியில் உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்களுக்காகத் தனியாகப் போடப்பட்ட தமிழக அரசினுடைய அரசாணை என்னிடம் இருக்கிறது. அதை நான் உங்களிடம் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே அரசாணை எல்லோருக்கும் வழங்குகிறோம்; Minerals கேட்கிறவர்களுக்கு எல்லாம் வழங்குகிறோம். அதிலே என்ன முறைகேடு? முறைகேடுகள் இருந்தால் சொல்லுங்கள். அந்த முறைகேடுகளை நிவர்த்தி செய்யத் தயாராக இருக்கின்றோம்.

பிற்பகல் 12-45

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் கொடுத்திருக்கிற அனுமதிக்கும் அதிகமாக மணல் எடுப்பது ஒன்று. கடத்தலுக்கு உடந்தையாக இருந்து, அந்தப் பகுதியிலே மக்களை நடமாட முடியாமல் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது ஒன்று. எனவே, இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கை. (மணியடிக்கப்பெற்றது) 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் subject-லே ஒன்றைத்தான் பேசியிருக்கிறேன். ஒரு குற்றச்சாட்டையே தாங்க முடியவில்லையே? நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அமைச்சர்களின் குறுக்கீடுகள் நிறைய வந்தன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** குறுக்கீடுகளையும் சேர்க்கத்தான் நீங்கள் அதிக நேரம் பேசியிருக்கிறீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் சொன்னது ஒரு குற்றச்சாட்டுதான். நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகள் என்னிடம் இருக்கின்றன.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேச நேரம் வேண்டுமென்று கேட்கும்போது உறுப்பினரிடம் நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகள் பையில் இருக்கிறது என்கிறார்கள். ஏனென்றால் உறுப்பினர் அதைத் தயாரிக்கிற வேலையிலே இருக்கிறார்கள். அதுவேறு. அந்தக் குற்றச்சாட்டுகளைச் சந்திக்கிற அரசுதான் இங்கேயிருக்கிறதே தவிர குற்றச்சாட்டுகளைச் சந்திக்க முடியாத அரசு இங்கில்லை. நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் நேரம் கேட்கிறபோது இந்த மாதிரி இடையிலே அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டிப் பேசக் கூடாது. நேரம் மட்டுந்தான் நீங்கள் சபாநாயகரிடம் கேட்கலாமே தவிர, உறுப்பினர் தன்னிடம் எவ்வளவு குற்றச்சாட்டு இருக்கிறது என்று சொல்லக் கூடாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு, மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு 10 நிமிடம்தான் வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் 20 நிமிடம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** குறுக்கீடுகள் இருந்தனவே.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** குறுக்கீடுகளைச் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** குறுக்கீடுகள்தான் அதிகமாக இருந்தன.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மற்ற உறுப்பினர்கள் பேச 10 நிமிடம்தான் தரப்பட்டிருக்கிறது. நீங்கள் 20 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்...

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, நான் உங்களுக்குப் பதவி உயர்வே கொடுத்துவிட்டேன். 2 நிமிடம் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** நிறைய நேரம் நீங்கள் பேசி விட்டீர்கள். பெருந்துறை பெரியசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 20 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** என்னைப் பேசவே விடவில்லை சார். 5 நிமிடம்தான் நான் பேசியிருக்கிறேன். 15 நிமிடம் குறுக்கீடுகள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** பெருந்துறை பெரியசாமி, பேசுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

**டாக்டர் தே. குமாரதாஸ்:** 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** இந்த அவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் மீது பங்கு கொள்ளும் இந்த வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** 2 நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** 20 நிமிடம் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அடுத்த உறுப்பினர் தற்போது பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. நா. பெரியசாமி:** என்னுடைய கருத்தைச் சொல்ல முடியவில்லை. மாற்றுத் தலைவர் அவர்களே, அவையைக் கொஞ்சம் ஒழுங்குபடுத்திக் கொடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** அடுத்து உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது அவரிடம் கொடுத்து இதைப் பேசச் சொல்லுங்கள். திரு. பெருந்துறை பெரியசாமி, பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் பேசி முடித்து விடுகிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** நான் எனது கருத்தைச் சொல்ல முடியவில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நியாயமான, ஜனநாயகக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்று நினைத்து கொண்டிருந்தால் இப்படி **

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ** போன்ற வார்த்தைகளை எல்லாம் சபாநாயகரைப் பார்த்துப் பேசக் கூடாது. அதை அவர் வாபஸ் வாங்க வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் அதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இன்னொன்றையும் நான் சொல்கிறேன். முதலிலே உங்களுடைய கட்சி வெளிநடப்புச் செய்த நேரத்திலே, நீங்களெல்லாம் வெளியிலே போன நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரைப் பேச சபாநாயகர் அவர்கள் அழைத்த போது, மற்றவர்கள் எல்லாம் வெளியிலே போனபோது, உறுப்பினர் குமாரதாஸ் உள்ளே வந்து பேச உரிமை கேட்டார்கள். சபாநாயகர் இந்த நேரத்தில் கொடுக்க முடியாது, அழைத்தவர் பேசி முடித்தவுடன் தருகிறேன் என்றார். அப்போதே நீங்கள் போராடினீர்கள். ஆகவே, சபாநாயகர் என்ன சொன்னாலும் போராடுவது என்ற முறையைத் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் வளர்த்துக்கொள்ளக் கூடாது. சபாநாயகர் இந்த அவையில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் சேர்த்து பொறுப்பில் இருக்கிறார். எனவே ஓர் உறுப்பினருக்கும், சபாநாயகருக்கும் தனிப்பட்ட எந்தப் பிரச்சினையும் கிடையாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இது ஜனநாயகப் படுகொலை, ஜனநாயகப் படுகொலை, ஜனநாயகப் படுகொலை.

**மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் நீக்கப்பெற்றது.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி, பேசுங்கள்.

* **திரு. நா. பெரியசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்று வருகிற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகிற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 2, 3 நாட்களாக நடைபெற்று வருகிற விவாதத்தில் அரசின் அரசியல் அணுகுமுறை குறித்து பல்வேறு கோணங்களில் விமர்சன ரீதியாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நான் அதுகுறித்துக் கவனத்தைச் செலுத்தி நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இந்த ஆளுநர் பேருரையில், கடந்த 1997-98 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட மஞ்சள் வணிக வளாகம் பெருந்துறையில் அமைக்கப்படும் என்கிற திட்டவட்டமான முடிவு பற்றி அறிவிக்கப்பட்டிருப்பதற்கு தொகுதி மக்களின் சார்பாகவும், மாவட்ட மக்களின் சார்பாகவும் எனது நன்றியை அரசிற்கும், முதலமைச்சருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய, மிக அவசரமான பிரச்சினைமீது முதலமைச்சரின் கவனத்தையும், அரசின் கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

பல்வேறு அம்சங்கள் ஆளுநர் பேருரையிலே குறிப்பிடப்பட்டிருந்தாலும், வேளாண்மை உற்பத்தி குறித்து, உணவு உற்பத்தி குறித்து, பெருமிதமாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருந்தாலும், சுமார் ஒரு கோடி பேர் அளவிற்கு இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படாமல் இருப்பது மிகுந்த வருத்தத்திற்குரியது என்றே நான் கருதுகின்றேன். ஒரு கோடி பேர் அளவில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து, சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அவர்கள் சந்திக்கிற வாழ்க்கைப் பிரச்சினை குறித்து ஆய்வு செய்வதற்காக நிலச்சீர்திருத்தத் துறை இயக்குநர், திரு கோலப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 1997 ஆம் ஆண்டு ஆகஸ்டு 27-ம் தேதி அரசினால் ஓர் உயர்மட்டக் குழு, முத்தரப்புப் பிரதிநிதிகளும் கொண்ட முறையில் அமைக்கப்பட்டது. அந்த

ஆண்டிலேயே ஆய்வுப் பணியை முடித்து அந்தக் குழுவின் அறிக்கை 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்மீது அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளை நாட்டுக்கு அறிவித்து, அதைச் செயலாக்க வேண்டுமென்று முதலமைச்சரைச் சந்தித்து முறையிட்டிருக்கிறோம். அப்படி முறையிட்டதற்குப் பிறகு கூடந்த நிதிநிலை அறிக்கையின்போது, விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவும் முதலமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து எங்கள் நன்றியைத் தெரிவித்து, மற்ற பரிந்துரைகளையும் விரைவிலே அமலாக்க வேண்டும், செயல்படுத்த வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். ஆனால் இரண்டாண்டு காலம் ஆனதற்குப் பிறகும், சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக விவசாயத் தொழிலாளர்கள் சந்தித்து வருகிற பல்வேறு இடர்பாடுகளுக்கும், கஷ்டங்களுக்கும் நிவாரணம் தேடக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட அந்த முத்தரப்புக் குழு, முத்தரப்புப் பிரதிநிதிகள் அடங்கிய உயர்நிலைக் குழுவினுடைய பரிந்துரைகள் அறிவிக்கப்படாமல் மௌனம் சாதிப்பது பொருத்தமான நடைமுறையாக இருக்காது என்று நாங்கள் கருதுகின்றோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கோலப்பன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்தான் நம்முடைய விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மத்திய அரசு நடத்திய மாநாட்டிலேயும் விவசாயிகள் சார்பாகக் கலந்து கொண்டு விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாகப் பேசப்பட்டிருக்கின்றது. எனவே, கோலப்பன் குழுவின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்கிற வாதம் உண்மைக்குப் புறம்பானது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த உயர்நிலைக் குழுவினுடைய ஒரே ஒரு பரிந்துரையான ஊதியம் தொடர்பான பரிந்துரை மட்டும்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஊதியம் தொடர்பான பரிந்துரை மட்டும் நிறைவேற்றப்பட்டு விட்டதால் மற்ற எல்லாப் பரிந்துரைகளையும் நிறைவேற்றி விட்டதாகக் கருதிக்



கொண்டால், அது விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு உதவக்கூடிய நடவடிக்கையாக அமையாது என்பதை நான் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தக் குறைந்தபட்ச ஊதிய உயர்வுகூட அரசு வேளாண்மைத் துறையிலே நடைபெறுகிற விதைப் பண்ணைகளில் அமல்படுத்தப்படாத சூழ்நிலை இருக்கிறது. விருதுநகர் மாவட்டத்திலே, திருவண்ணாமலை மாவட்டத்திலே, சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற விதைப் பண்ணைகளில் இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தைக்கூட இன்று வரையிலே அமலாக்காத சூழ்நிலை இருக்கிறது. எனவே, விவசாயத் தொழிலாளர்கள் வருகிற 13,14,15 தேதிகளில் சாத்வீகமான முறையில் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு, அரசின் கவனத்தை ஈர்க்க விரும்பி அறிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் கோலப்பன் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்சினை. ஈரோடு, கோவை மாவட்டங்கள் தொடர்ந்து வறட்சியால் பாதித்த பகுதிகள். ஏறக்குறைய 80 குளங்கள், 220 குட்டைகளைக் கொண்ட 10 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடங்கிய அந்த வறட்சிப் பாங்கான பகுதிக்கு, குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்ப, அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கை நீண்டநாட்களாக அந்தப் பகுதி மக்களால், ஏறக்குறைய 20 இலட்சம் மக்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. 1998-99-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அந்தத் திட்டத்தில் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று இருக்கின்றன. அதனுடைய முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இடையிலே நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதுகூட, கோவை, ஈரோடு மாவட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட அரசியல் கட்சி நிகழ்ச்சிகளில்கூட வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள். நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களும்,

மற்றவர்களும், நீண்ட நாட்கள் இதற்காகப் போராடி, அதற்காக நானும் அங்கே சென்று, குடிநீர் வடிகால் வாரியத்தோடு தொடர்பு கொண்டு, பொதுப்பணித் துறையோடு தொடர்பு கொண்டு, அதை விசாரித்த வகையில், குடிநீருக்காகத் தண்ணீர் எடுக்க உதவாது என்றும், கடன் கொடுக்கின்றவர்களும் தண்ணீர்ப் பற்றாக்குறையால் அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்றும் எழுதியிருக்கின்ற காரணத்தால், குடி தண்ணீருக்காக, நிச்சயமாக நாங்கள் அதிலே தலையிட விரும்பவில்லை. ஒருகால், பொதுப்பணித்துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாய நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் கொடுக்கிறேன் என்று அறிவிப்பார்களானால் அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், குடிநீர்ப் பிரச்சினைக்காக, வல்லுநர்களுடைய முடிவை இந்த அரசாங்கம், பின்பற்ற முயற்சிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்த இந்தக் கருத்தை எல்லாம் கருத்திற்கொண்டுதான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதற்கான....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை எடுத்துக்கொள்ளலாம். அப்படி அறிவிக்கப்பட்டதற்குப் பிறகுதான் என்னுடைய ஆய்வே தொடங்கியது. ஆய்வு தொடங்கியதற்குப் பிறகுதான் வல்லுநர்கள் அறிக்கை கேட்கப்பட்டது. அது கேட்கப்பட்டதற்குப் பிறகுதான் நான் இன்றைக்கு அறிவித்திருக்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் முடிவுற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். எந்தப் பிரச்சினை இருந்தாலும், அரசு இந்த விஷயத்தில் சாதகமான முடிவை எடுத்து, ஏறத்தாழ இருபது இலட்சம் மக்களுடைய குடிநீர் ஆதாரத்தைப் பாதுகாத்தாக வேண்டும். நான் ஓர் உதாரணத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவரது விருப்பம் அதுவானால், நிச்சயம், குடிநீர்



கொடுப்பதற்கான திட்டத்தை அவரை வைத்துக்கொண்டு பரிசீலித்து, என்ன நடவடிக்கை, எவ்வளவு துரிதமாக எடுக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி முடிவெடுத்து இந்த அவையிலே அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஓர் உதாரணத்தை அரசின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஈரோடு மாவட்டத்தினுடைய ஊத்துக்குளி, பெருந்துறை ஊராட்சி ஒன்றியங்கள் மட்டும் ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாயை மின் கட்டணமாக, குடி தண்ணீர்த் தேவைக்காக மட்டும் செலுத்தி வருகிறது. ஆனால், குடிதண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்தபாடில்லை. நிலத்தடி நீர் ஆதாரத்தை உயர்த்தாமல் அங்கே குடிதண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஊத்துக்குளி ஒன்றியம் கறுப்பு நிறப் பட்டியலில் இடப்பட்டு, மின் வாரியத்திலே இனிமேல் விவசாயிகளுக்குக்கூட மின் இணைப்புத் தரமாட்டோம் என்று அறிவித்துவிட்டார்கள். பொதுப்பணித் துறையினுடைய நீர்வள ஆதாரப் பகுதி அது கருமை நிறப் பட்டியல் என்று அறிவித்துவிட்டது. இப்படி, பல துறைகளால் அந்தப் பகுதி நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கின்ற நிலையில் பொது மக்களை மீட்டெடுப்பதற்கு இந்த அத்திக்கடவு-அவிநாசி திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியது மிகவும் அவசியம். அதை இந்த ஆண்டிலேயே, நடப்பு ஆண்டிலேயே அறிவிக்க வேண்டும், நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து, அரசு புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுடைய பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஓடைப் புறம்போக்கு, சாலைப் புறம்போக்கு, தனியார் துயவில் வழங்கப்பட்டிருக்கிற இடங்கள் போன்றவற்றில் எல்லாம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதியினர், இப்படிப்பட்ட சாதாரண மக்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு அரசின் வீட்டுமனைப் பட்டா இல்லாத காரணத்தினாலே அவர்கள் வாழ்க்கையிலே சந்திக்கின்ற சமூக ஒடுக்குமுறை பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. எனவேதான், இந்தப் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது மிகவும் முக்கியம். ஈரோடு மாவட்டத்திலே, பெருந்துறை தொகுதியிலே, நாங்களே நேரடியாகப் பரிசோதித்துக் கொடுத்திருக்கின்ற விண்ணப்பங்கள் மட்டும் 3,169 ஆகும். ஈரோடு மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கிறோம். இப்படிப்பட்ட வீட்டுமனையிடப் பிரச்சினையில் நில எடுப்புச் சட்டத்தின்படி நடைபெறுகின்ற பணி போதுமான வேகத்தில் நடைபெறவில்லை. அந்த நில எடுப்புச் சட்டத்தை எதிர்த்து நில உடைமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகின்றபோது நீண்ட காலம் பிடிக்கிறது. நேரடி கிரயம் பேசி, வீட்டுமனையிடம் வழங்கலாம் என்றால் அதற்கு அதிகாரிகள் போதுமான அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, முன்னொரு காலத்திலே நடந்த தவறுகளையே நினைத்துக்கொண்டு, அதற்குச் சரியான வழிமுறையை வகுத்துக் கொள்வதற்கு அதிகாரிகள் முன்வருவதில்லை. எனவேதான், மாவட்ட அளவில், மக்கள் பிரதிநிதிகளும் உள்ளிட்ட, ஏழை மக்களுடைய பிரதிநிதிகளும் உள்ளிட்ட ஒரு குழுவை அமைத்து, அந்தந்த மாவட்டங்களில் வீட்டுமனையிடப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறைந்தபட்சம் வீட்டுமனையிடம் என்றால் 5 சென்ட் நிலம் வேண்டும். இப்போது அரசு என்ன செய்கிறது? தேன் பூச்சி எப்படி கூட்டிலே ஒட்டிக்கொண்டிருக்கிறதோ அதைப்போல ஏழை மக்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள்—அவர்கள் வசிப்பிடங்களுக்கே பட்டா வழங்குவது என்ற நிலையுள்ளது. அதை மாற்றி ஒரு குடும்பத்திற்குக் குறைந்தபட்சம் கிராமப் பகுதிகளில் 5 சென்ட் நிலம் வீட்டுமனையிடமாக வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் நலனுக்கு எதிரான, சத்தியம் குழுவினுடைய பரிந்துரைகளை நிராகரிக்க வேண்டும். அதில் ரக ஒதுக்கீட்டிற்கு எதிரான கருத்துகளை நிராகரிக்க வேண்டும். அரசு அதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறது. தொடர்ந்து உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, நன்றி தெரிவித்து வார்த்தையை நிறைவு செய்கிறேன்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. குளச்சல் பௌர்னார்டு.

**திரு. இரா. பௌர்னார்டு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நலன் குறித்து, மொழி உணர்வோடு ஆளுநர் தந்திருக்கிற உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு முதல்வருக்கும் தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த



நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வானளாவிய அதிகாரம் இந்த அரசுக்கு இல்லையென்றாலும், வானுயர வள்ளுவருக்குச் சிலை வைத்து, சிறப்புச் செய்கிற அதிகாரம் முதல்வர் கலைஞருக்கும், அரசுக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சங்கத் தமிழ் தந்து, குறளோவியம் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், முக்கடலும் முத்தமிழும் கூடும் தென்முனையில், உலகப் பொதுமறை தந்த வள்ளுவருக்குச் சிலை எடுத்து, உலகப் புகழ் பெற்ற நிலையினைக் குமரிக்குத் தந்தமைக்கு, குமரி மாவட்ட மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த பாராட்டுகளை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வருகிற 24-ஆம் தேதி முதல்வர் தர இருக்கும் நிதிநிலை அறிக்கை, நீதிநிலை அறிக்கையாக அமைந்து, தமிழகத்திற்கு வழிகாட்டும் முன்னுரையாகவே இந்த ஆளுநர் உரை அமைந்திருப்பதைப் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டின் மக்கள் வளர, உயர ஆளுநர் உரை பயன்படுகிறது. தமிழகத்தின் உயிர் நாடியாக விளங்குகின்ற உழவர்கள் உயர இந்த ஆளுநர் உரை பயன்படுகிறது.

அதுமட்டுமல்ல, நமக்கெல்லாம் சக்தியைத் தருகிற கால்நடைகளின் வளர்ச்சிக்கும் இந்த உரை சிறப்புத் தருகிறது என்று சொல்லி இதயபூர்வமாகப் பாராட்டுகிறேன். பட்டும், கெட்டும் போயிருந்த அரசு நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி, சீர்செய்து, பல பாராட்டுகளை இந்த மாமன்றத்தில் மாற்றுக் கட்சியினர் தெரிவித்திருக்கிறார்கள். வாழ்த்தி, வரவேற்றிருக்கிறார்கள். அரசியலில் சில மாற்றத்தின் காரணமாக, இன்று அவர்கள் கூடா நட்பின் காரணமாக விமர்சிக்கின்ற உரிமையை ஜனநாயக ரீதியில் பெற்றிருந்தாலும், அவர்களுக்கெல்லாம் நான் ஒரு குறளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்".

என்பது அய்யன் வள்ளுவருடைய குறளாகும். அந்த வகையில், இன்று கழக அரசு, கலைஞர் அரசு சரியான பாதையில் போகிறதேயல்லாமல், சரிவான பாதையில் போகவில்லை என்பதை மூன்று தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நிரூபித்திருக்கிறது. அவருடைய சாதனையை, நற்பணிகளைச் சீர்தூக்கிப் பார்த்து, மூன்று தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தந்திருக்கிற அந்த வாக்காளர் பெருமக்களுக்கு இதய பூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், இப்படிப் பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருவதை மக்கள் இதய பூர்வமாக ஏற்றுப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பக் கல்வி இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது; பெண்கள் முன்னுரிமை பெறவேண்டும்; கல்வி பெற வேண்டுமென்று வகுத்து இருப்பதைப் பாராட்டுகிறேன். ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் போதனா மொழியாக இருக்க வேண்டுமென்ற முடிவு, தமிழ் அறிஞர்கள் கொடுத்த முடிவு என்பதையும், அதை மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுவதோடு,

"நம்முடைய தாய்மொழியாம் தமிழைப் பழித்தவனை
தாய் தடுப்பினும் விடேன்;
விழி இழந்து வாழ்வேன்,
மொழி இழந்து வாழ மாட்டேன்"

என்ற புரட்சிக் கவிஞருடைய மூல வரிகளுக்கு ஏற்ப, அன்னைத் தமிழாம் அருமைத் தமிழை, இலக்கிய இலக்கண வளம் கொண்ட தமிழை, தொன்மையான தமிழை மத்திய ஆட்சிமொழியாக ஆக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் எடுத்து வருகிற பெரும் முயற்சிக்கு இதயபூர்வமான பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கணினி நிலையை, உலக விஞ்ஞான வித்தைகளை தமிழகத்தினுடைய மாணவ மாணவியர்கள் இளமையிலேயே தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பேரார்வத்தின் காரணமாக இணைத் தமிழ் இணையங்களை ஏற்படுத்தி வருவது பாராட்டிற்குரியது; சிறப்பிற்குரியது.

இந்த அரசு மதச் சார்பற்ற அரசு. இந்த அரசு ஆதரிக்கிற மத்திய அரசும் மதச்சார்பற்ற அரசுதான் என்பதை ஒரு சான்று மூலமாக நான் இங்கே விளக்க விரும்புகின்றேன். உலக கத்தோலிக்க திருத்தவர்களுடைய தலைவர் போப் வந்தபோது, மத்திய அரசு, அரசு மரியாதை அளித்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதேபோல, இஸ்லாமியப் பெருங்குடி மக்களுடைய நோன்பு விழாவில் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் கலந்து சிறப்பித்திருப்பது, மதச்சார்பற்ற அரசுதான் மத்தியிலும் இருக்கிறது என்பதை நினைவுபடுத்துகின்றது. இந்தக் காலகட்டத்தில், இதற்கு மூல காரணமானவர், முதற்காரணமானவர், பெரியாரின் சீடர், அண்ணாவின் தம்பி, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்தான். ஆகவேதான், இந்த மூன்று மதத்திற்கும் அவர் இணைப்புப் பாலமாக இருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லி, என்னுடைய பாராட்டுகளை வழங்கிக் கொள்கின்றேன்.



பிற்பகல் 1-05

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெர்னார்டு அவர்கள் பேசுகிறபோது கூட்டணியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முன்பு ஒருநாள் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். Right man in the wrong party என்று சொன்னார்கள். பாரதத்தினுடைய பிரதமரை அன்றைக்கு அவர் கோடிட்டுக் காட்டுகிறபோது Right man in the wrong party என்றார்கள். அந்த Party-யே தப்பு என்று இந்த அவையிலும் சொல்லியிருக்கிறார்கள். வெளியிலேயும் சொல்லி யிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களோடு கூட்டு வைத்துக்கொண்டு எங்களைக் குறை சொல்வது நியாயம்தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன் கருத்தைச் சொன்னார். அதில் குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் அவர் சொன்னார் ''ஏற்கெனவே முதலமைச்சர் Right man in the wrong party என்று அப்போது சொன்னார்'' என்று.. Right man in the wrong party has corrected it as a right party (சிரிப்பு) என்று ஏற்கலாம்.

**திரு. இரா. பெர்னார்டு:** Right man in the wrong party என்று சொல்லி இன்று கலைஞருடைய தலைமீட்டின் காரணமாக அவரும் சரியாக வந்திருக்கிறார் என்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சாதிக் கொடுமைகள், மதக் கொடுமைகள் காரணமாக தென் மாவட்டங்கள் சீரழிந்து வருவதைச் செப்பனிடுவதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். அக்குழு தன் ஆய்வுக் கருத்தை அரசுக்குத் தந்திருக்கிறது. அதை விரைந்து நிறைவேற்றி அந்தக் கொடுமைகளிலிருந்து தென்மாவட்டங்களைக் காப்பாற்ற கேட்டுக்கொள்வதோடு அதற்காக என் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகமெங்கும் திருச்சபை பிரசங்கிக்கப்பட வேண்டும், பரப்பப்பட வேண்டும் என்பது திருமறையின் ஒரு வாக்கு. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது உலகப் பொதுமறையாம் திருக்குறளையும் உலகத்திலுள்ள அத்தனைபேரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு குறிப்பாக தமிழகத்தில் திருவள்ளுவரைப் பற்றி அய்யன் திருவள்ளுவரைத்

தெரியாதவன் இருக்கக் கூடாது என்ற பெருநோக்கோடு ஒவ்வொரு கிராமத்திலும் திருவள்ளுவர் படிப்பகத்தை அமைத்துக் கொடுக்கிற கழக அரசை மிகுதியாக நான் பாராட்டுகிறேன். குமரி முதல் இமயம் வரை ஒன்றே என்ற நிலைமைக்கு ஏற்ப கார்கில் யுத்தத்திற்கு வேறு எந்த மாநிலமும் கொடுக்காத அளவுக்கு 50 கோடி ரூபாயைத் திரட்டிக்கொடுத்து பெருமை சேர்த்த முதல்வரையும், தமிழக மக்களையும் நான் பாராட்டிக்கொள்கிறேன்.

அதேபோல, வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட ஒரிசா மக்களுக்கு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் அளவில் உதவிய தமிழக அரசுக்கும், மக்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடு இருப்பதன் மூலம் தொடர்ந்து வெற்றிபெறுவதால், இளைஞர்கள் எதிர்காலத்தில் நல்ல வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்பதற்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வரின் சிங்கப்பூர்—மலேசியா பயணத்தின் வெற்றியாக பல்வேறு தொழில்கள் இங்கே அமையவிருப்பதைப் பெருமையாகப் பாராட்டுகிறேன்.

சிங்காரச் சென்னையாக தமிழகத்தின் தலைநகரை ஆக்க வேண்டும் என்று நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் எடுத்து வருகிற நடவடிக்கைக்குக் கழக அரசும், தலைவரும் கொடுக்கின்ற ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின்புதான் கல்வித் துறையில் மறுமலர்ச்சி வந்தது. பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்பு கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி இருக்கிறார்கள் கல்வி அமைச்சர் அவர்கள்.

அதைப்போல, அரசு 10,000 சாலைப் பணியாளர்களை நியமித்து சிறப்புச் செய்திருக்கிறது. 13,000 மக்கள் நலப் பணியாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு வாழ்வு அளித்திருக்கிறது. அவர்கள் மேலும் வளர்வதற்காக சில கோரிக்கைகளை வைத்த வண்ணமிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறைக்கு 300 உதவிப் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். பொதுப்பணித் துறையில் 250 பொறியாளர்கள் தேர்வு செய்து நாட்டுக்கு நல்ல பலன்களை வழங்கி வருகிறது அரசு. மின்வாரியத்தில் கணக்கீட்டாளர்கள் 10,000 பேரை இந்த அரசு நியமித்திருக்கிறது. மேற்குக் கடற்கரைச் சாலைப்பணி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதற்காகப்



பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிர்வாகம் சிறப்பாக இருப்பதால் என்னுடைய வாழ்த்துகளை மனமார இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

19 மீனவப் பெருமக்கள் பாகிஸ்தான் சென்று அவதிப்பட்டுள்ளது அறிந்து கழக அரசு தலையிட்டதை வரவேற்று, அவர்களை விரைந்து இங்கே மீட்டுக் கொண்டு வருவதற்கு மேலும் தொடர்ந்து முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் துறைமுகம் கட்டாயம் தந்தாக வேண்டும் என்று பணிவன்போடு வலியுறுத்துகிறேன்.

ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரியையும் சொன்னபடி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே கேட்டிருக்கிறார். அது குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வரிடத்தில், மலேசிய அரசாங்கத்தின் சார்பில் வந்த குழு—மலேசிய அமைச்சர் டத்தோ சாமுவேல் அவர்களுடைய தலைமையில் வந்த குழு—பேச்சுவார்த்தை நடத்தி, குளச்சல் துறைமுகத்தை நிறைவேற்றுவதற்கு மலேசிய அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அதுகுறித்து அவர்கள் மேலும் ஆய்வு செய்வதற்காக நம்முடைய அரசாங்கத்திலிருந்து ஒரு commitment letter வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் அந்த commitment letter-ஐ மலேசிய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, மலேசிய அரசாங்கத்தின் சார்பில் ஒரு ஆய்வுக் குழு தமிழகத்திற்கு வந்து, குளச்சல் துறைமுகத்தினுடைய மேம்பாட்டிற்கான எல்லாவிதமான ஆய்வுகளையும் இப்போது செய்து கொண்டிருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினருக்கும், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** உறுப்பினர் இன்னும் ஒரு நிமிடத்திற்குள் பேசி முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர்

அவர்களுக்கும் எங்கள் குமரி மாவட்டத்தின் மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தாமே வளரும்' என்பது தலைவர் அடிக்கடி சொல்லும் கருத்து. சில நேரங்களில்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** அடுத்து, உறுப்பினர் திரு. தீரன். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய திட்டங்களைச் செயல்படுத்த நாங்கள் துணை நிற்போம் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீது எங்களின் தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பில், என்னுடைய கருத்துகளை முன்வைக்க ஆசைப்படுகிறேன்.

வழக்கமான இந்த ஆளுநர் உரையைப் பற்றி எண்ணிப் பார்க்கிறபோது, நட்டுவனாருடைய இசைக்கேற்ப ஆடுகின்ற ஒரு நாட்டியத்தைப்போல, அரசினுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றதாக இந்த ஆளுநர் உரை இருக்கின்றதே தவிர, மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகின்றேன். எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்கிறேன். இந்த அவையிலேயே பல முறை, கல்லுடைக்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே, அந்தக் கல்லுடைக்கும் தொழில் நசிந்து விடாமல் இருப்பதற்கு, கல்லுடைக்கும் குவாரித் தொழிலிலே உரிமங்களைப் புதுப்பித்துத் தர ஆவன செய்யப்படும் என்றெல்லாம்கூட உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, 3 இலட்சம் தொழிலாளர்களை உள்ளடக்கியிருக்கின்ற இந்தக் கல்லுடைக்கும் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் குறித்து ஆளுநர் உரையிலே எதுவும் குறிப்பிடாததுதான் மிகவும் வருத்தத்தை அளிக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



அதுமட்டுமல்ல. இப்போது மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டிலே ஒரு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இட ஒதுக்கீட்டிலே பொதுவாக அரசினுடைய வேலைப்பாடுகள் மிக மிகக் குறைவு என்று உங்களுடைய கூட்டணிக் கட்சியிலே இருக்கின்ற தலைவர்களே அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, 10 இடங்கள் இட ஒதுக்கீட்டிலே என்றால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 30 சதவிகிதம் என்கிறபோது, 3 சரியாகக் கிடைத்து விடுகிறது. அதேபோல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று பார்க்கிறபோது, அவர்களுக்கு 19-க்கு 2 இடம் கிடைத்து விடுகிறது. பிறர் என்று பார்க்கிறபோது, அந்த 31 சதவிகிதத்திற்கு 4 இடங்கள்; கூடுதலாக ஒரு இடம் அதிகமாக அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. ஆனால், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை; அந்த 10 இடங்களில் அவர்களுக்கு 2 இடம் கிடைப்பதற்குப் பதிலாக ஒரே ஒரு இடம்தான் இப்போது அந்த சுழற்சி முறையிலே வழங்கப்படுகிறது என்பதை . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் எந்த முறையிலே அரசு, அலுவலாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது என்பதைப் பற்றிப் பொதுவாக இருக்கிற கருத்தை இங்கே பேசுகிறார். Roster system என்ற முறையிலே அவர்கள் தெரிவு செய்கிறபோது, இந்த விகிதாச்சாரக் கணக்கு தவறாமல் வரக்கூடிய அளவுக்கு Roster system வரையறுத்து வழங்கப்பட்டிருக்கிறது. முதல் இடம் இன்ன வகுப்புக்கு என்றால், அடுத்த இடம் இன்ன வகுப்புக்கு, மூன்றாவது இடம் இன்ன வகுப்புக்கு, நான்காவது இடம் இன்ன வகுப்புக்கு என்று Roster system அதாவது rotation முறை இருக்கிற காரணத்தினால், தவறுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் சில பணிகளுக்கு உரிய தகுதிகளோடு, மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலேயிருந்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயிருந்து, சில நேரங்களில் விண்ணப்பங்கள் இல்லாத காரணத்தினால், அந்தத் தடவையில் அந்த எண்ணிக்கை குறைந்து, அது மறுபடியும் ஒத்திவைக்கப்பட்டு, அடுத்த முறை தேர்வில் அது சேர்க்கப்பட்டு எடுக்கப்படுகிற முறை இருக்கிறது.

மிக அதிகமாக, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து விடுபட்டுப் போனால், அவற்றை எடுப்பதற்கும்கூட அரசு சில வழிமுறைகளைச் செய்துகொண்டிருக்கிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். நான் கேட்கிற ஐயம் என்னவென்றால் 20 சதவிகிதம் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறபோது, இதே சுழற்சி முறையிலேயே அவர்களுக்கு நியாயமாக இரண்டு கிடைக்கிற மாதிரி திருத்தியமைக்கப்பட வேண்டுமல்லவா? இதுதான் என்னுடைய வேண்டுகோள். இல்லையென்றால், சுழற்சி முறையாக மக்கள் கருத மாட்டார்கள்; ஒரு சூழ்ச்சி முறையாகத்தான் கருதுவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அதிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு....

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே சூழ்ச்சிக்கு அவசியமேயில்லை. முறையாக வகுக்கப்பட்டது அந்த roster என்பதால் அந்த எண்ணிக்கையின்படிதான் அவர்களை எடுக்க முடியும். எடுக்கவில்லையென்றால் இந்த எண்ணிக்கையில் இவ்வளவுபேர் கிடைக்காத காரணத்தால் எடுக்கப்படவில்லை என்று அத்துறைக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டும். அந்த எண்ணிக்கை அடுத்த முறை தேர்வில் சேர்த்து எடுக்கப்படுகிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** என்னுடைய நேரம் கருதி, நான் வேண்டுமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக்கூட இதற்கு விளக்கம் தர ஆசைப்படுகிறேன். பெருவாரியான துறைகளிலே, 10 இடங்களுக்கு குறைவாகத்தான் தேர்வு செய்யப்படுகிறது. இந்த மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியதே, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசுதான். இந்தியாவிலேயே இப்படி முதல் முறையாக இந்த அரசுதான் வழங்கியிருக்கிறது என்பதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். ஆனால் அதே நேரத்திலே கொடுத்தவனே பறித்துக்கொண்டான் என்பதைப் போல, இந்த மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள்..



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** கொடுத்தவனாலேகூட இப்போது பறிக்க முடியாது. என்ன காரணம் என்றால், இரண்டு இடம் எடுக்கிறதாக இருந்தால்கூட, அந்த இரண்டு இடங்களையும் சுழற்சியிலே B.C.-க்கா, S.C.-க்கா, M.B.C-க்கா, O.C.-க்கா என்ற அந்த முறைப்படிதான் எடுக்க முடியுமே தவிர வேறு வழியில்லை. தப்பு பண்ணுகிறவர்கள் எங்கேயும் பண்ணலாம், அது வேறு. முறையோடு இயங்குகிற நிலையில் எந்தத் துறையாக இருந்தாலும், அந்த வரிசை முறைப்படிதான் எடுக்கலாம். ஒரு இடம் எடுக்க வேண்டுமானால்கூட, அது Office Assistant-ஆக இருந்தால்கூட, அந்த இடத்திற்கு எடுப்பதாக இருந்தால்கூட—அந்த சுழற்சியிலே 77வது நபரை இப்போது எடுக்கப்போகிறார்கள் என்றால், அது எந்த வகையில் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த வகையிலேதான் எடுக்கலாம். ஆனால், சில இடங்களில் சில பதவிகளில் மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களோ, தாழ்த்தப்பட்டவர்களோ முழு அளவில் கிடைக்காத காரணத்தால் குறை ஏற்படுவது உண்மை.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே....

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் பேசிக்கொண்டிருக்கிறார்கள்? எல்லோரும் எழுந்து நிற்கிறீர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தீரன் சொல்வதிலே சில நியாயங்கள் இருக்கின்றன. இந்த அரசு, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு என்று இடஒதுக்கீடு சரியாக வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய ஒரு குழு நியமித்தது. அந்தக் குழுவின் மூலமாக, நாங்கள் கற்றறிந்த உண்மை, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, ஏறத்தாழ பல்வேறு துறைகளிலே அதுவும் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய துறையிலே பல்கலைக்கழகங்களிலே ஏறத்தாழ 5 சதவிகிதம் கூட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்கின்ற நிலையை நாங்கள் கண்டறிந்திருக்கிறோம். அதை அரசுக்கும் சமர்ப்பித்திருக்கிறோம். அதன்மூலமாக, 110-வது விதியின் கீழே கூட நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இனி வருகின்ற வேலைவாய்ப்புகளிலே

முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தத் தவறுகள் திரும்பவும் நடைபெறாவண்ணம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 10 விழுக்காடுகளிலே இரண்டு விழுக்காடு என்பதை உறுதி செய்ய வேண்டுமென்றுதான் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்கள் தனி ஆட்சி உரிமை பெற்ற அமைப்புகள். அந்த அமைப்புகளும்கூட இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமூகம், மிக, மிகப் பின்தங்கிய சமூகம் உயர் கல்வியிலே போதுமான அளவு இடம் பெறவில்லை என்பது நீண்ட கால வரலாற்றினுடைய தொடர்ச்சி. அதை ஈடுசெய்கிற அளவிற்கு என்ன செய்யலாம் என்பதைப்பற்றி பரிசீலிக்கும்படியாக அவர்களை நாம் கேட்டு இருக்கிறோம். அரசாங்க அலுவலகங்களைப் பொறுத்தவரையில் அந்தக் குறைபாடு அதிகம் வர முடியாது. விட்டுப்போன இடங்களைக் கூட நிரப்புவதற்கு, அதாவது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கான 300, 400 இடங்களில் போதுமான அளவு, கடந்த பல ஆண்டு காலத்தில் நிரப்பப்படாமல் விடப்பட்ட ஆசிரியர்களை நிரப்புவதற்கு வழிசெய்வதற்காகத் தனி ஆணை பிறப்பித்து 100 ஆசிரியர்களை நியமிக்கச் சொன்னோம். அதிலேகூட, 75 பேர்தான் தகுதியுடையவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மிச்சம் பேருக்கு அந்தத் தகுதியில்லை. அது பல்கலைக்கழக மானியக்குழு வகுத்த விதிமுறை. இந்தக் குறைபாடு இருக்கும். ஆனால், அரசாங்கம் அவற்றை ஈடு செய்வதற்குத் தொடர்ந்து முயற்சிக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தீரன் அவர்கள் சொன்னதிலே சில உண்மைகள் இருக்கின்றன. அதிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய இடஒதுக்கீடு சரியாகக் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அது சரியானது அல்ல. குறிப்பாக super speciality என்ற அளவிலே D.M கோர்ஸ், M.Ch. இதிலே எல்லாம் 8 இடங்கள்தான் இருக்கின்றன என்றால், அதிலே இடஒதுக்கீடே அமல்படுத்தப்படுவதில்லை. இதை ஏற்கெனவே அமைச்சரிடத்திலே தெரிவித்திருக்கிறேன். அவர்கள்கூட இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டுக்கு ஒரு முறை கணக்கெடுத்துக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் ஒரு



வேளை, இரண்டு seat, நான்கு seat இருக்கிற இடத்திலே இடஒதுக்கீடு கொடுக்கமுடியாத பட்சத்தில் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டுக்கு ஒரு முறையாவது சுழற்சி முறையிலே கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல, அந்தக் குறைபாடு நீண்ட நாட்களாக இருக்கிறது என்பதை நாங்களும் ஏற்றுக்கொண்டு, D.M. போன்ற super speciality படிப்புகளிலே மாணவர்களைச் சேர்க்கும்போது 50 சதவிகிதம் அரசு மருத்துவர்களுக்கும், மீதி 50 சதவிகிதம் வெளியிலே இருந்து வருகின்ற மாணவர்களுக்கும் விகிதாச்சார அடிப்படையிலே கொடுக்க வேண்டும் என்ற நடவடிக்கை எடுத்தோம். ஆனால், அதனுடைய விளைவு உச்ச நீதிமன்றம் வரையிலே சென்று, உச்ச நீதிமன்றம் இப்போது தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. அந்தத் தீர்ப்பு அபாயகரமானது. அதனாலே அனைவருமே பாதிக்கப்படக் கூடிய ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு என்னவென்றால், "நீங்கள் மாணவர்களைச் சேர்க்கும்போது P.G. வரையிலே நீங்கள் இட ஒதுக்கீட்டினை வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மேலே Super speciality-க்கு போகின்ற நேரத்திலே Reservation for Government servants என்றோ, Government Doctors என்றோ, அல்லது B.C. M.B.C. என்றோ வைக்கக் கூடாது. தகுதி அடிப்படையிலேதான் super speciality என்பதிலே நீங்கள் மாணவர்களைச் சேர்க்க வேண்டும்" என்பதுதான். இப்படி ஜனவரி மாதம் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கு முடியுமா என்று சட்ட இலாகா பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த இடஒதுக்கீட்டிலே பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இடையிலே வந்த காரணத்தினால், நான் சொன்ன கருத்தை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. 10 இடங்கள் என்று வருகின்றபோது, 19 சதவீதம் உள்ளவர்களுக்கு இரண்டு கிடைக்கிறது. ஆனால், அந்த 10-லே உள்ள சுழற்சி முறையிலே M.B.C.-க்கு ஒன்று மட்டும்தான் வருகிறது. அது 2 ஆக வரக்கூடிய அளவிற்குத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இதை நான் மேலும் நீட்டிக்க விரும்பவில்லை. ஆனாலும்கூட, மிகப் பிற்படுத்தப்பட்ட

மக்களுக்கு இந்த Back-log முறையிலே இடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 1 நிமிடத்திலே நீங்கள் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நீங்கள் 1 நிமிடம் கொடுக்கவேண்டும். இப்பொழுதுதான் பேசவே ஆரம்பித்தேன். இடையிலே குறுக்கீடு. நீங்கள் இப்போதுதான் வந்தீர்கள். இப்பொழுதுதான் பேசத் தொடங்குகிறேன். முதல் Point-ஐத்தான் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 1 மணி 10 நிமிடத்திற்குப் பேச ஆரம்பித்தீர்கள். ஒரு point-ஐ 12 நிமிடங்களாகப் பேசினால் நான் அதற்குப் பொறுப்பு அல்ல. (குறுக்கீடு) நீங்கள் 1 மணி 10 நிமிடத்திற்குப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். குறுக்கீடு நிறைய வந்த காரணத்தினாலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நான்கு மணி நேரம் பேசலாம். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. தவறான தகவலைக் கொடுக்காதீர்கள். நீங்கள் பேச ஆரம்பித்தது 1 மணி 10 நிமிடங்கள் என்று குறித்து வைத்திருக்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இடையிலே குறுக்கீடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை வேண்டுமானால் சொல்லுங்கள், அவ்வளவுதான். இப்பொழுதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? தப்பான தகவல் கொடுக்காதீர்கள். 2 நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** காவிரி நீர்ப் பிரச்சினை முடிந்துவிட்டதாக நாம் கருதிக்கொண்டிருக்கிறோம். அண்மையிலே 3-3-2000 அன்று திருச்சியிலே காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் கூட்டம் போட்டு, நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்த அச்சத்தை அவர்கள் உறுதிப்படுத்தித் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது 73 வகையான திட்டங்களைத் தீட்டி காவிரியிலே ஏறத்தாழ 465 டி.எம்.சி. தண்ணீரை முழுமையாக அனுபவிப்பதற்கு கர்நாடக மாநிலமானது



எத்தனித்துக்கொண்டிருக்கிறது. இப்போது நமக்கு ஏராளமாக நட்டம் ஏற்படுகின்ற வகையிலே ஆபத்தான சூழ்நிலைகள் உருவாகிக்கொண்டு இருக்கின்றன. எனவே, அந்த விவசாயிகள், காவிரி நீரிலே தமிழகத்தினுடைய பங்கை உறுதிப்படுத்துகின்ற வகையிலே தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். எனவே, தமிழக அரசிடம் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் பழைய காவிரி நீர் வரைவு ஒப்பந்தம், குஜரால் காலத்திலே போடப்பட்ட காவிரி நீர் வரைவு ஒப்பந்தம் ஆகியவை நமக்குப் பாதுகாப்பானவை; நியாயமானவை, இரண்டு தரப்புக்கும். ஆனால், இப்போது போடப்பட்டிருக்கிற இந்த ஒப்பந்தம் சரியற்றது என்ற காரணத்தினாலே இந்த அவைக்கும் நாட்டு மக்களுக்கும் இந்த அரசானது ஒரு வெள்ளை அறிக்கை, காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாகத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

1956 முதல் 1974 வரை கர்நாடக அரசு அனுமதியற்ற முறையிலே கட்டிய அணைக்கட்டுகளாலே தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நீர்வரத்து குறைந்தது எவ்வளவு என்கிற விவரத்தையும், அதேபோல, 1974-லிலேயிருந்து இடைக்காலத் தீர்ப்பு வழங்குகிற 25-6-1991 வரையிலே நம்முடைய தமிழ்நாட்டிற்குக் கிடைக்கப் பெற வேண்டிய நீர்வரத்திலே ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும், அதேபோல இடைக்காலத் தீர்ப்புக்குப் பிறகு இந்தப் புதிய ஒப்பந்தம் போடப்பட்ட 1998 வரையிலே தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய நீர்வரத்தாலே ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும், ஆக இந்த விவரங்களையெல்லாம் உள்ளடக்கி ஒரு வெள்ளை அறிக்கை தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுடைய நூற்றாண்டு விழா இந்த ஆண்டு வருகிறது. அவருடைய பிறந்த நாள் 16-12-1900. 16-12-2000 அன்று அவருடைய நூறாவது பிறந்த நாள். ஆக இது நூற்றாண்டு விழா காலமாக இருக்கிற காரணத்தினாலே அந்த ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுடைய நூல்களை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நீதிக் கட்சியினுடைய 'திராவிடன்' இதழ் ஆசிரியராக இருந்தவர் அவர். குடியரசு போன்ற பத்திரிகைகளில் எழுதியவர். எண்ணற்ற ஆய்வு நூல்களை எழுதியவர். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மிக நன்றாக

அறிவார்கள். எனவே மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுடைய சார்பிலே பல்கலைக்கழகங்களிலே ஒரு ஆய்வியல் இருக்கையைத் தொடங்குவதற்கும் இந்த அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இப்போது I.N.A...

*பிற்பகல் 1-25*

**HON. SPEAKER:** One Minute.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகள் இப்போது சரிவர pension கிடைக்காமல் தனியாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மாதம் கூட அவர்கள் உண்ணா நோன்பு இருந்தார்கள். எனவே அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், அவர்களுக்கு உரிய Pension வழங்குவதற்கும், அந்த I.N.A.. வினுடைய போராட்டத் தியாகிகளுடைய வாரிசுகளுக்கு உதவும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை இந்த ஆண்டு ரூ. 1 கோடியாக உயர்த்தி தமிழக அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு செய்தி. நான் ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் கொண்டு வந்த செய்திதான். இருந்தாலும் மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த பிப்ரவரி மாதம் விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் பகுதியிலே 2-ஆம் தேதி நாங்கள் கொடியேற்றச் செல்கிறோம்; எங்களுடைய நிகழ்ச்சிகளைத் தடுக்கிறார்கள்; இடையூறு செய்கிறார்கள்; காவல் துறையிலே புகார் கொடுத்தால் நடவடிக்கை இல்லை. ஆனால் வேடிக்கை என்னவென்று சொன்னால், அதே பிப்ரவரி திங்கள் 2-ஆம் நாள் கடலூரிலே நாங்கள் ஜனநாயக ரீதியாகக் கொடியேற்ற அனுமதிக்க மறுக்கிறார்கள்—விடுதலை சிறுத்தை அமைப்புகள் என்று சொல்லி, கண்டனப் பேரணியை நடத்துகிறது ஒரு கட்சி. ஆனால் ஏதோ பொது நியாயத்தைச் சொல்லி, தன் கட்சி மட்டுமே செயல்பட வேண்டும்; மற்ற கட்சிகள் எதுவும் செயல்படக் கூடாது என்கின்ற அடிப்படையிலே ஏட்டிக்குப் போட்டியாக இடையூறு செய்வது குறித்து இதுவரையிலே தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி நடைபெற்ற கண்டன ஊர்வலம் என்பது பா.ம.க.வைச் சேர்ந்த தொண்டர்கள் விடுதலை* சிறுத்தைகளாலே படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதற்காகவும், அங்கே தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைத் தொடர்ந்து தாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகவும், அரசின் கவனத்தைத் திருப்புவதற்காக அவர்கள் ஒரு பேரணி நடத்தினார்கள். அதிலே நானும் கலந்து கொண்டேன். அங்கே எந்த வன்முறையும் நடைபெறவில்லை. அப்பேரணி அமைதியாக, மிகச் சிறப்பாக, தோழமைக் கட்சிகளுடைய துணையோடு நடைபெற்றது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், கட்சி, கிராமங்களிலே சென்று கொடியேற்றுவதைத் தடுத்து நிறுத்துகிறார்கள், இடையூறு செய்கிறார்கள், வெட்டுகிறார்கள் என்று ஒரு பொது நியாயத்தைச் சொல்லி, நீங்கள் பேரணி நடத்துகிறீர்கள். ஆனால் ஒரு ஜனநாயக நாட்டிலே எதிர்க்கட்சிகள் இயங்குவதைத் தடை செய்கின்ற வகைகளில் கிராமங்களிலே நாங்கள் கொடியேற்றச் சென்றால் இடையூறு செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் குறிப்பிடும்போது சொன்னதை 'விடுதலைச் சிறுத்தைகள்' என்பதாகத் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஆகவே எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் பொதுவாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லியாகி விட்டது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் சுமார் 70 சதவீதம் விவசாயிகள் இருக்கின்றனர். இந்த விவசாயிகளைப் பற்றி எந்தவிதமான திட்டங்களும் இந்த ஆளுநர் உரையில் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இதைப் பற்றிப் பேசுவதற்கு (குறுக்கீடு) நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் வெளிநடப்புச் செய்தார்)

---

* மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றப்பெற்றது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆளும் கட்சியினர் தங்களுடைய தேர்தல் அறிக்கையில் விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 1000 கொடுப்பதாக அப்பொழுது சொன்னார்கள். ஆனால் இதுவரையில் தமிழக முதலமைச்சர் அவர்கள், சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று சொல்லக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களால் அதுபற்றி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அதே மாதிரி ஜப்பான் அபிவிருத்தித் திட்டம்; இத்திட்டத்திற்காக வனத் துறையின் மூலமாக சுமார் ரூ. 500 கோடி தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 500 கோடியில், தென் மாவட்டங்களில் என்னுடைய தொகுதியில் மட்டும் நான்கு இடங்களில் அதற்கான பணிகள் நடக்கின்றன. ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து, அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய ஒரு தலைவரைத் தேர்வு செய்து, அங்கே வனத் துறையில் இருக்கக்கூடிய ரேஞ்சர் joint account-க்கு ஏற்பாடு செய்து, ஒரு கிராமத்திற்கு ரூ. 30 லட்சம் என்று ஒதுக்கீடு செய்கிறார்கள். என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் மட்டும் நான்கு கிராமங்களைத் தேர்வு செய்து சுமார் ரூ. 1.20 கோடிக்கு பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தொடங்கக் கூடிய பணிகள் சரிவர நடைபெறவில்லை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இப்போது அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரிவதில்லை. அந்த வேலை வேகமாக நடக்கிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆகையினால் அதை உன்னிப்பாகக் கவனித்து யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், அந்த வேலை சரிவர நடக்கிறதா என்பதை முழுமையாகக் கண்காணிக்க வேண்டும் என்று நான் அதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே மாதிரி....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இப்போது அப்படி நடைபெறுகிற வேலைகள் எந்தெந்தத் தொகுதியில் நடைபெறுகின்றனவோ—அவர் எந்தக் கட்சி M.L.A.-வாக இருந்தாலும் சரி—அந்தத் தொகுதி M.L.A.-வுக்குத் தெரியப்படுத்த வேண்டும், அவருடைய ஆலோசனையைப் பெற வேண்டும் என்று நான் அவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறேன். எனவே, இனிமேல்



நடைபெறுவனவற்றை அந்தந்த M.L.A.-க்களே செய்வார்கள். அப்படி உங்கள் M.L.A.-க்களோடு தொடர்புகொள்ள (குறுக்கீடு) இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறோம். இப்பொழுதுதான் வந்திருக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்கு வராது; தஞ்சாவூர் வராது. ஆகையினால் இனிமேல் அப்படி ஏதாவது வராவிட்டால் எங்களிடத்திலே சொல்லலாம்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு உங்களுக்கு தமிழகம் முழுவதுமாக இருக்கிற கிராமங்கள் நன்றாகத் தெரியும் என்று நான் அறிகிறேன். ஒரு மாவட்டத்திற்கு எத்தனை கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன? இந்த 500 கோடி ரூபாய் வேலைகள் முழுமையாக நடைபெறுகின்றனவா? தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அது தெரிய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதே மாதிரி நீண்ட நாட்களாக—மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜனநாயகத்தின் மேலே நம்பிக்கை உள்ளவர்கள், முன்பெல்லாம் 2 மாதங்களுக்கு ஒரு முறை வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறும். மத்திய மாநில அரசுகள் செலவு செய்யக்கூடிய பணங்கள் அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாகத் தெரியவேண்டும். அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறும்—சுமார் 3 வருடங்களாக அந்தத் திட்டங்களே இல்லை. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் தவறு செய்தால் அதை எப்படிக் கண்டறிய முடியும்? ஆகையினால் அதை நிறுத்தியதற்கு என்ன காரணம்? அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஒன்றும் தெரியவில்லை. அந்த அளவுக்கு அங்கே எல்லாமே மாவட்ட ஆட்சித் தலைவர்தான்; வேறு யாருக்குமே ஒன்றும் தெரியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி வளர்ச்சிப் பணிகளாக இருந்தாலும் சரி அல்லது சட்டமன்ற....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் ஏற்கெனவே இருந்த பஞ்சாயத்துச் சட்டத்தின்படி நடந்து வந்தது. இடையிலே நம்முடைய மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு அந்தச் சட்டத்திலே சில திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள்; 3 அடுக்கு பஞ்சாயத்து முறை சட்டம்; அதை அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது. அப்போது இங்கே தமிழ் மாநில காங்கிரஸாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் காங்கிரஸ்

கட்சியிலே இருந்தபோது அந்த காங்கிரஸ்தான் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதனால்தான் அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை இப்போது நடத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த சட்டம் அருமையான சட்டம். அதைத் தோற்கடித்துவிட்டார்கள். பிறகு இரண்டாவது தடவை வந்த சட்டத்திலேதான் பல ஓட்டைகள் விழுந்துவிட்டன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் கடைசியிலே பேசிக்கொள்ளுங்கள். நான் அவையை நடத்த வேண்டும். (குறுக்கீடு) சட்ட அமைச்சர் உட்காருங்கள். திரு. ரா. ஈஸ்வரன், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அரசமைப்புச் சட்டம் தொடர்புடையது. அதனால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அரசமைப்புச் சட்டம் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இது Constitution அதாவது அரசமைப்புச் சட்டத்தின் 73, 74-வது பிரிவுகளைத் திருத்துகின்ற அடிப்படையில்தான் இந்த பஞ்சாயத்து ராஜ் வருகிறது. 3 அடுக்கு முறை; இந்த 3 அடுக்கு முறையை ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த காலத்திலும், அதற்குப் பிறகு பெருமதிப்பிற்குரிய நரசிம்மராவ் கொண்டு வந்த காலத்திலும், 3 அடுக்கு முறை இருந்தது. அதனால் இந்த 3 அடுக்கு முறையைக் கொண்டு வந்ததே ராஜீவ் காந்தி அவர்கள்தான்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொண்டு வந்தாலும் சில திருத்தங்களை மாநில அரசு செய்யலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. ஆகையினால் நீங்கள் செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் அறிகிறேன். அது உள்ளாட்சித் துறை அமைச்சருக்கே நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதில் நான் குறுக்கிடவேண்டாம் என்று இருந்தேன். எனக்கே தெரியும் என்று அவர் தெரிவித்துவிட்டார். எவை எவற்றில் மாநில அரசாங்கத்திற்கு உரிய வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்படலாம் என்று இருக்கிறதோ, அது வரையில் இந்த அரசு செய்து இருக்கிறது.



**திரு. ரா. ஈஸ்வரன்:** அடுத்து, "பொதுப் பணித் துறையை பொறுத்த அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்; ஒரு குளத்தைத் தேர்வு செய்யலாம்" என்று சொன்னீர்கள். நாங்களும் உங்கள் பேச்சை வைத்து தொகுதியிலே இந்த ஆண்டுக்கு இந்தக் குளம் அடுத்த ஆண்டுக்கு அந்தக் குளம் என்று எழுதிக் கொடுத்துவிட்டோம் உங்கள் வாக்குறுதியை வைத்து. ஆனால், 'இப்படி எங்களை ஏமாற்றிவிட்டீர்களே' என்று தொகுதியிலே சொல்கிறார்கள். அதனால் அதற்கு என்ன காரணம் என்று நீங்கள் விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும். நாங்கள், நீங்கள் சொன்னதை வைத்து தொகுதியிலே எழுதிக்கொடுத்து விட்டோம். ஆனால் இதுவரைக்கும் வேலை நடக்கவில்லை. இப்போது பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அது உண்மையா?

பிற்பகல் 1-35

அடுத்து, முதல்வர் அவர்கள் நெற்கட்டும்சேவலிலே பூலித்தேவன் கட்டடத் திறப்பு விழாவிற்கு வந்திருந்தபோது உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் பற்றி அறிவிப்புச் செய்து, இதுவரைக்கும் 23 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், அந்தப் பணி மந்தமாக இருக்கிறது.

அதேபோல, செண்பகவல்லி அணைத் திட்டம்; சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கேரள அரசுக்கு செண்பகவல்லி அணையின் உடைப்பை அடைப்பதற்காக 10 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்து 5 இலட்ச ரூபாய் தமிழக அரசினால் முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் அந்த உடைப்பை அடைப்பதற்கு தமிழ்நாடு அரசு என்ன முயற்சியை எடுத்திருக்கிறது? இதுவரைக்கும் வேலை நடக்கவில்லை. நமக்கு நேரடியாக வரவேண்டிய தண்ணீர் கேரளாவிற்குப் போய்க்கொண்டிருக்கிறது. அது அணை இல்லை. ஓர் உடைப்பு, சாதாரண உடைப்புத்தான். அந்த உடைப்பை அடைத்தால் சுமார் 20,000 ஏக்கர் பாசனம் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகையினாலே, இந்தக் காலதாமதத்திற்கு என்ன காரணம்? மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக அந்தத் துறையிலே எங்கெங்கேயெல்லாம் திட்டங்கள் இருக்கின்றன என்று வாய்மொழியாகத் திறமையாகச் சொல்கிறார்கள். ஆனால் இது ஒரு சாதாரண காரியம். இதை அடைத்தால் அந்தப் பகுதி வளமான பகுதியாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வேகமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைத் துறையினுடைய Division ஆக எங்களுடைய பகுதியிலே ஒரு பெரிய Division-ஆக இருந்தது. அதை இரண்டாகப் பிரித்துக் கொடுத்தீர்கள். பிரித்துக் கொடுத்திருந்தாலும் இன்னும் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பலமுறை உண்ணாவிரதங்கள், பல முறை போராட்டங்கள் எல்லாம் நடத்தினோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அந்தப் பகுதிக்கு வந்திருந்தபோது நேரடியாக நான் மனு கொடுத்திருந்தேன். ஆகையினாலே, அந்த வேலைகளையெல்லாம் துரிதமாக நடத்திட வேண்டும்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேரில் போகிறபோது என்னையும் கலைஞரையும் அவ்வளவு பிரமாதமாகப் பாராட்டினார், ஈஸ்வரன். ஆனால், இங்கே வந்து படுமோசம் என்கிறார். எவ்வளவு பாலங்கள், எவ்வளவு சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று அவருக்கே தெரியும். மனசாட்சிக்கு விரோதமாகப் பேசக்கூடாது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சாலையைப்பற்றித்தான் குறிப்பிடுகிறேன். அரசுக்குக் கோரிக்கையாகவும் கொடுத்திருக்கிறேன், நேரடியாக. (மணியடிக்கப்பெற்றது) தபால் மூலமாகவும் கொடுத்திருக்கிறேன். உண்ணாவிரதம் இரண்டு தடவை இருந்திருக்கிறார்கள். சர்வகட்சியிலேயிருந்து Bus மறியலிலும் ஈடுபட்டு இருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சாலைக்காகத் தானே அவரைப் பாராட்டினீர்கள். அல்லது வேறு எதற்காகவும் அவரைப் பாராட்டினீர்களா?

**திரு. ரா. ஈஸ்வரன்:** அதாவது சாலையைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரவாயில்லை, பரவாயில்லை, சீக்கரம் பேசி முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** பாலமும், வேலைகளும் செய்து கொடுத்தீர்கள் என்பதற்காகத்தான் உங்களைப் பாராட்டினேன். அதனாலே மீண்டும் அந்த வேலையைச் செய்து கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன்.



அடுத்தது என்னுடைய தொகுதிப் பிரச்சினை. புளியங்குடி நகராட்சி பெரிய நகராட்சி; 60,000 மக்கள் இருக்கிறார்கள். அதற்கொரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். முதல்வர் அவர்களும், நீங்களும் அதை ஏற்று, செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, இன்றைக்கு அரசு பொது மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். General Hospital என்கிற பெரிய ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தேன். அங்கே மருந்து இல்லையென்று சொல்லி மருந்துகளை வெளியிலே வாங்குவதற்காக எழுதிக் கொடுக்கிறார்கள். நேற்றும் போயிருந்தேன், இன்று காலையிலும் போயிருந்தேன். தலைமையிடத்திலேயே மருந்து இல்லையென்று எழுதிக் கொடுக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அங்கே போயிருந்தபோது சில வார்டுகளில் பார்த்தேன். மோசமாக இருக்கிறது. நேற்று 3 மணி நேரம் அங்கேயே இருந்தேன். (குறுக்கீடு) ஜெனரல் ஆஸ்பத்திரி சென்னையிலேயே, தலைமையிடத்திலேயே இந்தமாதிரி இருக்கிறது. அங்கே சென்றிருந்தபோது, 4, 5 பேர்களிடம் கேட்டேன், தலைமையிடத்திலேயே மருந்துகள் இல்லையென்று எழுதிக் கொடுக்கிறார்கள். அப்புறம், சாதாரண மக்கள் போனால்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவல் வந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். தமிழகத்திலே இந்த ஆண்டு 100 கோடி ரூபாய்க்கு இலவசமாக மருந்து கொடுப்பதற்காக மருந்துகள் மருத்துவச் சேவைக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டன. நம்முடைய சென்னை பொது மருத்துவமனைக்கு மட்டும் 5 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான மருந்துகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. வேடிக்கை என்னவென்றால், நாங்கள் ஆட்சிக்கு வரும்போது 2000 பேர்தான் அங்கே வெளி நோயாளிகள் வந்தார்கள். ஆனால் இப்போது 6,000 பேர் வருகிறார்கள். அது மட்டுமல்ல, இருதய அறுவைச் சிகிச்சை போன்ற நோய்களுக்கெல்லாம் தென்னகத்திலேயிருந்து வருகிறார்கள். ஒரு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு வெளியிலே 2.50 இலட்சம் ரூபாய் ஆகிறது. நம்முடைய பொது மருத்துவமனையில் ஏழைகளுக்கு இலவசமாகச் செய்கிறார்கள். எனவே, இப்படி ஏராளமான கூட்டம் வருகின்ற காரணத்தினால்

எல்லா மருந்துகளும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இருந்தாலும் தேவைப்படுகின்ற அளவிற்கு நம்முடைய மருத்துவ சேவைக் கழகம் மருந்துகளை வாங்கிக்கொண்டிருக்கிறது. இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் குறையைச் சொன்னார்கள். அப்படிக் குறை இருக்குமானால் நாளைக்கே எல்லாவிதமான மருந்துகளும் அங்கே நிச்சயமாக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், நீங்கள் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** அரசினுடைய விழாக்கள் நடக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் சில இடங்களிலே இடம் பெறுவதில்லை. அரசுத் துறையில் எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்கள் அந்த விழாக்களிலேயும் கல்வெட்டுக்களிலேயும் நிச்சயமாக இருக்க வேண்டும். அமைச்சருடைய பெயர்கள் இருக்கின்றன. கலெக்டருடைய பெயர் இருக்கிறது. அப்படியிருக்கும்போது சட்டமன்ற உறுப்பினருடைய பெயர் மட்டும் விடுபட்டிருக்கின்றது. அதற்கு என்ன காரணம்? ஏன் என்றால் நீங்களே 1½ இலட்சம் வாக்குகள், 2½ இலட்சம் வாக்குகள் வாங்கியிருக்கிறீர்கள். நாங்களும் உங்களை மாதிரிதான் வாக்குகள் வாங்கியிருக்கிறோம். எங்களுடைய பெயர் மட்டும் இல்லாமல் போனால், அது புறக்கணிக்கிற மாதிரியான, தவறான நடவடிக்கையாக இருக்கிறது. அந்த மாதிரியான நிலைமைகள் இருந்தால்...

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 50 வாக்குகள் வித்தியாசத்திலே ஜெயித்தாலும், ஜெயித்தவர் ஜெயித்தவர்தான். உங்கள் பெயர் இல்லையென்றால் புகாரை என்னிடம் எழுதிக் கொடுங்கள். நான் அந்த அதிகாரியிடம், ஏன் பெயர் போடவில்லை என்று கேட்கிறேன். ஆகையினாலே 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று பேச வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் பேச்சைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** நான் ஏன் சொல்கிறேன் என்றால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரும் அமைச்சர்களின் பெயரோடு அந்தந்தத் துறையிலே விழாக்கள் நடக்கும்போது—சட்டமன்ற தொகுதி



உறுப்பினருடைய பெயர்—நிச்சயமாக இருக்க வேண்டும், அப்படி இல்லையென்றால் அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கண்டிப்பாக நீங்கள் ஒரு பரிந்துரையாவது கொடுக்க வேண்டும். நிச்சயமாக அந்தந்தத் தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் எந்த விழாக்களாக இருந்தாலும் இருக்க வேண்டும் என்று ஓர் அறிவுரையை வழங்க வேண்டும். அடுத்து போக்குவரத்துத் துறை...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர் இருக்க வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்துக் கிடையாது. ஆனால், பெயர் போட்டும் வராமல் இருக்கிறார்களே பெரியவர்கள், பல முறை; ஒரு முறை அல்ல, பல முறை; வராவிட்டாலும் அவர்களுடைய பெயரையும், போட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் நினைக்கிறாரா?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைக் கேட்கவில்லை. ஈஸ்வரனைக் கேட்கிறார், அவர் பதில் சொல்லட்டும்.

**திரு. மு. அப்பாவு:** கலெக்டர் பெயர் போட்டும் கலெக்டர் வரவில்லை. மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா வந்திருக்கிறார்; மற்றும் துறை அமைச்சர் சுரேஷ் ராசன் வந்திருக்கிறார். இரண்டு அமைச்சர்களும் வந்திருந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே வரவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஏதோ ஒரு முறை தவறுவது என்பது எல்லோருக்கும் உண்டு. நானும் ஒரு நாள் வராமல் போகலாம்; நீங்களும் ஒரு நாள் வராமல் போகலாம். ஆனால் தொடர்ந்தே வராமல் இருக்கிறார்களே, அவர்களுடைய பெயரையும் போட வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

67. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-I) இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

68. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-II) பதினான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

69. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-III) பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

70. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-IV) மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

71. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-I) இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

72. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-II) பதினாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)





73. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-III) ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

74. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-II) பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

75. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-III) ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-